பக்கங்கள்: இருபத்தெட்டு

# உதயன்


விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஐப்பசி 08 செவ்வாய்க்கிழமை (25.10.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 333



14 விருதுகளுக்குள் விஷம்



23 துருக்கி பூகம்பதில் 200 பேரின் உடல் மீட்பு



25 தொடரும் மரணங்கள்

## காணிப்பதிவை நிறுத்தக் கோரி மேல் நீதிமன்றில் நேற்று மனு

### கூட்டமைப்பு சார்பில் சுமந்திரன் தாக்கல்

கொழும்பு, ஒக்ரோபர் 25

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள காணிகளின் உரிமையாளர்கள் பற்றிய விவரங்களை இரண்டு மாதங்களில் கிராமசேவை உத்தியோகத்தர்கள் அல்லது உதவி அரச அதிபர்களிடம் பதிவு செய்துகொள்ள வேண்டும் என காணிப்பதிவாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைக்கு எதிராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று மேல் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன் இந்த மனுவை சட்டத்தரணி மோகன் பாலேந்திராவின் மூலம் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்திருக்கிறார்.

காணி பதிவாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையை உடன் ரத்து செய்க என்றும், குறித்த மாகாணங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் காணிப் பதிவு நடவடிக்கைகளுக்கு இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்குக என்றும் அவர் அந்த மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், எந்தக் காரணமும் இன்றி இரண்டு மாதங்களில் காணிகளைப் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்றும், அவ்வாறு பதிவு செய்யப்படாவிட்டால் அதன் விளைவு என்ன என்பதுவும் காணிப் பதிவாளரின் சுற்றறிக்கையில் காணப்படவில்லை என்பதை மனுவில் தெரிவித்துள்ள சுமந்திரன் எம்.பி., இதன் காரணமாக குறித்த மாகாணங்களிலுள்ள மக்கள் குழப்பமடைந்துள்ளனர் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, வடக்கு, கிழக்கில் உள்ள காணிகள் சம்பந்தமான பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுக் கொடுக்கும் அதிகாரத்தை பிரதேச ரீதியாக நியமிக்கப்படவுள்ள விசாரணைக் குழுவினிடத்திலும், விசேட மத்தியஸ்த சபையிடத்திலும் காணிப் பதிவாளர் நாயகம் சுற்றறிக்கை ஊடாக வழங்கியுள்ளார் என்பதை அம்மனுவில் குறிப்பிட்டுள்ள சுமந்திரன், அது சட்டத்திற்கு முரணானது என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்தக் குழுக்களின் கீழ் பொலிஸாரின்

பக் 27

## ஜனாதிபதி நேற்று ஆஸி. பயணம்

கொழும்பு, ஒக்.25

பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான இலங்கைத் தூதுக்குழுவினர் நேற்றுக் காலை ஆஸ்திரேலியா புறப்பட்டுச் சென்றனர்.

எதிர்வரும் 28 முதல் 30 வரை ஆஸ்திரேலியாவின் பேர்த் நகரில் நடைபெறவிருக்கும் அரச தலைவர்கள் மாநாட்டில் 54 அங்கத்துவ நாடுகளின் அரச் தலைவர்களும், சுமார் 3ஆயிரம் பிரதிநிதிகளும் கலந்துகொள்வார்கள்.

1949 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பொதுநலவாயப் பேரவை ஒரு சர்வதேச அமைப்பு என்ற வகையில் தனித்துவமான ஓர் அமைப்பாகும். அதன் அங்கத்துவம் உலகின் 6 பெரும் கண்டங்களுக்கு விரிந்து பரந்துள்ள அதே நேரத்தில், அனைத்து முக்கிய பல மதங்களும், பல இனங்களும் இதில் பிரதிநிதித்துவம் வகிக்கின்றன. அபிவிருத்தியடைகின்ற நாடுகளைப்போன்று அபிவிருத்தியடைந்த நாடுகள்

பக் 27

## கூட்டமைப்பை ஐ.நா. செயலர் சந்தித்துப் பேசுவது அபத்தம்

### சீறுகிறார் விமல் வீரவன்ஸ

கொழும்பு, ஒக்.25

ஐக்கிய நாடுகள் செயலாளர் பான் கீ -மூன் உலக நாடுகள் தனக்கு வழங்கிய அந்தஸ்தைத் தவறாகப் பயன்படுத்த முயல்கிறார். உலக நாடுகளின் தலைவர்களைச் சந்திக்கும் ஐ.நா. சபை, அரசியல் கட்சியொன்றைச் சந்திக்குமாயின் தமிழ் இனவாத அரசியலுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வங்குரோத்து நிலைமைக்கு அது சென்று விட்டதாகவே கருதவேண்டியிருக்கிறது.

-இவ்வாறு நேற்றுக் குற்றஞ்சாட்டினார் பொறியியல் மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் விமல் வீரவன்ஸ.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமெரிக்காவுக்கான பயணமொன்றை மேற்கொண்டு ஐ.நா.பொதுச்

பக் 27

## பிரிட்டிஷ் பிரதமரை மஹிந்த ஆஸியில் சந்தித்துப் பேச்சு

### போர்க் குற்றம் பற்றி விளக்குவார்

கொழும்பு, ஒக்.24

பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஆஸ்திரேலியா சென்றுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இலங்கை மீது சுமத்தப்பட்டுள்ள போர்க் குற்றச்சாட்டு விவகாரம் தொடர்பாக பிரிட்டிஷ் பிரதமருடன் பேச்சு நடத்துவார் என அலரிமாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கை மீது சுமத்தப்பட்டுள்ள போர்க் குற்றச்சாட்டுகள் அடிப்படைத் தன்மையற்றவை என்றும், அதனைத் தெளிவுபடுத்தும் வகையிலான ஆவணங்களை ஜனாதிபதி பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கெமரூனிடம் கையளிப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பிரிட்டிஷ் பிரதமராக டேவிட் கெமரூன் பதவியேற்ற பின்னர் இலங்கை ஜனாதிபதியைச் சந்திப்பது

பக் 27

## ஜனாதிபதியும் அவரது சகோதரர்களுமே பொருளாதார முடிவுகளை எடுக்கின்றனர்

### அமெரிக்க 'இரகசிய' தபால் 'விக்கிலீக்ஸில்' கசிவு

ஒரு குறிப்பிட்ட நம்பிக்கைக்கு உரிய பொருளாதார ஆலோசகர்களின் ஆலோசனைகளை உள்ளடக்கி, இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், அவரது சகோதரர்களுமே உண்மையாக பொருளாதார முடிவுகளை எடுக்கிறார்கள் என கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் வோஷிங்ரனுக்கு அனுப்பிய கேபிள் தபால் 'விக்கிலீக்ஸில்' கசிந்துள்ளது.

இவர்களுடன் தொடர்புகொண்ட வர்த்தகத் தலைவர்களும், புத்திஜீவிகளும் இந்தப் பொருளாதார முடிவுகளை சரியானவை என ஏற்றுக்கொள்கிறார்கள். பின்னர் இவை இடைச்செருகல் புகமுடியாத உறுதியான முடிவுகளாகி விடுகின்றன என்றும் மேற்படி தூதரகம் அதில் சுட்டிக்காட்டியுள்ளது.

இறுக்கமான ஒரு வட்டத்தின் மூலமாகவே கேந்திர முடிவு எடுக்கப்படுகிறது. பெரும்பாலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவாலும், அவரது இரு சகோதரர்களாலுமே கேந்திர முடிவு எடுக்கப்படுகிறது. தெளிவான ஒரு நிலைப்பாட்டுக்கு அப்பால் முடிவு எடுக்கப்படுகிறது என்றும் அதில் அது விளக்கியுள்ளது.

இலங்கையில் பொருளாதாரம் சம்பந்தப்பட்ட முடிவுகள் எடுப்பதற்

பக் 27

## தீபாவளி வியாபாரத்துக்கு காத்திருந்த குடாநாட்டு வர்த்தகர்கள் ஏமாற்றம்

### கொள்வனவு செய்த பொருள்கள் தேங்கி நஷ்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.25

பண்டிகைக் காலங்களில் யாழ். குடாநாட்டு வர்த்தகர்களுக்கு வியாபாரம் குறைவில்லாது நடக்கும். கடை நிறைய பொருள்களை வாங்கி அடுக்கி வைத்திருந்தாலும் அவை விற்றுத் தீர்ந்து விடும். அவர்கள் நல்ல இலாபத்தையும் ஈட்டி விடுவார்கள்.

ஆனால் இம்முறை தீபாவளித் திருநாளுக்கான உடுபுடைவைகள் வியாபாரம் ஒரே மந்தம்.குறிப்பிட்ட சில வர்த்தக நிலையங்களைத் தவிர அனேகமானவை காய்ந்து வெறிச்சோடியே காணப்பட்டன. சில

பக் 27

## நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை இருவாரங்களில்; பாதுகாப்புத் தரப்பினர் விமர்சிக்கப்படலாமென நம்பிக்கை

கொழும்பு, ஒக்.25

எதிர்வரும் இரு வாரங்களுக்குள் வெளியிடப்படவுள்ள நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் முப்படையினர் மற்றும் பாதுகாப்புத் தரப்பினருக்கு எதிராகக் கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன என்று நம்பகரமாகத் தெரியவருகிறது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை இன்னும் இரண்டு வாரங்களுக்குள் வெளியிடப்படும் என நல்லிணக்க ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அறிக்கை தயாரிப்பதில் பூர்வாங்க நடவடிக்கைகள் யாவும் நிறைவுபெற்றுள்ளன என்றும், அறிக்கை மீள்வாசிப்புக்காக வழங்கப்பட்டுள்ளது என்றும் அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வன்னியில் நடைபெற்ற போர் மற்றும் கடந்த கால்ங்களில் இடம்பெற்ற கசப்பான சம்பவங்கள் தொடர்பாக ஆராய்வதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இந்த சுயாதீன ஆணைக்குழுவை நியமித்தார். கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் தேசிய நல்லிணக்க ஆணைக்குழு எனப் பெயரும் இடப்பட்டது.

நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து சுமார் 18 மாதங்கள் வரை இந்தக் குழு பல்வேறு

பக் 27

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




வானம் மேகமூட்டத்துடன் காணப்படுவதுடன் அவ்வப்போது மழைபெய்யும் சாத்தியம்

### தடைசெய்யப்பட்ட கடற்றொழில் உபகரணங்களுக்குத் தடை

# குருநகர் இறங்குதுறையில் தரித்து நின்ற 50 றோலர் படகுகளில் திடீர்ச் சோதனை

## நேற்றைய நடவடிக்கையில் மீனவர் எவரும் கைதாகவில்லை





யாழ்ப்பாணம், ஒக். 24

தடைசெய்யப்பட்ட கடற்றொழில் உபகரணங்களைப் பயன்படுத்தி றோலர் படகில் தொழில் செய்பவர்களை கைது செய்வதற்கான திடீர் சோதனை நடவடிக்கை ஒன்று குருநகர் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள், யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சுமார் 30 இற்கும் மேற்பட்டவர்கள் இணைந்து இந்த திடீர்ச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

குருநகர் இறங்கு துறைப் பகுதியில் இந்த சோதனை நடவடிக்கை நேற்றுக் காலை 9 மணிக்கு ஆரம்பமானது. குருநகர் இறங்கு துறையில் தரித்து நின்ற சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட றோலர் படகுகளில் ஏறி இந்தச் சோதனை மேற்கொள்ளப்பட்டது. எனினும் கடற்றொழிலாளி எவரும் இதன் போது கைது செய்யப்படவில்லை.

நேற்றுக் காலை குருநகர்ப் பகுதியில் சோதனை நடவடிக்கைக்காக சென்றவர்களை சூழ நின்று குருநகர்ப் பகுதி றோலர் படகுத் தொழிலாளர்கள் தமது பக்க நிலைப்பாட்டை ஆவேசமாக வெளிப்படுத்தினார்கள்.

இந்திய மீனவர்கள் எமது பகுதியில் அத்துமீறி நுழைகின்றனர். எமது கடல் உணவுகளை அள்ளிச் செல்கின்றனர். இந்திய மீனவர்களது றோலர் படகுகளினால் எமது பகுதியில் சிறு தொழில் முறைகள் பாதிக்கப்படுகின்றன. கிழமையில் மூன்று தினங்கள் இந்திய மீனவர்களது றோலர்கள் வருகின்றன. அந்த தினங்களிலேயே நாம் றோலர் படகு பயன்படுத்தி தொழில் செய்து வருகின்றோம்.

முதலில் இந்திய மீனவர்களது வருகையை நிறுத்த நடவடிக்கை எடுங்கள் பின்னர் எம்மை கட்டுப்படுத்துங்கள் அதுதான் நியாயமானது என்று குருநகர் பகுதி தொழிலாளர்கள் சோதனை நடவடிக்கைக்கு வந்தவர்களிடம் தெரிவித்தனர். குருநகரில் றோலர் படகு தொழிலை நம்பி ஐந்தாயிரம் குடும்பங்கள் உள்ளன என்றும் மீனவர்கள் குறிப்பிட்டனர்.

யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் வி.இந்திரன் தலைமையில் பொலிஸ் பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. அந்தப் பிரிவே குருநகரில் நேற்று திடீர் நடவடிக்கையை மேற்கொண்டது.

தடைசெய்யப்பட்ட உபகரணங்களை றோலர் படகில் பயன்படுத்தி கடற்றொழில் செய்பவர்களை கைது செய்யும் நடவடிக்கை தொடர்ச்சியா முன்னெடுக்கப்படவுள்ளதாக உயர் பொலிஸ் அதிகாரி இந்திரன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஆர். ரவீந்திரன், யாழ். மாவட்ட கடற்றொழில் பரிசோதகர் ரமேஷ் கண்ணா உள்ளிட்டவர்கள் நேற்றைய சோதனை நடவடிக்கையின் போது பங்கேற்றிருந்தனர்.

(ஒ-14)

# நன்னடத்தை அலுவலரிடம் ஒப்படைத்த சிறுவன் அநாதரவான நிலையில் வீதியில்

## பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்

கிளிநொச்சி,ஒக்.25

யாழ்ப்பாணத்தில் உள்ள பதிவு பெற்ற நன்னடத்தை பாடசாலை ஒன்றில் ஒப்படைக்குமாறு கிளிநொச்சி கரைச்சி நன்னடத்தை உத்தியோகத்தரிடம் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றினால் ஒப்படைக்கப்பட்ட சிறுவன் மூன்று நாள்களின் பின்னர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது

கிளிநொச்சிப் பகுதியில் பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பாக பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்ட சிறுவன் ஒருவனை கடந்த 18 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிவான் பெ.சிவகுமார் குறித்த சிறுவனை யாழ்ப்பாணம் அரியாலையில் உள்ள சான்று பெற்ற நன்னடத்தைப் பாடசாலையில் ஒப்படைக்குமாறு கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக நன்னடத்தை உத்தியோகத்தருக்கு உத்தர விட்டிருந்தார்.

இந்த நிலையில் குறித்த சிறுவன் கடந்த 20ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 8.00 மணியளவில் கிளிநொச்சி ஏ.9 வீதியில் அனாதரவாக விடப்பட்டிருந்த நிலையில் பொது மக்கள் வழங்கிய தகவலையடுத்து கிளிநொச்சிப் பொலிஸார் குறித்த சிறுவனைக் கைது செய்து மறுநாள் வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தினர். குறித்த சிறுவனை மீளவும் நன்னடத்தைப் பாடசாலையில் ஒப்படைக்குமாறு மன்றினால் உத்தரவிடப்பட்டதுடன், சிறுவன் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பொறுப்பற்ற விதத்தில் நடந்து கொண்டுள்ளதாக நீதிவான் அவர்களை எச்சரித்துள்ளார்.

பிரஸ்தாப சிறுவன் கடந்த 18ஆம் திகதி நீதிமன்ற உத்தரவின்படி நன்னடத்தைப் பாடசலையில் சேர்க்கப்படாமல் விட்டமை, அல்லது தப்பிச் சென்றமை தொடர்பாக மன்றுக்கோ அல்லது பொலிஸாருக்கோ நாள்கள் கடந்த நிலையிலும் தெரியப்படுத்தப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

(ஒ-06)

# கிளிநொச்சியில் இன்று செவ்வாய்க்கிழமை சைவ சமயப் பரீட்சை

கிளிநொச்சி, ஒக்.25

கிளிநொச்சி திருநெறிக்கழக ஏற்பாட்டில் கிளிநொச்சி கல்வி வலய பாடசாலைகளில் தரம் 6, 9, 11, 12, 13 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கான இந்து சமயம், இந்துநாகரிகம் ஆகிய பாடங்களுக்கான பரீட்சைகள் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது.

இந்தப் பரீட்சைகள் மாணவர்கள் கல்வி பயிலும் பாடசாலைகளிலே இடம்பெறும் என்று கிளிநொச்சி திருநெறிக் கழக செயலாளர் அ.சிவஞானசுந்தரம் அறிவித்துள்ளார்.(ஒ-323)

# நன்னீர் மீன்வளர்ப்பு; நெடுந்தீவில் குழு ஆராய்வு

யாழ்ப்பாணம், ஒக்.25

நெடுந்தீவு நன்னீர் மீன் வளர்ப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து ஆராயப்பட்டுள்ளது.

கொழும்பு நீரியல் வளத் துறைத் திணைக்கள உத்தியோகத்தர்கள் இதற்காகக் கடந்த வாரம் நெடுந்தீவுக்குச் சென்று இங்குள்ள குளங்களைப் பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.

நன்னீர் மீன்வளர்ப்புத் தொடர்பாக மாகாண ஆளுநரின் ஆலோசனைக்கு இணங்க குளங்களைப் பார்வையிட்ட அதிகாரிகள் இங்குள்ள இரண்டு குளங்களில் மீன் வளர்க்கக் கூடிய சாத்தியங்கள் உள்ளதாகவும், இது விடயம் குறித்து நன்கு பரிசீலனை செய்து மீன்வளர்ப்புக்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

(த-7)

# நிகழ்வுகள்

**விவசாயிகள் குழுக் கூட்டம்**

நல்லூர் பிரதேச விவசாயிகள் குழுக்கூட்டம் இன்று மு.ப 10 மணிக்கு நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும். இந்தக் கூட்டத்தில் எலிக்காய்ச்சல் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கும் இடம்பெறும். நல்லூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.சிவசங்கர் எலிக்காய்ச்சல் தொடர்பான கருத்துரையை வழங்கவுள்ளார் விவசாயிகளும் அங்கத்தவர்களும் இதில் பங்குபற்றுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (ஒ-7)

**பரிசளிப்பு விழா**

மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு வித்தியாலயத்தின் சுப்பையா அரங்கில் அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெறும்.நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.போதனா வைத்தியசாலையின் கண் சிகிச்சைப் பிரிவைச் சேர்ந்த வைத்திய கலாநிதி செல்வி மகேஸ்வரிதேவி சரவணமுத்து கலந்து கொள்வார்.(ஒ-207)

**தடுப்பூசி வழங்கும் நிகழ்வு**

வேலணைப் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவினால் வேலணைப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பொதுமக்களுக்கு இன்று தடுப்பூசி போடப்படவுள்ளது.தேநீர்சாலைகள், பலசரக்குக்கடைகளின் உரிமையாளர்கள், சந்தைகளில் தொழில் செய்யும் தொழிலாளர்கள் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-313)

**அரச இலக்கிய விழா**

அரச இலக்கிய விழா இன்று குருநாகல் மகாவெல மண்டபத்தில் கலை,கலாசார அலுவல்கள் அமைச்சர் வி.பி. ஏக்கநாயக்க தலைமையில் நடைபெறவுள்ளது.நிகழ்வில் பிரதமர் டி.எம். ஜயரத்ன பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (ஒ-319,313)

**ஊக்குவிப்பு கருத்தமர்வு**

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு இலங்கை தேசிய நூலக ஆவணங்கள் சேவைகள் சபையினரால் வாசிப்பு தொடர்பான ஊக்குவிப்பு கருத்தமர்வு இன்று காலை 9 மணிக்கு கொழும்பு கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

**அதிபர்கள் கூட்டம்**

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் இன்று நண்பகல் 12 மணிக்கு வலய கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

**முதியோர், சிறுவர் தின விழா**

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகம் நடத்தும் சர்வதேச முதியோர் , சிறுவர் தின விழா இன்று முற்பகல் 9 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபதில் நடைபெறவுள்ளது.பிரதேச செயலர் திருமதி தே.பாபு தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக திருமதி இமெல்டா சுகுமார் கலந்துகொள்வார்.(ஒ-60-313)

**ரலன்ற் சேச் போட்டி**

உடுவில் மகளிர் கல்லூரியின் மேலைத்தேய ஆங்கில துறையினரால் யாழ்.மாவட்டப்பாடசாலை அணிகளுக்கு இடையே வருடாந்தம் வை.எம்.சி.ஏ.நிறுவனத்தின் ஆதரவுடன் நடத்தப்பட்ட ''ரலன்ற் சேச்'' போட்டியின் இறுதி நிகழ்வுகள் இன்று பிற்பகல் 3.00 மணிக்கு உடுவில் கல்லூரி அதிபர் திருமதி சிராணிமில்ஸ் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-86)

**மாணவர் கௌரவிப்பு**

கல்வியங்காடு இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் பாடசாலையும் இணைந்து நடத்தும் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெறவுள்ளது.நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற கிராம அலுவலர் லயன் சி.லட்சுமிகாந்தன் கலந்துகொள்வார்.

(ஒ-86)

# தந்தை யார் என அறிய டி.என்.ஏ. சோதனை நடத்த இருக்கையில் குழந்தை திடீர்ச் சாவு

## காரணம் அறிய விசாரணைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 25

தந்தை யார் என்பதை அறிவதற்காக மரபணுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட இருந்த 6 மாதக் குழந்தை ஒன்று திடீரென யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழந்தமை குறித்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கைதடி அரச சிறுவர் இல்லத்தில் பராமரிக்கப்பட்டு வந்த குழந்தை நோய்வாய்ப்பட்ட நிலையில் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த போது உயிரிழந்துள்ளது.

இந்தக் குழந்தையின் தந்தையை அடையாளம் காண்பதற்காக டி.என்.ஏ. எனப்படும் மரபணுச் சோதனைக்கான கலங்கள் குழந்தையிடம் இருந்தும் சந்தேக நபரிடம் இருந்தும் நேற்று திங்கட்கிழமை எடுக்கப்பட இருந்த நிலையில் கடந்த சனிக்கிழமை திடீரென உயிரிழந்தது.

அச்சுவேலியைச் சேர்ந்த 21 வயது திருமணமாகாத இளம் பெண் இந்தக் குழந்தையைப் பெற்றெடுத்தார். எனினும் அவர் அக்குழந்தையைப் பராமரிப்பதற்கு விரும்பம் தெரிவிக்காததன் காரணத்தால் நீதிமன்ற உத்தரவின்படி குழந்தை கைதடி அரசினர் காப்பகத்தில் சேர்க்கப்பட்டது.

யாழ். போதனா வைத்தியசாலையில் சிற்றூழியராகப் பணியாற்றும் நபர் ஒருவரே இந்தக் குழந்தையின் தந்தை என்று அதன் தாய் கூறுகிறார். ஆனால், குறித்த சிற்றூழியர் அதனை அடியோடு மறுக்கிறார். இதனை அடுத்தே சந்தேகநபர் குழந்தையின் தந்தையா என்பதைக் கண்டறிய மரபணுப் பரிசோதனை நடத்தும்படி நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

காதலித்து, கர்ப்பமாக்கிய பின்னர் ஏமாற்றிக் கைவிட்டார் என்று சந்தேகநபருக்கு எதிராக நன்னடத்தை அதிகாரிகளின் உதவியுடன் அச்சுவேலிப் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

குழந்தை திடீரென நோய்வாய்ப்பட்டு எப்படி இறந்தது என்பது தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குழந்தையின் சடலம் போதனா வைத்தியசாலைப் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. அதன் உடற்கூறுப் பரிசோதனைக்கு முன்னர் விசாரணைகளை வைத்தியசாலை சட்ட மருத்துவ அதிகாரி மேற்கொண்டு வருகிறார். (உ-4)

# போசாக்கு கண்காட்சி இன்று

வலி.வடக்கு, ஒக்.25

உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் நடைபெறும் போசாக்குக் கண்காட்சி மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை நடைபெறவுள்ளது.

உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி அ.ஜெயக்குமரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் கலந்து கொள்வார். (த-86)

# குருநாகலில் பஸ்கள் விபத்து; 8 சிறுவர் உட்பட 96 பேர் காயம்

கொழும்பு, ஒக்.25

குருநாகல் - கொக்கரெல்ல பிரதான வீதியின் கரங்வெவ நெஷனல்வத்த பிரதேசத்தில் இரண்டு பஸ்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டதில் 8 சிறுவர்கள் உட்பட 96 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இந்த விபத்து நேற்றுப் பகல் 2.45 மணிக்கு இடம்பெற்றது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இந்த விபத்தில் 8 சிறுவர்கள் உட்பட 96 பேர் காயமடைந்துள்ளனர். இவர்களில் 40 பேர் பொல்கொல்ல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். ஏனைய 56 பேரும் குருநாகல் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

ஆரம்ப கட்ட சிகிச்சையின் பின்னர் சிலர் வீடுகளுக்கு சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர்களில் மூவரது நிலைமை கவலைக்கிடமாக இருக்கிறது எனப் பொல்கொல்ல வைத்தியசாலையின் டாக்டர் கே.கே.வீரக்கொடி தெரிவித்தார்.

இரண்டு பஸ்களும் அதிக வேகத்துடன் சென்று ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டதாலேயே இந்த விபத்து நேர்ந்தது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்கரெல்ல பொலிஸார் மேற்கொண்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (சி)

# உடுப்பிட்டி இராஜ கிராமத்தில் 5 வீடுகள் வைபவ ரீதியாக நேற்றுக் கையளிப்பு

## நிகழ்வில் கட்டளைத் தளபதி ஹத்துருசிங்க



உடுப்பிட்டி, ஒக். 25

வடமராட்சியில் உடுப்பிட்டி இராஜ கிராமத்தில் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான 'கபிற்நெற்' நிறுவனத்தின் பூரண அனுசரணையுடன் இராணுவத்தின் 52ஆவது பிரிகேடியர் 19ஆவது படைப்பிரிவினரால் நிர்மாணிக்கப்பட்ட 5 வீடுகள் நேற்று வைபவரீதியாக பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

நேற்றுக்காலை 9.30 மணிக்கு நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதிகளாக யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க, 52 ஆவது பிரிகேட்டின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் ஜீ.ஏ. சுதசிங்க, 52 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் டிகிரி திஸ்ஸ நாயக்க உட்படபலர் கலந்துகொண்டு சமயாசார முறைப்படி பயனாளிகளிடம் வீடுகளைக் கையளித்தனர்.(ஒ-10-319)

# யூனியன் கல்லூரியில் திருடர்கள் கைவரிசை

யாழ்ப்பாணம், ஒக்.25

அதிபர் ஓய்வு பெறுவதற்கு மூன்று நாள்கள் இருக்கையில் அதிபர் அறையில் திருடர்கள் புகுந்து அட்டகாசம் செய்துவிட்டு தப்பிச் சென்றதாகச் செய்யப்பட்ட முறைப்பாடு குறித்து தெல்லிப்பழைப் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை சந்தியில் பாடசாலைக்கு முன்பாக இராணுவக் காவலரண் உள்ளது.

இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலையின் அதிபர் அறையினுள் நுழைந்த திருடர்கள் அலுவலகத்தில் இருந்த ஆவணங்களைச் சிந்தியதுடன் அங்கிருந்த படம் ஒன்றையும் கிழித்தெறிந்துள்ளனர்.

தெல்லிப்பழை பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டைத் தொடர்ந்து பொலிஸார் அங்கு சென்று பார்த்த வேளை அலுவலகக் கதவு பூட்டப்பட்டிருந்தது. அவ்வாறெனில் திருடர்கள் எவ்வாறு உள்நுழைந்தனர் என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இரவுக் காவலாளி பகல் நேரத்தில் கடமையாற்றுவதால் இரவுக் காவல் கடமையில் ஈடுபடுவதில்லையென்ற தகவலும் தற்போது வெளிவந்துள்ளது.

தெல்லிப்பழை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-86)

521 ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில்

# மாணவருக்கு நிதியுதவி வழங்கும் நிகழ்வு நேற்று நெல்லியடி ம.ம. வித்தியாலயத்தில்

நெல்லியடி,ஒக்.25

வடமராட்சி பிரதேசத்துக்குட்பட்ட வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் மாணவர்களுக்கான நிதி உதவி வழங்கும் நிகழ்வு 521ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் நேற்று முற்பகல் 11 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

521ஆவது படைப்பிரிவின் கட்டளைத்தளபதி பிரிகேடியர் டிகிரி திஸநாயக்க தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க கலந்து கொண்டு மாணவர்களுக்கான உதவித் தொகையை வழங்கினார். தொடர்ந்து பாடசாலையின் நூலகத்துக்காக ஒரு தொகுதி நூல்களையும் கட்டளைத் தளபதி அதிபரிடம் வழங்கியதுடன் விளையாட்டு உபகரணங்களும் கையளிக்கப்பட்டன. (ஒ-10-319)

# பல்கலை மாணவர் மீது கிளிநொச்சியில் தாக்கு

## படுகாயத்துடன் யாழ்.வைத்தியசாலையில்



யாழ்ப்பாணம், ஒக்.25

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு கிளிநொச்சி, பூநகரி வீதியில் வைத்து இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்டுப் படுகாயமடைந்தார். மேலதிக சிகிச்சைக்காக நேற்று அவர் கிளிநொச்சியில் இருந்து யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

சம்பவத்தில் காயமடைந்தவர் பூநகரியைச் சேர்ந்த இ.கவிராஜன் (வயது - 26) ஆவார். இவர் யாழ்.பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தின் இறுதி வருட மாணவன்.

நேற்றுமுன்தினம் இரவு உறவினரின் நிகழ்வு ஒன்றில் கலந்துவிட்டு கிளிநொச்சியில் இருந்து பூநகரியில் உள்ள தனது வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் திரும்பிக் கொண்டிருந்த போதுதான் தாக்கப்பட்டார் என்று கவிராஜன் உதயனுக்குத் தெரிவித்தார்.

''ஓட்டோ ஒன்றில் பின் தொடர்ந்துவந்த 4 பேர் என்னை வழிமறித்து கூரிய கல்லால் தலையில் தாக்கினர். அவர்களிடம் இருந்து பறித்துக் கொண்டு நான் ஓடியதும், அவர்கள் என்னை விட்டுத் தப்பிச் சென்றனர்.'' என்றார் அவர்.

காயமடைந்த அவர் பின்னர் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (உ-10)

# நல்வாழ்த்துகள் நான் சொல்வேன்

தமிழகத்தில் கடந்த வாரம் நடந்த தேர்தலில் சென்னை மாநகரத்தின் புதிய மேயராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் சைதை துரைசாமிக்கு கொழும்பு மாநகரத்தின் புதிய மேயர் ஏ.ஜே.எம்.முஸம்மில் வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பி வைத்திருக்கின்றார்.

சென்னையின் புதிய மேயராக சைதை துரைசாமி இன்று செவ்வாய்க்கிழமை பதவியேற்க இருக்கையில் நேற்று இந்த வாழ்த்துச் செய்தியை முஸம்மில் அனுப்பி வைத்திருக்கின்றார்.

அந்த வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

நமது இலங்கைக்கு அருகில் உள்ள இந்திய மாநிலமான தமிழகத்தின் தலைநகர் சென்னையின் புதிய மேயராக நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றமையையிட்டு இலங்கையின் தலைநகர் கொழும்பின் புதிய மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

நாம் இருவரும் ஒரே கால கட்டத்தில் இந்தப் பதவிகளைப் பொறுப்பேற்கிறோம் என்பது குறிப்பிடத்தக்க ஒன்று.

-இப்படித் தமது வாழ்த்துச் செய்தியில் கொழும்பு மேயர் ஏ.ஜே.எம்.முஸம்மில் தெரிவித்திருக்கிறார்.

# போராட்டத்தைக் கைவிடுமாறு மாணவர்களிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.25

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் தமது கல்விப் புறக்கணிப்புப் போராட்டத்தை கைவிட்டு வகுப்புக்களுக்குத் திரும்ப வேண்டும் என அரசியல் கட்சிகள் மற்றும் பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன. இது குறித்துப் பரிசீலனை செய்து முடிவெடுப்பதாகப் பல்கலைக்கழக மாணவப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களால் அழைப்பு விடுக்கப்பட்டு பல்கலைக்கழக வளாகத்தில் நடத்தப்பட்ட சிவில் சமூகப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலில், மாணவர்கள் போராட்டத்தைக் கைவிட வேண்டும் என வலியுறுத்தப்பட்டதாக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை இந்தச் சந்திப்பு நடைபெற்றதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்திப்பில் கல்விச் சமூகத்தினர் மதகுருமார்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபைத் தலைவர்கள், அரசியல்வாதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

''யாழ்.மாவட்டம் மற்றும் வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்தில் மாணவர்கள்மீதும் ஏனைய சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் மீதும் தொடர்ந்து அச்சுறுத்தல்கள் மற்றும் அவர்களுக்கெதிரான வன்முறைகள் தொடர்கின்றன. கூட்டத்தில் இதனை எதிர்த்து பேதங்கள் இன்றி ஏகோதபித்த கண்டனத்தை தெரிவித்ததுடன் அவை தொடராமல் இருக்க உரிய வகையிலான அழுத்தங்களைப் பிரயோகிக்க நடவடிக்கை எடுப்பதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்படத் தீர்மானித்தனர்'' - என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-10)




**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

25.10.2011 செவ்வாய்க்கிழமை (இன்று)
கொழும்பு சுகததாச உள்ளரங்கில்
ICBT CAMPUS னால் வழங்கப்படும்
QUANTITY SURVEYOR
(கணிய அளவையாளர்)
பட்டம் பெறும்
செல்வன்

**யதீஸ்வரன் அரிகரன்**

அவர்களைப் பாராட்டி
வாழ்த்துவதோடு அவர் மேன்மேலும்
பல சிறப்புக்களையும் பெற்று
பல்லாண்டு காலம் நலமுடன்
வாழ இறைவனை வேண்டி
மனதார வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்:
வி.ஷேமச்சந்திரன்-சுகிதா,
(சித்தப்பா-சித்தி).

89/1, பத்திரகாளி வீதி,
வண்ணார்பண்ணை.

**விற்பனைக்கு**

A3 HOMADA பிறின்ரிங் மெசின், கட்டிங் மெசின், ஏனைய அச்சக உபகரணங்கள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0776171488
0779232463

**நெல்லிக்கிறஸ், நல்லெண்ணெய் அடைப்பவர்களின் கவனத்துக்கு!**



நல்லெண்ணெய், நெல்லிக்கிறஸ் அடைப்பவர்களுக்குத் தேவையான கிளியர் (CLEAR) பிளாஸ்ரிக் போத்தல் (750 ml.) எம்மிடம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: சிவா நறுமணப்பூங்கா,
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
**T.P.: 0212222567**

**யாழ். மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்**
**கன்ரர் ரக வாகனம் வாடகைக்கு விடுதல்**

ஒரு கியூப் கொள்ளளவு கொண்ட 10½ அடி டபிள் வீல் டாட்டா கன்ரர் ரக வாகனம் நாளாந்தம் / மாதாந்தம் வாடகைக்கு விடப்படும். தங்களின் கேள்விக்கோரலை 31.10.2011 ஆம் திகதிக்கு முன்னர் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

யாழ். மாவட்ட கால்நடை வளர்ப்போர்
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்,
இல.87, பலாலி றோட்,
திருநெல்வேலி.

தொ.பே.இல.:
0213216331,
0776223162

தலைவர்,
செ.சுப்பிரமணியம்,
0776155930

**கார் விற்பனைக்கு**

301 - XXXX எனும் தொடர் இலக்கம் உடைய NISSAN SUNNY FB 14 வெள்ளைநிற SUPER SALOON கார் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 0776701233

**வீடு விற்பனைக்கு**

1. குமரகோட்டம், அதிகாரி லேன், கோப்பாய் மத்தியில் 7 பரப்பு காணியும், வீடும் விற்பனைக்கு உண்டு.
2. உரும்பிராய், கற்பகப் பிள்ளையார் கோயிலடியில் 2½ பரப்புக் காணியுடன் மேல்மாடி வீடும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0777551431/021-2225102

**பணி நிலை வேண்டுகை**

01. கணக்குப் பதிவாளர் - (பெண்)
A/L வர்த்தக பிரிவில் சித்தி பெற்றிருப்பதுடன் 03 வருட முன் அனுபவம் இருத்தல் வேண்டும். யாழ். நகர எல்லைக்குள் வதிபவராக இருக்க வேண்டும்.
02. பண வசூலிப்பாளர் - (ஆண்)
03. விற்பனை உதவியாளர் - (ஆண்)
யாழ். நகர எல்லைக்குள் வதிபவராக இருக்க வேண்டும்.
04. வாகன சாரதி
கனரக வாகன சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல் வேண்டும் (A/D)

தகைமைச் சான்றிதழ்களுடன் 02.11.2011 மு.ப. 11.00 மணிக்கு நேரில் வருகை தரவும்.

தொடர்பு: **Ambikai Kalangiyam, 304, Hospital Road, Jaffna. T.P.: 021-2222511**


# மரண அறிவித்தல்



## குமாரு சோமசுந்தரம்

**(புங்குடுதீவு, அல்லைப்பிட்டி, யாழ்ப்பாணம்)**

(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர் – கொழும்பு, நுவரெலியா, வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு மற்றும் மாவட்டச் செயலகம்–யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு-2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது இல. 10, கன்னாதிட்டி லேன், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரு சோமசுந்தரம் நேற்று (24.10.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரு-இராசம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற வடிவேலு-நாகம்மா தம்பதியரின் மருமனும், தேவசேனாவின் அன்புக் கணவரும், ரவிவர்மன் (போட்டோ ரவி), லயன் பாலகுமார் (JP, HNB -வடபிராந்திய காரியாலயம்) , சரவணன் (பிரான்ஸ்), சுலோசனன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரியா, குணரஞ்சினி ஆகியோரின் மாமனும், காலஞ்சென்றவர்களான பாக்கியம், வல்லிபுரம், நடராசா, நல்லையா, கந்தசாமி, நல்லம்மா மற்றும் கனகசுந்தரம் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான விவேகானந்தராஜா, அம்பிகைதாசன் மற்றும் புனிதவதி (கனடா), காலஞ்சென்ற குருதேவி மற்றும் அம்பிகைபாலன் (டுபாய்), நவரத்தினம், தங்கம்மா, தவமணி, ந.பரமேஸ்வரி, ந.பரமேஸ்வரி, கதிர்காமு, காலஞ்சென்ற க.பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் நித்தியானந்தன் (கனடா) ஆகியோரின் சகலனும், கிருஷன், சௌமியா, அஸ்வினி, அபிஷேக், அக்ஷயா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.10.2011) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 10, கன்னாதிட்டி லேன்,**
**யாழ்ப்பாணம்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# லிபியா விடயத்தில் நழுவல் போக்கு!

லிபியாவை கடந்த 42 வருடகாலமாக ஆட்சி செய்துவந்த கேணல் கடாபியின் கொலை குறித்து தற்பொழுது பல்வேறு தகவல்கள், விடியோக்கள் வெளியாகி லிபிய இடைக்கால அரசுக்கும் கடாபியின் வீழ்ச்சிக்குக் காரணமாக இருந்த அமெரிக்காவுக்கும் மற்றும் மேற்கு நாடுகளுக்கும் இக்கட்டான நிலையை ஏற்படுத்தி உள்ளது.

கேணல் கடாபி கிளர்ச்சிப்படைகளுடனான சண்டையில் கொல்லப்படவில்லை. உயிருடன் பிடிக்கப்பட்டுச் சுட்டுக்கொல்லப்பட்டார் என்பதே தற்பொழுது வெளிவந்துள்ள பிந்திய தகவல். ஆகவே கடாபி கொலை செய்யப்பட்டமை அப்பட்டமான மனித உரிமை மீறல் ஆகும். அதனாலேயே ஐ.நா.சபை, சர்வதேச மன்னிப்புச்சபை, ரஷ்யா ஆகியவை கடாபியின் கொலை தொடர்பான விரிவான அறிக்கை ஒன்றை லிபியாவின் இடைக்கால அரசிடம் கோரி உள்ளன. கடாபியின் வீழ்ச்சிக்கு மூல காரணமாக இருந்த அமெரிக்காவும் இத்தகையதோர் கோரிக்கையை விடுத்திருப்பது ஆச்சரியம் தான். இலங்கை அரசும் இதே கோரிக்கையை விடுத்துள்ளது.

கேணல் கடாபி இலங்கையின் நெருங்கிய நண்பர். ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷ லிபியா சென்றிருந்த சமயம் இலங்கைக்கு உதவும் பல வாக்குறுதிகளை லிபியா வழங்கி இருந்தது. இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளைக் கட்டி எழுப்புவதற்கு 500 மில்லியன் ரூபாவை வழங்குவதும் அவற்றில் ஒன்று. அப்பொழுது கேணல் கடாபி இலங்கை ஜனாதிபதியின் தோளில் கைபோட்டபடி வெளியிடப்பட்ட புகைப்படங்கள் இலங்கை - லிபிய நட்பின் ஆழத்தை மட்டும் அன்றி இரு நாட்டுத் தலைவர்களுக்கிடையிலான பாசத்தையும் எடுத்துக்காட்டின. குறுகிய காலத்தில் இவை எல்லாம் மறக்கடிக்கப்பட்டு விட்டன.

இலங்கை மக்களுக்கு கடாபி ஓர் அந்நியர் அல்லர். உலக இஸ்லாமிய அழைப்பு இயக்கம் என்ற பெயரில் லிபியாவில் ஏற்படுத்தப்பட்ட அமைப்பின் கிளை இலங்கையிலும் உள்ளது. கடாபியின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கி வந்த இந்த அமைப்பு பெரும் அளவு நிதி வளத்துடன் செயற்பட்டு இலங்கையில் வறிய மக்களுக்கு உதவிகளை வழங்கி வந்தது. அதாவது இன, மத, பேதம் இன்றி செயற்பட்டு வந்தவர் தான் கடாபி. அவரது ஜனாஸா கூட இஸ்லாமிய மதக் கோட்பாடுகளைத் தூக்கி வீசும் விதத்தில் 24 மணி நேரத்துக்கு மேல் வைக்கப்பட்டதும் கொடுமையின் விப்பமே.

கடாபிக்கு நிகழ்ந்த கொடூரம் குறித்துப் பெரும்பாலான நாடுகள் இன்னும் கண்டனம் வெளியிடாதது கவலை தருக்கிறது. உண்மையில் இலங்கை தனது நெருங்கிய நண்பர் ஒருவரை இழந்துவிட்டது என்றே கூறவேண்டும். ஆனால், இதுவரை இலங்கை அரசால் கண்டன அறிக்கை எதுவும் வெளியிடப்படாதது ஏமாற்றம் அளிக்கிறது. கடாபியின் மரணம் குறித்து லிபிய இடைக்கால அரசிடம் இலங்கை அறிக்கை கோரி இருப்பது ஒரு கண்துடைப்பே. இலங்கை இதனைக் கண்டிக்கத் தயங்குவதற்கு இலங்கையில் இடம்பெற்ற இறுதிப் போரில் நிகழ்ந்த சம்பவங்கள் தொடர்பாக அதன் மீது எழுந்த குற்றச்சாட்டுக்களும் காரணமாக இருக்கலாம்.

சர்வதேச நாணயச் சபையிடமோ உலக வங்கியிடமோ ஒரு சதம் கூட கடன் வாங்காத நாடு லிபியா. லிபியாவில் சகலருக்கும் இலவசக் கல்வி அமுலில் இருக்கிறது. 673 மக்களுக்கு ஒரு டாக்டர் என்ற விகிதத்தில் மருத்துவத் துறையிலும் லிபியா முன்னணியில் நிற்கிறது. நாட்டு மக்கள் அனைவருக்கும் இலவச மருத்துவ வசதிகள் வழங்கப்படுகின்றன.

வட்டி இல்லா வீட்டுக்கடன், விவசாயிகளுக்கு இலவச நிலங்கள், இலவச மின்சாரம், கார் வாங்கினால் 50 சதவீத அரச மானியம், குழந்தை பெற்றால் 5,000 அமெரிக்க டொலர், திருமணமானவர்கள் வீடு ஒன்றைச் சொந்தமாக வாங்கி வாழ்க்கையை ஆரம்பிக்க 50,000 அமெரிக்க டொலர். இப்படி கடாபியின் ஆட்சியில் லிபிய மக்களுக்கு எத்தனையோ சலுகைகள். எந்த ஒரு மத்திய கிழக்கு நாட்டிலும் இல்லாத ஓர் ஆட்சி கடாபியின் காலத்தில் இருந்தது. 2010ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட மனிதவள அபிவிருத்தி மதிபீட்டில் ஐ.நா. உறுப்பு நாடுகளின் 53 ஆவது இடம் லிபியாவுக்கு. லிபிய மக்களில் 25 சதவீதமானோர் பல்கலைக்கழகப் பட்டம் பெற்றவர்கள்.

அப்படியானால் கடாபிக்கு ஏன் இப்படி ஒரு வீழ்ச்சி ஏற்பட்டது? இந்த வினா இயல்பானது, நியாயமானது.

2009ஆம் ஆண்டு அமெரிக்காவுடன் ஏற்பட்ட நட்புத்தான் கடாபியின் வீழ்ச்சிக்குக் காரணம் என்று கூறப்படுகிறது. லொக்கர்பீ விமானக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களுக்கு பெரும் தொகையான பணத்தை லிபியா நஷ்டஈடாக வழங்கியதை அடுத்து அமெரிக்காவுக்கும் லிபியாவுக்கும் இடையிலான முறுகல் நிலை முடிவுக்கு வந்தது. முழு அளவிலான ராஜதந்திர உறவுகள் ஏற்பட்டன.

கடாபிக்கு அமெரிக்காவிடம் முழு நம்பிக்கை ஏற்பட்டபின் வர்த்தக ரீதியில் இயங்கும் பெரும் அமெரிக்க நிறுவனங்கள் லிபியாவுக்குள் செயற்பட அனுமதிக்கப்பட்டன. இந்த நிறுவனங்கள் லிபியப் பாதுகாப்புப் படைகளுக்கு மட்டும் அல்ல குடி மக்களுக்கும் ஆயுதப் பயிற்சி அளித்தன. இந்த நிறுவனங்கள் ஊடாக அமெரிக்க உளவாளிகளும் லிபியாவுக்குள் பெரும் அளவில் ஊடுருவினர் என்று கூறப்படுகிறது. இவர்கள் படிப்படியாக வகுத்த திட்டங்கள் தான் இறுதியில் கடாபிக்கு எதிரான மக்கள் கிளர்ச்சி என்ற பெயரில் உருவெடுத்தன. நேட்டோப் படைகளின் வான் பாதுகாப்புடன் கடாபியின் ஆட்சி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு அவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

யூகோஸ்லாவியாவிலும் ஈராக்கிலும் நேட்டோ எப்படிச் செயற் பட்டதோ அதே போன்றே லிபியாவிலும் செயற்பட்டு லிபியா வின் முழு அரச கட்டமைப்பையும் துவம்சம் செய்துவிட்டது.

லிபியாவில் நேட்டோ நடத்திய வான் தாக்குல்களில் ஆயி ரக்கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். வைத்தியசாலைகள், மின் உற்பத்தி நிலையங்கள், நீர் சுத்திகரிப்பு நிலையங்கள், டி.வி. நிலையங்கள், தகவல் தொடர்பு வலையமைப்புகள், பாடசாலைகள், சிவில் விமான நிலையங்கள், மக்கள் நெருக்கமாக வாழும் பகுதிகள் என்று எவையுமே நேட்டோ படைகளின் வான் தாக்குதல்களில் தப்பவில்லை. இவை எல்லாம் தற்செயலானவை அல்ல. திட்டமிட்ட சதியால் பேரழிவு ஒன்றை லிபியா சந்தித்து, தனது தலைவரையும் இழந்து நிற்கிறது இப்போது.

இத்தனை இடம்பெற்ற பின்பும் இலங்கை அரசு மௌனம் சாதிப்பதன் உள்நோக்கம் எவராலும் புரிந்துகொள்ளக் கூடியதே. வேறென்ன, பொல்லைக்கொடுத்து ஏன் அடி வாங்க வேண்டும் என்ற நழுவல் போக்குத் தான்! மௌனமாக இருக்க முடியுமா?

கடந்த 6 மாத காலத்தில்

# ஊழியர் சேமலாப நிதியத் திட்டத்தில் 338 வியாபார நிலையங்கள் இணைவு

யாழ்ப்பாணம் ஒக்.25

வடமாகாணத்தில் கடந்த ஆறு மாத காலப் பகுதியில் 338 வியாபார நிலையங்கள் ஊழியர் சேமலாப நிதியத் திட்டத்தின் கீழ் பதியப்பட்டு உள்வாங்கப்பட்டிருப்பதாக வடமாகாணப் பிரதித் தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் இந்த வியாபார நிலையங்களில் பணியாற்றும் பணியாளர்கள் இந்தத் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்படவில்லை. இதனால் அவர்கள் பெரும் சிரமப்பட்டனர்.

தற்போது ஊழியர் சேமலாப நிதியத் திட்டத்தின் கீழ் இந்த வியாபார நிலையங்கள் பதியப்பட்டு வருவதால் இவற்றில் பணியாற்றும் பணியாளர்கள் நன்மை யடைந்துள்ளனர்.

இதுவரைக்கும் 960 பணியாளர்கள் இந்த சேமலாப நிதியத் திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் உள்ள வியாபார ஸ்தாபனங்கள் மற்றும் நிறுவனங்கள் போன்றவற்றில் பணியாற்றும் சகல பணியாளர்களும் இந்த சேமலாப நிதியத் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டு அவர்களின் எதிர்கால நடவடிக்கைகளுக்கு ஏற்ற வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்றார் பிரதித் தொழில் ஆணையாளர். (த-26)

# வடக்கு உள்ளூராட்சிச் சபைகளை சம்மேளனத்தில் இணைக்க ஏற்பாடு

தென்மராட்சி, ஒக்.25

இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனத்தினர் வடக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களைச் சம்மேளனத்தில் இணைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

சம்மேளனத் தலைவரினால் சம்மேளனத்தின் செயற்பாடுகள் குறித்து அறிவிக்கப்பட்டதுடன் சம்மேளனத்தில் இணைவதற்கான கட்டண விவரங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் மாநகர சபை 15 ஆயிரம் ரூபாவும், நகர சபை 10 ஆயிரம் ரூபாவும், பிரதேச சபை 7 ஆயிரத்து 500 ரூபாவும், கஷ்டமான பிரதேச சபை 5 ஆயிரம் ரூபாவும் செலுத்த வேண்டுமெனவும் அறி வித்துள்ளார்.சம்மேளனத்தில் இணைய வடக்கு மாகாண உள்ளூராட்சி சபைகள் தமது கூட்டத்தில் தீர்மானம் எடுத்துள்ளதாகத் தெரிய வருகிறது. (த-207)

# திருவுளப் பணியாளர் சபைத் தலைவர் யாழ்.வருகை

கொழும்புத்துறை, ஒக்.25

அனைத்துலகத் திருவுளப் பணியாளர் சபையின் தலைவர் அருட்திரு எஸ்.ஜே. டன்ஸ்ரன் அடிகளார் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளார்.

கனடாவைத் தலைமையகமாகக் கொண்டு செயற்பட்டு வரும் கத்தோலிக்க திருச்சபையின் ஒரு சபையாகிய திருவுளப் பணியாளர் சபையின் தற்போதைய தலைவராக சில்லாலையைச் சேர்ந்த குருவான டன்ஸ்ரன் அடிகளார் செயலாற்றி வருகின்றார்.

இவர் இந்த நியமனத்தைப் பெற்றபின் முதல் முறையாக இலங்கைக்கு விஜயத்தை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்துள்ளார். அவருக்கு கொழும்புத்துறையில் உள்ள திருவுளப் பணியாளர் சபையில் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. கொழும்பு, கண்டி, மன்னார், நீர்கொழும்பு பகுதிகளில் உள்ள மாவட்ட சபைகளுக்கும் அவர் விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது. (த-135)

# மோ. சைக்கிளை உரியவர் பெற்றுக்கொள்ள கோரிக்கை

வலி, வடக்கு, ஒக்.25

தெல்லிப்பழைப் பொலிஸாரினால் வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட மோட்டார் சைக்கிளை உரியவர் உரிமை கோரும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

பளை வீமன்காமம் பகுதியில் பொலிஸார் ரோந்து நடவடிக்கையை மேற்கொண்டுவந்த வேளையில் கைவிடப்பட்ட நிலையில் இருந்த சிடி 50 இனத்தைச் சேர்ந்த 500-3562 மோட்டார் சைக்கிள் கைப் பற்றப்பட்டது.

இந்த மோட்டார் சைக்கிளை உரிய ஆவணங்களுடன் உரிமை கோரும்படி தெல்லிப்பழைக் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸ் பொறுப்பதிகாரி கோரியுள்ளார்.

குறிப்பிட்ட வாகனம் மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் பொலிஸாரினால் கைளிக்கப்பட்டு நீதிமன்றப் பாதுகாப்பில் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-86)

# முறையற்ற கேபிள்கள் கொள்வனவு மின்சார சபைக்கு ரூ.10கோடி நட்டம்

கொழும்பு, ஒக்.25

முறையற்ற விதத்தில் வெளிநாட்டு நிறுவனமொன்றிடமிருந்து மின் இணையப்புக் கேபிள்களைக் கொள்வனவு செய்ததால் கடந்த 2009 ஆம் ஆண்டில் மின்சார சபைக்குப் பத்துக்கோடி ரூபா வரை நட்டமேற்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரகசியப் பணக் கைமாறல்கள் மூலம் மின்சார சபையின் அதிகாரிகள் சிலரின் தலையீட்டுடன் இந்தக் கொடுக்கல் வாங்கல் நிகழ்ந்துள்ளதாகவும் மின்சார சபையின் சிரேஷ்ட பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

குறிப்பிட்ட கேபிளைக் கொள்வனவு செய்வது தொடர்பாகக் கேள்வி கோரல்களை வெளியிட்டிருந்த மின்சாரசபை சில நிறுவனங்களிமிருந்து மாதிரிகளையும் பெற்றிருந்தது.

இந்த நிலையில்தான் மின்சார சபையின் அதிகாரிகள் சிலர் இவ்வாறு முறையற்ற விதத்தில் செயற்பட்டு அதிக விலையை முன்வைத்திருந்த நிறுவனமொன்றிடமிருந்து கேபிள்களைக் கொள்வனவு செய்துள்ளமை பரிசோதனை மூலம் தெரிய வந்துள்ளதாகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

கடந்த ஆண்டின் முதல் மூன்று மாத காலத்துள் மேற்படி கொள்வனவு நிகழ்ந்துள்ளதுடன் அந்தக் காலகட்டத்தில் இந்த அதிகாரிகளுக்கு எதிராக மின்சார சபையின் உயர் மட்டத்தால் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (த-22)

# புதிய வீதிக்காக வீடுகள் அகற்றப்பட்டதால் கொழும்புத்துறை வசந்தபுரம் மக்கள் அவலம்

## எல்லை மீள் நிர்ணயமும் இதுவரை இல்லை

கொழும்புத்துறை, ஒக். 25

கொழும்புத்துறை வசந்தபுரம் கிராமத்தின் புதிய வீதி அமைப்பு நடவடிக்கை காரணமாக அகற்றப்பட்ட வீடுகளில் வசித்து வந்தோர் சிரமங்களின் மத்தியில் பல்வேறு இடங்களில் வாழ்ந்து வருவதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

இக்குடியேற்றப் பகுதியில் முன்னர் பாவனைக்கு இருந்த வீதிகள் கட்டமைப்பற்ற முறையில் காணப்பட்டமையால் கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் வீதிகளை மீள் நிர்ணயம் செய்து காணிகளை அளந்து பிரித்துக் கிராமத்தைச் சீர்படுத்தும் வகையில் பல வீடுகள் அகற்றப்பட்டுள்ளதுடன் புதிய வீதியும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதன்போது காணிகளை ஊடறுத்துப் புதிய வீதி அமையவுள்ளமையால் வீடுகள் அகற்றப்பட்டன. ஆனால் பல மாதங்கள் கடந்தும் காணிகளை அளந்து எல்லை நிர்ணயம் செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லையென இங்கு வசிக்கும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

புதிய வீடுகளை அமைக்க முடியாமையினால் 90 குடும்பங்கள் வசித்துவந்த இந்தப் பகுதியில் அரைவாசிக்கு மேற்பட்ட குடும்பங்கள் வேறிடங்களில் வசிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது மழை காலம் ஆரம்பித்துள்ளபடியால் இவர்களின் குடியிருப்புப் பகுதிகள் பல நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளதாவும் கூறப்படுகிறது.

எனவே உரிய தரப்பு அதிகாரிகள் விரைந்து செயற்பட்டுக் காணிகளை அளந்து எல்லைகளைக் குறிப்பிட்டு வீடுகளை அமைத்து வசிக்க வழிகோலுமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தப் பகுதிமக்கள் 16 வருடங்களின் பின்னர் கடந்த வருட இறுதியில் இங்கு மீளக் குடியமந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (த-135)

## அலங்கார வளைவு அமைக்கும் பணி

சுழிபுரம், ஒக். 25

சுழிபுரம் பறாளாய் ஈஸ்வர விநாயகர் ஆலய வீதி தெற்குப் பக்க முகப்பில் அலங்கார வளைவு அமைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. பறாளாய் முருகன் கோயிலுக்கு முன்பாக சுழிபுரம் கிழக்கு சத்தியக் காட்டுச் சந்தை வீதி வழியாக வந்து சுழிபுரம் சம்பு நாதேஸ்வரம் வரை செல்லும் பாதையில் கட்டப்பட்டுள்ள சோழபுரம் அலங்கார வளைவு போல் கட்டப்படவுள்ளது. இந்த அலங்கார வளைவை அமைக்கும் ஏற்பாடுகளை சி.பிறைசூடிக்குரு கவனித்து வருகிறார். இந்த வளைவு இந்த வருடத்தில் நிறைவுபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-28)



நாவற்குழி பாலத்தில் கடந்த வியாழக்கிழமை மிக வேகமாக வந்து பாலத்தின் இரும்புக் கேடரில் மோதி சில்லு உடைந்த நிலையில் நிற்கும் இராணுவத் தினரின் கவச வாகனமே இது. இந்த விபத்து ஏற்பட்ட வேளை போக்குவரத்து இல்லாத கார ணத்தினால் உயிரிழப்புகள், சேதங்கள் தவிர்க்கப்பட்டன. (த-288)

## 15 கலைஞர்களுக்கு யாழ் ரத்னா விருது

யாழ்.பிரதேச கலாசாரப் பேரவையின் 'கலாசார விழா 2011' நாளை மறுதினம் வியாழக்கிழமை நடைபெறும் போது யாழ். பிரதேசத்தைச்சேர்ந்த கலைஞர்களுக்கு 'யாழ் ரத்னா' விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. 'யாழ்ரத்னா' விருது பெறவுள்ள கலைஞர்கள் விவரம் யாழ். பிரதேச கலாசார பேரவையால் அறிவிக்கப் பட்டுள்ளது.

திருமதி சேர்ச்சிலம்மா நவட்ணராஜா(நாட்டுக்கூத்து), தா.அருள்ராசா (நாட்டுக் கூத்து), அ.யேசுதாஸ் (நாட்டுக் கூத்து), செல்வி இராசதேவி சபாபதி(இசை), நீ.சவிரிமுத்து (இசை), இரா. செல்வவடிவேல் (இலக்கியம்), அ.யேசுராசா (இலக்கியம்), அ.ஜெயராசா (மிருதங்கம்), ம.அன்ரன் யோசவ் (சிற்பம்), மு.கனகசபை (ஓவியம்),சா. பென்ஜமின் (ஒப்பனை), சி.மக்சிமஸ்(நாடகம்), சி. அருமைத்துரை(நாடகம்), சி.மா. நெல்சன் (அரங்க நிர்மாணம்) ஆகிய கலைஞர்கள் விருது பெறவுள்ளனர். (த-135)

## பஸ் சேவைகள் அதிகரிப்பு

வடமராட்சி , ஒக்.25

யாழ்.நகரிலிருந்து பலாலி வீதி, ஏ9 வீதி ஆகியவற்றின் ஊடாக இ.போ.ச பஸ்சேவைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக யாழ்.கோண்டாவில் இ.போ.ச டிப்போ தெரிவித்துள்ளது.

தினமும் பலாலி வீதியில் 20 நிமிடத்துக்கு ஒரு பஸ் வண்டியும், ஏ9 வீதியில் அரைமணி நேரத்துக்கு ஒரு பஸ் வண் டியும் நேற்று முன்தினம் (சனி) முதல் சேவையில் ஈடுபடுத்தத்தப்பட்டு வருகின்றன யாழ். கோத்ண்டாவில் இ.போ.ச டிப்போ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (த-236)

## யாழ்.பிரதேச கலாசார விழா கலைத்தூது மண்டபத்தில்

கொழும்புத்துறை, ஒக். 25


யாழ்.பிரதேச கலாசார பேரவையின் 'கலாசார விழா 2011'' நிகழ்வு நாளை மறுதினம் வியாழக்கிழமை காலைமுதல் மாலை வரை திரு மறைக்கலா மன்ற கலைத் தூது மண்டபத்தில் நடைபெற வுள்ளது. 'அன்பினால் ஞாலப் பண்பினை ஓங்கச் செய்வோம்' என்னும் தொனிப் பொருளில் நடைபெறவுள்ள யாழ்.பிரதேசகலாசார விழா 27ஆம் திகதி காலை 9 மணி முதல் மாலை 6 மணிவரை இரு அமர்வுகளாக இடம்பெறும்.

காலை அமர்வு யாழ்.பிரதேச செயலர் உதவித்திட்டமிடல் பணிப்பாளர் க.சிவச்சந்திரன் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கமும் சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறைப் பேராசிரியர் மா.இரகுநாதனும் கலந்துகொள்வர்.

இஸ்லாமிய ரபான் நிகழ்ச்சி, கதகளி நடனம், வழக்காடு மன்றம், நாடகம் போன்ற நிகழ்வுகளுடன் தேசிய கலை இலக்கியப் போட்டி 2011 இல் வெற்றி பெற்றோருக்கான பரிசில் வழங்கலும் இடம்பெறும்.

அன்றையதினம் பி.ப.2 மணிக்கு ஆரம்பமாகும் மாலை அமர்வு யாழ்.பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் தலைமையில் ஆரம்பமா கும். பிரதம விருந்தினர்களாக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரும், சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக பொருளியல்துறைப் பேராசிரியர் வே.ப.சிவநாதனும் கலந்துகொள்வர்.

'அன்பினால் ஞாலப் பண்பினை ஓங்கச் செய்வோம்' என்னும் பொருளில் யாழ்.பிரதேச கலாசாரப் பேரவை உப தலைவர் இரா.செல்வவடிவேல் வழங்கும் சிறப்புரையும், யாழ்.பிரதேச கலாசாரப் பேரவைக் கலைஞர்களின் 'யாழ்பாடி' நாட்டுக்கூத்தும் இடம்பெறும். யாழ்.பிரதேச செயலகப் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களைப் பாராட்டி 'யாழ் ரத்னா' விருது வழங்கும் நிகழ்வும் சிறப்பு நிகழ்வாக இடம்பெறும். (த-135)



நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தின் 90ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கல்விக் கண்காட்சி நேற்று அதிபர் எஸ்.சேதுராஜா தலைமையில் ஆரம்பமானது. இக்கண்காட்சி இன்றும் இடம்பெறும். (த-319)

## 14 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களை தொழிலில் அமர்த்தினால் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 25

யாழ்.குடாநாட்டில் 14 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களைத் தொழிலுக்கு அமர்த்தினால் அந்தத் தொழில் நிலைய உரிமையாளர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று வடமாகாணப் பிரதித் தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

இதுபற்றி இவர் மேலும் தெரிவிக்கையில்:

குடாநாட்டில் உள்ள சில வியாபார நிலையங்களில் 14 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களைத் தொழிலில் ஈடுபடுத்தும் நடை முறை இன்னும் உள்ளது. இந்தச் செயலானது சட்டத்துக்கு முரணானதாகக் கவனத்தில் எடுக்கப்பட்டு சம்பந்தப்பட்ட தொழில்நிலையம் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இப்படியான முறைப்பாடுகள் எமக்குக் கிடைக்கப்பெற்றால் உடன் நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார் அவர். (த-26)

## வழி அனுமதிப் பத்திரமின்றி சடலம் எடுத்துச் செல்ல தடை

யாழ்ப்பாணம், ஒக்.25

சடலம் கொண்டு செல்வதற்கான வழி அனுமதிப் பத்திரமின்றி ஏ-9 வீதியூடாகக் கொண்டு செல்லப்பட்ட சடலம் பொலிஸாரால் தடுக்கப்பட்டு சாவகச்சேரி வைத்தியசாலையில் வைக்கப்பட்டது.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் கடந்த 18 ஆம் திகதி இட்ம் பெற்றது.

யாழ்ப்பாணம் அத்தியடியைச் சேர்ந்த அன்ரன் மரியதாஸ் (வயது 54) என்பவர் மிருசுவிலில் வசிக்கும் தனது சகோதரனுடன் கடந்த ஒன்றரை மாதங்களாக வசித்து வந்தார். கடந்த திங்கள்கிழமை மாலை இவருக்கு மாரடைப்பு ஏற்பட்டு மரணமடைந்துள்ளார்.

இவர் கிறிஸ்தவமதச் சபையொன்றின் விசுவாசியாக இருப்பதால் எந்த நோய் ஏற்பட்டாலும் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதில்லை. இவர் நீரிழிவு நோயாளியாக இருந்த போதிலும் வைத்தியசாலையில் சிகிச்சை பெறாமல் அக்குபங்சர் சிகிச்சை மூலம் தனது நோயினைக் கட்டுப்பாட்டால் வைத்திருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

மரணம் தொடர்பாக அவரது குடும்பத்தினருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து அவர்கள் வந்து சடலத்தை அவரது சொந்த வீட்டுக்கு எடுத்துச் செல்ல ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. சடலத்தைக் கொண்டு செல்வது பற்றிக் கொடிகாமம் பொலிஸாருக்கு அறிவித்த பின்னர் சடலத்தை மிருசுவிலில் இருந்து பிரேத வாகனத்தில் அவர்கள் யாழ்ப்பாணம் கொண்டு சென்றனர்.

சாவகச்சேரியில் வாகனத்தை மறித்த பொலிஸார் சடலத்தைக் கொண்டு செல்வதற்குரிய வழி அனுமதிப் பத்திரத்தினைக் கேட்டனர். அது இல்லையெனத் தெரிவிக்கப்பட்டதையடுத்து சடலத்தைச் சாவகச்சேரி வைத்தியசாலை சவச்சாலையில் தடுத்து வைத்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்தனர்.

நீதிவான் மா.கணேசராஜாவின் பணிப்பின் பேரில் கொடிகாமம் பிரதேச திடீர்மரண விசாரணை அதிகாரி செல்வி இ.தவமலர் விசாரணைகளை நடத்திச் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை பொறுப்பதிகாரி மூலம் உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொண்ட பின்னர் சடலத்தை உறவினரிடம் கையளிக்குமாறு உத்தரவிட்டார். (த-207)

## இலவச மின் விநியோகத்தை எதிர்பார்த்து ஏமாந்த மக்கள்

யாழ்ப்பாணம், ஒக்.25 வீடமைப்புத் திட்டத்தின் கீழ் வீடுகளைப் பெற்றுக் கொண்ட நெடுந்தீவு மக்கள் தமக்கு இலவச மின் விநியோகம் கிடைக்கும் என எதிர்பார்த்திருந்து ஏமாற்றமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சமீபத்தில் நெடுந்தீவுக்கு வருகை தந்த பாரம்பரிய கைத்தொழில் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி ஆகியோரிடம் தமக்கு இலவசமாக மின் இணைப்பு வழங்குமாறு இந்த மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

மேற்படி கோரிக்கைக்கு அமைச்சர், ஆளுநர் ஆகியோர் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இலவசமாக மின்சார இணைப்பை வழங்குமாறு மின்சார சபை அதிகாரிகளிடம் கூறினார்கள். மின்சார சபை உத்தியோகத்தர்களும் அவ்வாறு இணைப்பை வழங்க சம்மதம் தெரிவித்தனர். இந்த வீட்டுத் திட்டப் பகுதிகளில் மின் கம்பங்களை நடவும் இணைப்புகளை வழங்கவும் தயாராக 'பைக்கோ' வாகனம் நெடுந்தீவுக்கு மின்சார சபையால் கொண்டுவரப்பட்டிருந்தது. எனினும் தற்போது இந்த வாகனத்தை நெடுந்தீவில் எந்த வித பணிகளும் ஆரம்பிக்கப்படாத நிலையில் வேலணை மின்சார சபையினர் திருப்பிக் கொண்டு சென்றுள்ளனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட குடியிருப்பாளர்கள்வேலணை மின்சாரசபை உத்தியோகத்தரிடம் கேட்ட போது, அமைச்சர், ஆளுநர் ஆகியோரின் முன்பாக நாங்கள் மின் இணைப்பு வழங்கலாம் என்றுதான் கூறுவோம். ஆனால் இப்போது மின்சாரம் வழங்க முடியாது என்று கூறிக் கைவிரித்து விட்டதாக பொது மக்கள் தெரிவித்தனர். (த-7)

# சிறு குற்றங்கள் புரிந்தவர்களுக்காக விரைவில் சமுதாய சீர்திருத்தப் பிரிவு

## சாவகச்சேரி நீதிமன்ற வளாகத்தில் செயற்படும்

நாட்டில் சிறுகுற்றங்கள் புரிந்ததால் சிறை செல்ல நேரிடும் சமூகத்தினரைச் சீர்திருத்தவென அமைக்கப்பட்ட சமுதாயச் சீர்திருத்தப் பிரிவு சாவகச்சேரி நீதிமன்றிலும் செயற்படவுள்ளது.

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் கீழ் உள்ள சமுதாயம் சார் சீரிதிருத்தத் திணைக்களத்தினரால் நீதிமன்றங்கள் தோறும் அமைத்துவரும் சமுதாயச்சீர்திருத்தப்பிரிவின் அலுவலகமே சாவகச்சேரி நீதிமன்ற வளாகத்தில் விரைவில் இயங்கவுள்ளது.

இந்தப் பிரிவுக்குப் பொறுப்பதிகாரியாக மட்டக்களப்பு மாவட்ட சமுதாய சீர்திருத்தப் பிரிவில் கடமையாற்றும் எஸ்.தயானந்தன் என்பவரைச் சமு தாய சீர்திருத்தத் திணைக்கள ஆணையாளர் பி.கே.எஸ். ரவீந்திரா நியமித்துள்ளார்.

ஏதாவது ஒரு சட்ட விரோத செயலில் ஈடுபட்ட நபர் ஒருவருக்கு நீதிமன்றினால் அபராதம் செலுத்த அல்லது சிறைத் தண்டனை பெற உத்தரவு பிறப்பிக்கப்படும். அபராதம் செலுத்த முடியாமல் குறுகிய காலச் சிறைத்தண்டனை பெறுவோர் சிறைச்சாலைகளில் சிறைத்தண்டனை அனுபவிப்பவர்களுடன் ஏற்படும் சகவாசத்தினால் இந்த நபர் மீண்டும் மீண்டும் சிறை செல்லச் சட்ட விரோதச் செயல்களில் ஈடுபட முற்படுவார். இதனால் சிறைச்சாலைகளில் பெரும் இடநெருக்கடி ஏற்படுவதுடன் இவர்களைப் பராமரிப்பதற்கு பெருமளவு நிதி தேவைப்படுகிறது.

இந்த நிலையில் நீதிமன்றங்களினால் சட்ட விரோதச் செயல்களில் ஈடுபட்டுஅபராதம் செலுத்த முடியாதவர்கள் சமுதாயச்சீர்திருத்தப் பிரிவுக்கு விண்ணப்பித்தால் அவர்கள் இந்த நபர்களைப் பொறுப்பேற்று நீதிமன்றினால் விதிக்கப்படும் அபராதத் தொகையை ஈடுசெய்யக் கூடிய பொது வேலைத் திட்டங்களில் ஈடுபடுத்தி உரிய தொகைக்குரிய வேலைகளை மேற்கொண்ட பின்னர் அவர்களைச் சமுதாயத்தில் இணைக்க இந்தப் பிரிவு உதவும்.

சமுதாயம் சார் சீர்திருத்தச் சேவை என்பது அபராதத் தொகை செலுத்த முடியாமல் சிறை செல்வதற்குப் பதிலாகவுள்ள மாற்றுத்தண்டனை முறையாக இருக்கும். இந்த சேவை மூலம் ஒருவர் சிறைக்கு உட்படுத்தப்படுவதைத் தடுத்து தனது சுய கௌரவத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

மேலும் தொழில் ஒன்று செய்வதாயின் அல்லது கல்வியை மேற்கொள்வதாயின் அவற்றுக்கு இடையூறு ஏற்படாத வகையில் வார இறுதி நாள்களில், பொது விடுமுறை நாள்களில் சீர்திருத்தச் சேவையை மேற்கொள்ள முடியும்.

சீர் திருத்தச் சேவையின் பின்னர் மாலை வேளைகளில் தமது குடும்பம், பிள்ளைகள் ஆகியோருடன் தங்கியிருந்து அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்கும் பராமரிப்பதற்கும் வசதிகள் பெறும் தன்மையுள்ளது.

சாவகச்சேரி மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜாவின் முயற்சியின் பயனாக வடமாகாணத்தில் முதல் முறையாகச் சமுதாயச் சீர்திருத்தப் பிரிவு சாவகச்சேரி நீதிமன்றில் இயங்கவுள்ளது.

நீதிபதி மூதூர் நீதிமன்றம் திருகோணமலை நீதிமன்றம் ஆகியவற்றில் கடமையாற்றிய காலத்தில் அங்கும் இந்த சமுதாயச் சீர்திருத்தப்பிரிவை ஆரம்பித்தமையும் குறிப்பிடத்தக்கது. (த-207)

## வெற்றிக்காக...



தொடரட்டும் ஊக்குவிப்பு: பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப்போட்டிகளில் தங்கப்பதக்கம் வென்று வெற்றியீட்டிய ஏழுவைதீவு முருகவேள் வித்தியாலய மாணவிக்குக் காரைநகர் கடற்படை அதிகாரி அன்பளிப்பு வழங்குகிறார். (த)

# பாதுகாப்பு வலயத்தில் திருட்டில் ஈடுபடுவோர் தப்பிக்கும் நிலை

## மக்கள் ஒத்துழைக்காமையே காரணமாம்

வலி.வடக்கு, ஒக்.25

வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் தெல்லிப்பழைப் பொலிஸாரினால் பல களவுகள் பிடிக்கப்பட்ட போதிலும் உடைமைகளின் உரிமையாளர்கள் தமது பொருள்களை அடையாளம் காட்டி உரிமை கோர முன்வராமையால் குற்றவாளிகள் தப்பிக்கும் நிலைமை காணப்படுவதாகத் தெல்லிப்பழை குற்றத் தடுப்புப் பொலிஸார் கூறுகின்றார்கள்.

உயர் பாதுகாப்பு வலயத்தில் பொலிஸார் ரோந்து செல்லும் வேளையில் சந்தேக நபர்கள் இரும்புக் கம்பிகள், மரங்கள் மற்றும் பொருள்களுடன் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்படுகின்றனர். சந்தேக நபர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட பொருள்கள் தங்களுடையது எனக் கூறப் பொதுமக்கள் முன்வராமையால் பொலிஸார் சந்தேக நபர்கள் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய முடியாத நிலைமை காணப்படுகின்றது.

பொதுமக்கள் இத்தகைய நபர்களைக் கைது செய்ய உதவி செய்தாலும் வழக்கைப் பதிவு செய்வதற்கும் சாட்சியம் கூறவும் முன்வராத நிலைமையும் காணப்படுவதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றார்கள்.

பொதுமக்களுடைய இத்தகைய நடவடிக்கைகள் திருடர்களுக்குச் சந்தர்ப்பமாக அமைவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-86)

# நிரந்தரக் கட்டம் இதுவரை இல்லை

அளவெட்டி தபாலகத்துக்கென ஊர்மக்களும், பொது அமைப்புக்களும் இணைந்து காணி கொள்வனவு செய்து தபால்கத்துக்கு அன்பளிப்பு செய்த போதும் அதற்கு இன்றுவரை நிரந்தர கட்டடம் அமைக்கப்படவில்லை. இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நடை பெற்ற போதும் கட்டடப் பணிகள் எதுவும் இடம்பெறவில்லை.

பலவருடங்களாகியும் இதனை யாரும் கவனிப்பதாக இல்லையெனவும், சொந்தக் காணியிருந்தும் வாடகைக் கட்டடத்தில் தபாலகம் தொடர்ந்தும் இயங்கி வருவது கவலைக்குரிதாகும் எனவும் இந்தப் பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கிறார்கள். (த-36)

# உசனில் கைதான நால்வருக்கும் பிணை

தென்மராட்சி, ஒக்.25

புலனாய்வுத் துறையைச் சேர்ந்தவர்களென உசன் - விடத்தற்பளை வீதியில் உள்ள வீடொன்றினுள் உள்நுழைந்து அங்கிருந்தவர்களிடம் தங்க நகைகளை அபகரித்துச் சென்றார்கள் என்ற சந்தேகத்தின்பேரில் கைதான நால்வரும் சாவகச்சேரி நீதிமன்றினால் பிணையில் விடப்பட்டுள்ளனர்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நால்வரையும் கடந்த 21 ஆம் திகதி அடையாள அணி வகுப்புக்கு உட் படுத்தியபோது சாட்சிகளால் ஒருவரை மட்டும் அடையாளம் காட்டப்பட்டது. இந்த நிலையில் வழக்கினை விசாரித்த நீதிவான் மா.கணேசராஜா நால் வரையும் பிணையில் செல்ல அனுமதித்தார் . (த-207)

# அடிப்படை வசதிகளின்றி கைதடி வளர்மதி முன்பள்ளி

## அவலத்தில் மழலைகள்

கைதடி, ஒக்.25

கைதடி கிழக்கில் அமைந்துள்ள வளர்மதி முன்பள்ளி அடிப்படை வசதிகளற்ற நிலையில் இயங்கி வருவதாக வளர்மதி சனசமூகநிலைய நிர்வாகத்தினரால் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி முன்பள்ளி கடந்த இருபத்தொரு வருடங்களாக இங்கு இயங்கி வருகின்ற போதும் அரச நிறுவனங்களோ அரச சார்பற்ற நிறுவனங்களோ இந்தப் பக்கம் தலை காட்டுவதில்லையெனவும் மாறாக வசதிகள் நிறைந்த முன்பள்ளிகளுக்கே தொடர்ந்தும் உதவிகளை வழங்குவதுடன் புதிய கட்டடங்களை அமைத்துக் கொடுத்து வருவதாகவும், தென்மராட்சி முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளரும் இந்த முன்பள்ளியின் வளர்ச்சியில் அக்கறை காட்டாமல் இருப்பதாகவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது இந்த முன்பள்ளியின் கட்டடம் மிகவும் பழுதடைந்த நிலையிலும் பாதுகாப்பற்ற நிலையிலும் இருப்பதுடன் இங்கு மலசலகூட வசதி கூட இல்லை எனவும் தெரிவிக் கப்பட்டது.

இந்த கட்டடம் 2000 ஆம் ஆண்டு ஏற்பட்ட போர் நடவடிக்கையில் சேதமடைந்த வேளை மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் பன்முகப் படுத்தப்பட்ட வரவு, செலவு நிதியிலிருந்து 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்து அதனைப் புனரமைக்க உதவியதாகத் தெரிவிக்கப்பட் டது.

எனவே, இந்த விடயத்தில் அக்கறை கொண்ட நிறுவனங்கள் இங்கு புதிய முன்பள்ளிக் கட்டடம் ஒன்றை அமைத்து இந்தப் பிரதேச மழலைகளின் கல்விக்கு உதவ வேண்டும் என கைதடி வளர்மதி சனசமூக நிலைய நிர்வாகத்தினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (த-288)

# அளவெட்டி தபாலகம் புதிய இடத்துக்கு மாற்றம்

அளவெட்டி, ஒக்.25

அளவெட்டி தபாலகம் கடந்த 19 ஆம் திகதி முதல் புதிய இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

பழைய இடத்துக்கு அருகாமையில் அளவெட்டி - மல்லாகம் வீதிக்கு அண்மையில் அமைந்துள்ள கட்டடத்தில் தற்போது தபாலகம் இயங்கி வருகிறது.

இந்தத் தபாலகத்தில் பொது மக்களுக்கான அனைத்து சேவைகளும் இலகுபடுத்தப்பட்டுள்ளதாகவும், முற்றிலும் நவீன மயப்படுத்தப்பட்டு (ஒன் லைன்) கணினி வலைப் பின்னல் மூலம் சேவைகளை வழங்கிவருவதாகவும், இதன் மூலம் உள்நாட்டு பணப்பரிமாற்றம் உள்நாட்டு, வெளிநாட்டு பணப்பரிமாற்றம் வெஸ்ரேன் யூனியன் மூலம் உடனுக்குடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு கிடைக்க ஏற்பாடு செய்யப்பட் டுள்ளது என்றும் அத்துடன் வெளி நாட்டு, உள்நாட்டுப் பொதிகள் பரிமாற்றம், ஈமெயில் சேவை, தேசிய சேமிப்பு வங்கிக்குரிய செயற்பாடுகள் நிரந்தரவைப்பு, சேமிப்புக்கணக்கு போன்ற சேவைகளையும் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தபாலதிபர் தெரிவித்தார். மேலும் உள்நாட்டு, வெளிநாட்டு சேவைகளின் மூலம் சம்பந்தப்பட்டவர்கள் உடனுக்குடன் தமது தரவுகளைப் பெற்றுக்கொள்ளவும் முடியும் எனவும் மின்சாரக் கட்டணம் மற்றும் பொலிஸ் தண்டப்பணம் என்பவற்றை உடனடியாகச் செலுத்தும் வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (த-36)

# பச்சிலைப்பள்ளி மேற்கில் தினமும் மணல் திருட்டு

பளை, ஒக்.25

பச்சிலைப்பள்ளி மேற்குப் பிரதேசத்தில் மீளக்குடியமர அனுமதிக்கப்படாத பகுதிகளிலிருந்து தினமும் பெருமளவு வாகனங்களில் மணல் ஏற்றிச் செல்வதாக அயல் கிராம மக்கள் தெரிவித்தனர்.

அயல் கிராமமான அரசர் கேணி வழியாக வரும் வாகனங்கள் இத்தாவில் பகுதிகளில் மக்களை மீளக்குடியமர அனுமதிக்காத பகுதிகளிலிருந்து பெருமளவு மணல் ஏற்றிச் செல்வதைக் காணமுடிவதாகவும் தெரிவித்தனர்.

இந்தப் பிரதேசத்தில் இன்னமும் வெடிப்பொருள்கள் அகற்றப்படாததால் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்காத இந்தப் பகுதியில் வாகனங்கள் சென்று வருவது எந்தவகையில் சாத்தியமாகிறது எனவும் மக்கள் தெரிவித்தனர். (த-207)

# 1 பவுசர் தண்ணீர் 1500 ரூபா

தென்மராட்சி, ஒக்.25

சாவகச்சேரி நகரசபையினால் ஆலயங்கள், பாடசாலைகள் மற்றும் பொது நிகழ்வுகளுக்கு இலவசமாக பவுசரில் வழங்கப்பட்டு வந்த குடிதண்ணீருக்கு இனிவரும் காலங்களில் சேவைக் கட்டணமாக ஒரு பவுசர் குடிதண்ணீருக்கு ஆயிரத்து 500 ரூபா அறவிட நகர சபைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் இந்தச் சேவை இலவசமாக விநியோகிக்கப்பட்டு வந்ததாகவும் இந்த சேவைக்கு வாகனத்தைப் பயன்படுத்தும் போது ஏற்படும் எரிபொருள் செலவு மற்றும் அதில் பணிபுரியும் சாரதி மற்றும் தொழிலாளியின் வேதனம் ஆகியவற்றின் ஒரு பகுதியாக ஆயிரத்து 500 ரூபாவினை சேவைக் கட்டணமாக அறவிடப்படல் வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. (த-207)

# ஈழத்தமிழர்களுக்கான தீர்வு நோக்கி பிரிட்டனில் நீதிக்கான நடைப்பயணம்

ஈழத்தமிழர் பிரச்சினை குறித்து பிரிட்டன் மக்களிடமும், அந்த நாட்டு அரசிடமும் நீதி கேட்டு, மன்செஸ்டர் நகரில் இருந்து லண்டன் மாநகரம் வரையிலான நீதிக்கான நடைப் பயணமொன்று ஜெய சங்கர் முருகையா என்பவரால் ஆரம்பிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 29 ஆம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் 7 ஆம் திகதி வரை இந்த நடை பயணம் பிரதான ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து முன்னெடுக்கப்படவுள்ளது.

அந்த பிரதான ஐந்து கோரிக்கைகளாவன:

ஈழத்தமிழர்களின் மீதான இலங்கையின் இனப் படுகொலையையும், போர்க்குற்றங்களையும், மானுடத்திற்கு எதிரான குற்றங்களையும் விசாரிப்பதற்காக ஒரு சுயாதீனமான, நீதியான, சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் ஒன்று உருவாக்கப்படல் வேண்டும்.

ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதோடு, ஈழத்தில் சர்வதேச சமுகத்தின் மத்தியஸ்தத்துடன் கூடிய ஒரு சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படல் வேண்டும்.

ஈழத்தமிழர்களை ஒரு முற்றான இன அழிப்பிலிருந்து காப்பாற்றும் முகமாகவும், கொடுமைகளை ஆண்டாண்டு காலமாக அனுபவித்து வரும் ஈழத் தமிழர்களுக்கு நிவாரணம் அளிக்கும் முகமாகவும், ஈழத்தில் ஈழத்தமிழர்களின் தனியாட்சி உரிமையினை அங்கீகரிக்க வேண்டும்.

இலங்கை சிறைகளில் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் அனைத்து ஈழத்தமிழ் பொதுமக்களும், முன்னாள் போராளிகளும் உடனடியாக விடுதலை செய்யப்படல் வேண்டும்.

ஈழத்தில் அரசின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் யாவும் உடனடியாக நிறுத்தப்படுவதோடு, அனைத்து ஈழத்தமிழர்களும் அவர்களது சொந்த இடங்களில் மீண்டும் குடியமர்த்தப்படல் வேண்டும்.

இவ்வாறான கோரிக்கைகள் அடங்கிய மனு நீதிக்கான நடைப் பயணத்தின் போது பிரிட்டன் பிரதமரிடமும், அமைச்சர்களிடமும் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் கையளிக்கப்படவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

# குவைத் வீட்டு உரிமையாளர்களிடம் பணம் அதிகம் பெறும் முகவர்கள்

குவைத் நாட்டுக்கு வேலை வாய்ப்புக்காக இலங்கைப் பணிப் பெண்களை அனுப்பும் போது முகவர்கள் குவைத் வீட்டு உரிமையாளர்களிடம் அதிக பணம் பெற்றுக் கொள்வதால் பல பிரச்சினைகள் ஏற்படுவதாக அந்த நாட்டுக்கான வெளிநாட்டு வேலை வாய்ப்பு பிரதிநிதிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதனால் குவைத்தில் உள்ள இலங்கைப் பணிப் பெண்கள் பல காலங்கள் பணிபுரிந்தும் சம்பளத்தை அதிகரித்துக் கொள்ள முடியாத நிலை உள்ளது என்று அந்த சங்கம் குறிப்பிட்டுள்ளது.

சில சமயங்களில் இரண்டு பணிப் பெண்கள் வேலை செய்ய தேவைப்படும் இடத்துக்கு ஒரு பெண் மாத்திரமே அனுப்பி வைக்கப்படுவதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதனால் அதிக வேலை செய்ய முடியாமல் குவைத்தில் வேலை செய்யும் இடத்தில் இருந்து இலங்கைப் பெண்கள் தப்பிச் செல்லும் நிகழ்வுகளும் இடம்பெறுவதாக மேற்படி சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

இந்த விடயங்கள் தொடர்பில் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்த சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது. (வ)

# இத்தாலிக்கு 3,500 பணியாளர்களை 2013ஆம் ஆண்டு முதல் அனுப்ப நடவடிக்கை

இத்தாலிக்கு வேலை வாய்ப்புக்காக இலங்கையில் இருந்து அனுப்பப்படும் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவுள்ளதாக வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலன்பேணல் அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார். அந்த வகையில் எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு தொடக்கம் ஒவ்வொருவருடமும் இத்தாலிக்கு தலா 3500 பணியாளர்களை அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இத்தாலி தொழில் அமைச்சர் மசுரி சியோ சாக்கோனிக்கும் அமைச்சர் டிலான் பெரேராவுக்கும் இடையில் இது தொடர்பான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தின் படி வீட்டுப் பணியாளர்கள், சாரதிகள் உள்ளிட்ட துறைகளில் இலங்கையர்களுக்கு இத்தாலியில் வேலைவாய்ப்பு வழங்கப்படவுள்ளது. அடுத்த வருட மத்தியில் இருந்து இத்தாலி மொழிப் பயிற்சி பாடநெறி ஆரம்பிக்கப்படவுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான தகவல்களை அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் தொடக்கம் பணியகத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

தற்போது சுமார் 75 ஆயிரம் இலங்கையர்கள் இத்தாலியில் பணி புரிந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (வ)

# வைத்தியசாலைகளுக்கு நுளம்பு வலைகள்

யாழ்ப்பாணம், ஒக்.25

யாழ். மாவட்டத்தில் உள்ள அரச வைத்தியசாலைகளுக்கு நுளம்பு வலைகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கென ஒரு தொகுதி நுளம்பு வலைகள் கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்டுள்ளதாக யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

வைத்திய சாலையின் விடுதிகளில் தங்கியிருக்கும் நோயாளர்களுக்கு இந்த நுளம்பு வலைகள் வழங்கப்படும் எனவும் மேற்படி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை அனேகமான வைத்தியசாலை விடுதிகளில் உள்ள நுளம்பு வலைகள் சேதப்பட்டுள்ளதைக் காணக்கூடியதாகக் கூறப்படுகிறது.

(வ-26)

## வழிகாட்டல் நிகழ்வுகள் பிற்போடப்பட்டன

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட (கலை, நடனம், இசை, சித்திரமும் வடிவமைப்பும் மற்றும் சட்டம்) முதலாம் வருட புது முக மாணவர்களுக்கான வழிகாட்டல் நிகழ்வுகள் தவிர்க்க முடியாத காரணங்களால் மறு அறிவித்தல்வரை பிற்போடப்பட்டுள்ளன.

மேற்படி வழிகாட்டல் நிகழ்வுகள் நடைபெறும் திகதி பற்றிய விவரம் பத்திரிகை, வானொலி ஊடாகப் பின்னர் அறியத் தரப்படும் என்று கலைப்பீடாதிபதி பேராசிரியர் நா.ஞானக்குமரன் அறிவித்துள்ளார். (வ)

# கடாபி கொலை சரிதானா?

லிபியாவில் கிளர்ச்சிப் படையினரால் கொல்லப்பட்ட கேணல் கடாபி குறித்து உலக நாடுகளின் தலைவர்கள் பல்வேறு அபிப்பிராயங்களை வெளியிட்டுவரும் நிலையில் உள்ளூர் அரசியற் பிரமுகர்களிடம் நாம் கருத்துக் கேட்டோம்.

## சர்வாதிகார ஆட்சியாளருக்கு இதுவொரு பாடம்

### தயாசிறி ஜயசேகர

நீண்டகாலமாக நாட்டை சர்வாதிகார ஆட்சி செய்யும் தலை வர்களுக்கு லிபிய ஜனாதிபதியின் மரணம் சிறந்த பாடமாகும்.

42 வருடங்களாக சர்வாதிகார முறையில் மும்மர் கடாபி லிபியாவை ஆட்சி செய்தார். அவரது ஆட்சியின்போது அவர் எத்தனை பேரை சுட்டுக் கொல்லும்படி உத்தரவிட்டிருப்பார்? இறுதியில் அவரை கிளர்ச்சியாளர்கள் சுடும்போது,

''என்னை சுட வேண்டாம்'' என ஓலமிட்டுக் கொண்டு ஓடியிருக்கிறார் கடாபி.

உண்மையில் ஒரு சர்வாதிகாரம் நிறைவுக்கு வந்ததை யிட்டு சந்தோஷமடைகின்றோம்.

எனவே, கேணல் கடாபியின் மறைவை அனைத்து சர்வாதிகார ஆட்சியாளர்களும் மனதில் கொள்ள வேண்டும்.

அத்துடன், நாட்டை நீண்ட காலமாக சர்வாதிகார ஆட்சி செய்யும் தலைவர்கள் மக் களிடம் அடிபட்டா அல்லது நாட்டில் ஜனநாய கத்தை ஏற்படுத்திவிட்டா விலக வேண்டும் என்பதையும் சிந்திக்கவேண்டும். அதற்கான தருணம் தற்போது உருவாகியுள்ளது.

இதேவேளை,

லிபியாவில் எதிர்காலத்தில் சிறந்த தொரு தலைவரை ஏற்படுத்துவதற்கான பொறுப்பு மேற்குலக நாடுகளின்கைகளில் உள்ளது.

எதிர் காலத்திலும் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படாத வகையில் மேற் குலக நாடுகள் சிந்தித்து தீர்மானம் எடுப்பது நல்லது - என்றார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர.

## முஸ்லிம்களின் ஐக்கியமின்மையே காரணம்

### அலவி மௌலானா

கேணல் கடாபியின் மரணம் முழு உலக நாடுகளுக்கும் ஓர் இழப்பாகும்.

அமெரிக்கா உள்ளிட்ட சில மேற்குலக நாடுகள் மேற்கொண்ட சதி முயற்சியின் காரணமாகவே கேணல் கடாபி கொலை செய்யப்பட்டார்.

இந்த மேற்குலக நாடுகள் தங்களது வங்குரோத்து நிலைமையை மறைத்துக் கொள்வதற்காக அவற்றை சுட்டிக்காட்டுகின்றன; வளமிக்க நாடுகள் மீது சீறிப்பாய்கின்றன.

இன்று பொருளாதார ரீதியிலும், வளமிக்க முஸ்லிம் நாடுகள் அந்த வளங்களை வைத்துக்கொண்டு பின்னிற்கின்றன. இதனை நன்கறிந்திருக்கும் மேற்குலக நாடுகள் போர் செய்து அந்த வளங்களைக் கைப்பற்ற எத்தனிக்கின்றன.

முஸ்லிம்கள் அனைவரும் ஐக்கியமாக வேண்டும். எம்மிடத்தில் ஐக்கியம் இல்லாத காரணத்தினாலேயே இவ்வாறான இழப்புகள் ஏற்படுகின்றன - என்று மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா கூறினார்.

## நேட்டோ படைகள் அரச தலைவரை கொல்லலாமா?

### டியூ குணசேகர

மத்திய கிழக்கு நாடுகளின் எண்ணெய்வளங்களைமோப்பமிட்டு அமெரிக்கா உள்ளிட்ட சில மேற்குலக நாடுகள் மேற்கொண்ட நடவடிக்கையின் விளைவே இதுவாகும்.

குறிப்பாக முதற் தடவை யாக நேட்டோ படையினர் அரச தலைவர் ஒருவரை கொன்றுள்ளனர்.

அமெரிக்கா உள்ளிட்ட சில மேற்குலக நாடுகள் தங்களது பலங்களைப் பாவித்து லிபியா மீது போர் தொடுத்தன.

அங்குள்ள முக்கியமான வளமாக உள்ள எண்ணெய் வளத்தைக் கைப்பற்றுவதற்கே இந்த நாடுகள் யுத்தம் என்ற போர்வையில் காரியத்தைச் சாதித்துள்ளன.

சர்வாதிகார முறைமை லிபி யாவில் மட்டுமல்ல சவூதி அரேபியா, எகிப்து போன்ற நாடுகளிலும் காணப்படுகின்றது. சில கொள்கைகளில் எழுகின்ற சிக்கல்களே அங்கு புரட்சி ஏற்படுவதற்குக் காரணமாக அமைகின்றது. மேலதிகமாகக் கூறப்போனால், உலகில் அனைவரும் சர்வாதிகார ஆட்சியாளர்களே.

- இவ்வாறு கூறுகிறார் சிரேஷ்ட அமைச்சர் டியூ. குணசேகர.

## இது எதிர்பார்க்கப்பட்ட முடிவுதான்

### சுரேஷ் பிரேமச்சந்திரன்

கேணல் கடாபியின் மரணம், சர்வாதிகாரத்துக்குக் கிடைத்த தண்டனையாகும்.

கடந்த காலங்களில் சர்வாதிகார ஆட்சியாளர்களாக முபாரக், ஈராக்கில் சதாம் ஹுசைன் உள்ளிட்ட பலர் இதற்கு உதாரணங்களாகினர்.

அத்துடன், சர்வாதிகார ஆட்சியாளர்கள் மக்களால் வெளியேற்றப்பட்ட சம்பவங்கள் பல இடம் பெற்றன.

மக்கள் ஆட்சியையே மக்கள் எதிர்பார்க்கின்றனர், சர்வாதிகார ஆட்சியை அல்ல.

எனவே, சர்வாதிகார முறையில் ஆட்சி நடத்தும் தலைவர்களுக்கு இந்த விடயத்தின் முடிவு ஒரு நல்ல படிப்பினையாகும்.

கடாபியின் இந்த முடிவானது அனைவராலும் எதிர்பார்க்கப்பட்டதாகும் - என்று கூறுகிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச் சந்திரன்.

## ஜனநாயகத்துக்கு விரோதமான செயல்

### முத்தலிப் பாவா

கேணல் கடாபியுடன் பேசித் தீர்வு காண வேண்டிய விடயத்துக்கு ஜனநாயக விரோதமான முறையில் மேற்குலகம் நடந்துகொண்டிருக்கிறது.

கேணல் கடாபி சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இவர் லிபியாவின் தலைவர். எனவே, இது ஜனநாயகத்துக்கு விழுந்த அடியாகும். அத்துடன் இது மனித உரிமை மீறலாகும்.

அவர் செய்தது சரியோ, பிழையோ, சர்வதேச ரீதியில் பேச்சு மூலம் தீர்வு கண்டிருக்கலாம். எப்படியிருப்பினும், இது ஒரு கொலை என்றே கருதுகி றோம்.

கடாபியின் சர்வாதிகார ஆட்சியை மாற்றுவதற்கு பேச்சு மூலம் சந்தர்ப்பம் ஏற்பட்டிருந்தது. அதன்போது ஒரு ஜனநாயக வழியில் தீர்வொன்றை எட்டியிருக்கலாம்.

அதைவிடுத்து, கிளர்ச்சிகளை மேற்கொண்டுள்ளது. அதற்கும் மேலாக படை நடவடிக்கையும் மேற்கொள் ளப்பட்டது.

இந்த நிலையில் கேணல் கடாபி சுட்டுக் கொல்லப்பட்டமை மனித உரிமை மீறலாகும் - என்று தெரிவிக்கின்றார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் முத்தலிப் பாவா பாருக்.

# என்னத்தைச்...

## ...சொல்ல?!

### கோவிலில் பாலாபிஷேகம் செய்வதற்குப் பதிலாக...

ஈழத்தமிழர் பிரச்சினை தமிழர்கட்கு மட்டுமே தெரியும், விளங்கும். தென்கின் அரசியல் தலைவர்கள் இந்தப் பிரச்சினையைச் சரிவர அறிந்து கொள்ளவில்லை என்ற ஒரு கருத்து நம்மிடையே இருந்து வந்துள்ளது.

இது எத்தனை தவறானது என்பதனை அண்மையில் ஒரு திசைக்கு, ஜே.வி.பியின் தலைவர் சோமவன்சா - வழங்கிய பேட்டியும், அவர் தெற்கில் பேசுகின்ற பேச்சுக்களும் ஒரு வகையில் உணர்த்தி நிற்கின்றன.

இவர் வன்னி வரை சென்றதையும், அகதி முகாம்களை பார்வையிட்டதும், (அரசியலுக்காக வகுப்பு வாதத்தைக் கக்கினாலும்) இவர் ஒரு மனித நேயம் மிக்க இடது சாரித் தலைவர் என்பதனை உணர்த்துகின்றது. வடக்கில் மட்டும் நாற்பத்தோராயிரம் (41 ஆயிரம்) விதவைகள் இருக்கிறார்கள் என்பதை நமது தலைவர்கள் எடுத்துக்கூறத் தயக்கம் காட்டும் இந்த வேளையில் அல்லது அக்கறை காட்டாத காலத்தில் இது பற்றி ஒரு சிங்கள அரசியல்வாதி சிந்திப்பது; எம்மைச் சிந்திக்க வைக்கின்றது.

அத்தோடு அவர் நின்றுவிடவில்லை - அகதி முகாம்களில் கூரை அற்ற வீடுகளையும், அங்கு குடிகொண்ட நோய்களையும், வெள்ளத்தினால் அகதி முகாம்கள் மிதப்பதையும் அவர் சொல்லும் அளவுக்கு நமது தலைவர்கள் வெளி உலகத்துக்குச் சொல்லவில்லை. ஆதங்கப்படவில்லை என்பது நாடறிந்த உண்மை.

இவற்றைக் குறிப்பிடுவதற்குக் காரணம் இல்லாமல் இல்லை ஒரு சுதந்திரப்போரோ இன அழிப்புப் போரோ நடந்து முடிந்தால், அகதிகளும், அவலக்குரலும், அநாதைகளும், விதைவைகளும், பல்கிப்பெருகுவது வழமையே.

இப்படியான காலகட்டத்தில் ஒவ்வொரு நாட்டிலும் பல்வேறு பெரியார்கள் அரசியலுக்கு அப்பால், அளப்பரும் சேவை செய்து வந்ததை உலகறியும்.

ஜெயப்பிரகாஷ் நாராயணன் ஆச்சாரிய வினோபாபாவே, ஆச்சாரியா கிருபளானி, அன்னை திரேசா, ஆங்கி சூச்சி? போன்ற பலர் இப்படியாக, அரசியல் கலப்பில்லாமல் அபூர்வ தொண்டு செய்து வந்தனர். அண்மையில் அண்ணா கசாரே ஆற்றும் சேவை, காலத்தை வென்று நிற்கின்றது.

இந்திய விடுதலைக்குப் பின்னர் எண்ணற்ற தியாகிகள் தமது உடல், பொருள், ஆவி, அனைத்தையுமே இந்தியக் குடிமக்களது மறுவாழ்வுக்கு அர்பணித்த செயற்பாடுகள் - வரலாறு ஆகிவிட்டன. கவிஞர்களும், இலக்கிய ஆர்வலர்களும், சமூக நலத் தொண்டர்களும் கூட விதைவைகள் திருமணத்தை, சாதிக்கொடுமையை, முன் நிறுத்தி ஆற்றிய சேவையும் வரலாறாகி விட்டது.

இந்த நிலையில், நம்மவர் இன அழிப்பின் பின் எப்படி நடந்து கொள்கின்றனர் என்பதை எண்ணிப் பார்த்தால் வேதனைதான் மேலோங்கி நிற்கின்றது.

வன்னியில் இருந்து வரும் புகைப்படங்களும், செய்திகளும், எம் உறவுகள் படும் பாட்டை உணர்த்தி நிற்கின்றன. ஆனால் வன்னியால் குடாநாடு வந்தவர்களும், இங்குள்ள கனவான்களும், பிறநாட்டில் இருந்து வருபவர்களும் ஒரு பெரிய ' கைங்கரியத்தைச் ' செய்கின்றனர். - அது என்னவெனில் 'கோயில் கட்டி குடமுழுக் காட்டுவது"!.

மாதமொரு கோயில், திருப்பணி முடிந்து குடமுழுக்காட்டப்படுகின்றது - இதற்கு அதனை விளம்பரப்படுத்துவதற்கு மட்டும் பல ஆயிரம் செலவாகும். இங்கே கோயில் திருப்பணியை குறை கூறுவதல்ல இதன்நோக்கம்.

கோயில் திருப்பணியும், கோபுரமும்,தேரும் பல இலட்சத்தை விழுங்கிவிட, கணவனை இழந்த நாற்பத்தோராயிரம் விதைவைகள் தம் மகளுக்கு கஞ்சி பருக்கவே காசின்றி நலிந்து போயுள்ளனர் என்று எண்ணும் போது நாம் உண்மையில் சைவர்கள் தானா? அன்பும், சிவமும், பிறிதல்ல என்றும், அன்பே சிவம் என்றும் அறிந்தும், அநாதையின் அழுகுரல் கேட்கவில்லை என்றால் ஆண்டவன் எமக்குக் கருணை புரிவானா? எந்த விடயத்திலேனும் உதவிக்கு வருவானா?

போரினால் விதவைகளானோரை விதவைகள்சவே மாண்டு மடிய விடாது, விதவைகளுக்கான மறு மலர்ச்சித் திருமணத்தைச் செய்து வைக்க முன்வரக்கூடாதா? பத்து விதவைகட்கு பக்குவமாய் மணம் முடித்து வைத்தால் பத்துக் கோயில்களுக்கு பால் அபிஷேகம் செய்து குடமுழுக் காட்டிய பலன் கிட்டுமன்றோ?

சிந்திக்கத் தெரிந்த மனிதர்களுக்கு இது சமர்ப்பணம்.



பிரசண்டன்

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அமெரிக்கப் பயணம் தமிழ் மக்களின் பிரச்சினைகளை உலகறியச் செய்யும்

## புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் கூறுகிறார்



கொழும்பு,ஒக்.25

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அமெரிக்கப் பயணம் தமிழ் மக்களின் பிரச்சினைகளை, உலகறியச் செய்யும். தாம் இதனை வரவேற்பதாகவும் புதிய இடதுசாரி முன்னணியின் தலைவரும், தெஹிவளை கல்கிஸை மாநகர சபை உறுப்பினருமான கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெவித்துள்ளார்.

தமிழர்களை அழிப்பதற்கு உதவிய அமெரிக்காவின் செயற்பாடுகள் இந்த விடயத்தில் எந்தளவிற்கு உண்மையாக அமையுமென்பதைக் கூற முடியாது என்று அவர் தெரிவித்துள்ளார்.

கூட்டமைப்பின் அமெரிக்கப் பயணம் அந்த நாட்டிலுள்ள உழைக்கும் வர்க்கத்தினர் மத்தியிலும், உலக உழைக்கும் வர்த்தகத்தினர் மத்தியிலும் தமிழர் பிரச்சினைகளைக் கொண்டுசெல்லமுடியும். ஆனால். மேற்குலகம் மீது எமக்கு நம்பிக்கை இல்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.


தமிழர்களை ஒழிப்பதற்கு அமெரிக்கா முழு ஒத்துழைப்பையும் வழங்கியது. இலங்கை அரசு அமெரிக்காவின் செல்லப்பிள்ளையாகும். எனவே தான் பராக் ஒபாமா பட்டும் படாமலும் அறிக்கைகளை விடுகிறாரே தவிர கடுமையாகத் தமிழ் மக்களுக்கு உரிமைகளை வழங்க வேண்டுமென வலியுறுத்துவதில்லை. இது தான் உண்மை என்று அவர் தெரிவித்துள்ளார். (ச)



காமினி திஸாநாயக்கவின் 17 ஆவது சிரார்த்த தினத்தையொட்டி கொழும்பு ஆனந்த குமாரசுவாமி மாவத்தையில் உள்ள அவரது சிலைக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

# துமிந்த சில்வாவைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் எமக்கு ஒருபோதும் இல்லை

## பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு



துமிந்த சில்வாவைப் பாதுகாக்க வேண்டிய அவசியமில்லை எமக்கு ஒருபோதும் இல்லை என்று பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

துமிந்தவை வைத்தியசாலைக்குச் சென்று பார்வையிட்டமை குறித்து பலர் கேள்வி எழுப்புகின்றனர். இது ஓர் மனிதாபிமான அடிப்படையில் நடைபெற்ற சம்பவமாகும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

சம்பவம் இடம்பெறுவதற்கு முதல் நாள் துமிந்த தமது அபிவிருத்திப் பணிகளுக்கு உதவிகளை வழங்கியிருந்ததாகவும், அடுத்த ஆபத்து ஒன்றில் சிக்கிய போது அவரைப் பார்வையிடுவதில் என்ன தவறு என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார். துமிந்தவை விடவும் பாரதவை தமக்கு நீண்ட காலமாகத் தெரியும். பாரத ஜனாதிபதியின் நெருங்க ஆதரவாளர் எனவும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

யதார்த்தத்திற்கு முகம் கொடுக்க முடியாத பலர் துமிந்தவைச் சென்று பார்வையிடவில்லை எனவும், நாட்டின் இறைமைக்கு அச்சுறுத்தலாக செயற்பட்டு வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களுடன் சிலர் தொடர்புகளைப் பேணி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச)

# அழகுக்கலை நிலையங்களும் சோதனைக்கு

கொழும்பு,ஒக்.25

உரியதரத்தில் அழகுக் கலை நிலையங்கள் இயங்குகின்றனவா என்பது குறித்து சோதனை நடத்தப்படஉள்ளது. இந்த நடவடிக்கை சுகாதார அமைச்சினால் எடுக்கப்பட்டுள்ளதாகக் தெரிவிக்கப்படுகின்றது.

பதிவு செய்யப்படாத அழகுக் கலை சாதனங்கள் மற்றும் பொருள்கள்பயன்படுத்தப்படுகின்றனவா என்று கண்காணிக்கப்பட உள்ளது. மேனி அழகை மெருகூட்டுவதற்காகச் செல்லும் பல யுவதிகள் வேறு நோய்களினால் பாதிக்கப்படுவதாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச)

# சித்திரவதைக்கு எதிரான சட்டங்களில் அரசு திருத்தங்களைச் செய்ய வேண்டும்

## சர்வதேச ஜூரிகள் குழு கோரிக்கை

கொழும்பு,ஒக்.25

சித்திரவதைக்கு எதிரான சட்டங்களில் இலங்கை அரசு திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்று சர்வதேச ஜூரிகள்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

சித்திரவதைக்கு எதிரான ஐக்கிய நாடுகள் பிரகடனத்திற்கு அமைவான வகையில் இலங்கைச் சட்டத்திலும் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

சித்திரவதைகளுக்கு எதிரான சர்வதேசப் பிரகடனங்களுக்கு ஏற்றவகையில் இலங்கைச் சட்டங்களில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டியது. அவசியமானது என்று அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசரகாலச் சட்டம் போன்றவற்றின் கீழ் கைது செய்யப்பட்டவர்களுக்கு நியாயம் கிட்டக்கூடிய வகையில் சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குற்றச் செயல்களில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளையும் முழுமையாகப் பாதுகாக்கும் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் சித்திரவதைக்கு எதிரான சட்டங்களில் திருத்தம் செய்யப்பட வேண்டுமென ஐக்கிய நாடுக்ள் அமைப்பிற்கு சர்வதேச ஜூரிகள் சபை பரிந்துரை செய்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# சுகாதார நடவடிக்கைகள் முன்னெடுக்காமையால் கரைச்சிப் பிரதேசத்தில் தொற்றுநோய் அபாயம்

கிளிநொச்சி, ஒக்.25

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசத்தில் சுகாதார நடவடிக்கைகள் சரியாக முன்னெடுக்கப்படாத நிலை காணப்படுவதால் தொற்று நோய்கள் பரவும் அபாய நிலை தோன்றியுள்ளது.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசத்தில் பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கான வெற்றிடங்கள் இதுவரை நிரப்பப்படாமல் இருப்பதனாலும் தற்போது உள்ள பொதுச்சுகாதார பரிசோதகர்களில் ஒருவர் இடமாற்றம் பெற்றுள்ளதாலும் இந்தப் பகுதியில் சுகாதாரச் செயற்பாடுகள் சீரான முறையில் முன்னெடுக்கப்படாத நிலை காணப்படுகின்றது.

கரைச்சிப் பிரதேசத்துக்குள் வட்டக்கச்சி, அக்கராயன், வன்னேரிக்குளம் போன்ற பெரிய பிரதேசங்கள் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும் பொதுச் சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கான பதவி வெற்றிடங்கள் இதுவரை நிரப்பப்படவில்லை. அத்துடன் இந்தப் பகுதியில் சேவையாற்றிய இரு பொதுச் சுகாதார உத்தியோகத்தரில் ஒருவர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் இதனால் ஏற்கனவே சீரான முறையில் முன்னெடுக்கப்படாத கிராம மற்றும் நகர மட்டச் சுகாதாரச் செயற்பாடுகள் மேலும் மந்த நிலையில் காணப்படுவதாகவும் பலராலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது பருவ மழை பெய்ய ஆரம்பித்துள்ளதாலும் நகரின் பல இடங்களிலும் கழிவு நீர்தேங்கிக் காணப்படுவதாலும் தொற்று நோய்கள் பரவும் அபாய நிலை காணப்படுவதாகப் பலராலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-6)

# இளைஞர் சேவைகள் மன்றத்தால் விருது வழங்கும் விழா நிகழ்வு

மன்னார் மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் இளைஞர் விருது வழங்கும் விழா 2011 நேற்று முன்தினம் மன்னார் வலயக் கல்விப் பணிமனையின் பிரதான மண்டபத்தில் இடம் பெற்றது.

மன்னார் மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவிப் பணிப்பாளர் என்.எம்.முனவ்பர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வடமாகாணப் பணிப்பாளர் திருமதி எஸ்.விமலேஸ்வரி, அமைச்சர் ரிஸாட் பதியுதீன் நாடாளுமன்ற உறுப்பினர் ஹீனைஸ் பாரூக், மன்னார் மாவட்ட அரச அதிபர் என.வேதநாயகன், மீள் எழுச்சித் திட்டப் பிரதித்திட்டப் பணிப்பாளர் றொபேட் பீரிஸ், அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் ரிப்கான் பதீயுதீன், இளைஞர் நாடா ளுமன்ற உறுப்பினர் முகமட் பாயிஸ் உட்படப் பல அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

நூற்றுக் கணக்கான இளைஞர் யுவதிகள் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் வெற்றி பெற்ற இளைஞர் யுவதிகளுக்குச் சான்றிதழ்களும், வெற்றிக் கேடயங்களும் வழங்கப்பட்டன. (எ)

## மீளக்குடியமர்ந்த மக்களுக்கு என்.ஆர்.சி நிறுவனத்தினால் தற்காலிக வீடுகள்

முல்லைத்தீவு கருநாட்டுக் கேணி, கொக்கிளாய் ஆகிய கிராமங்களில் மீளக்குடியமர்ந்த 120 குடும்பங்களுக்கு என்.ஆர். சி.நிறுவனத்தினால் தற்காலிக வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 1983 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஏற்பட்ட வன்செயல்கள் காரணமாக இடம் பெயர்ந்த இந்தப் பகுதி மக்கள் தற்போது இருபத்தி எட்டு வருடங்களின் பின்னர் மீள்குடியமர்ந்துள்ளனர்.

இவர் களது வீடுகள் யாவும் முழுமையாக அழிவடைந்துள்ளன. இதனால் தற்காலிகமாக அமைக்கப்பட்ட தறப்பாள் கொட்டகைகளிலும் தகரக் கூடாரங் களிலும் வாழ்ந்து வந்தனர். இந்த நிலையில் முதல் கட்ட மாக கருநாட்டுக் கேணி, கொக் கிளாய் ஆகிய பகுதிகளில் என்.ஆர்.சி.நிறுவனத்தினால் 120 தற்காலிக வீடுகள் அமைக் கப்பட்டு இந்தக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஏனைய குடும்பங்களுக்கும் வீடுகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருவதாக அந்த நிறுவனத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-6)

**சொந்த மண்ணில் எமக்கேன் இந்தக் கதி...?**



விடிவு கிடைக்குமா? -முல்லைத்தீவு மாவட்டம் தேவிபுரத்தில் யுத்தத்தின் போது மக்களால் கைவிடப்பட்ட வாகனங்கள் அநாதரவான நிலையில் காணப்படுகின்றன. (க- 433)

## மனனப் போட்டி முடிவுகள்

கிளிநொச்சி கல்வி வலயத்தின் பளைக் கோட்ட மட்டத்தில் நடைபெற்ற ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான திருக்குறள் மனனப் போட்டி முடிவுகள் வருமாறு:

தரம்-1 - கணேசலிங் கம் ஸ்ரீமதி- சோரன்பற்று கணேசா வித்தி, பாலகிருஸ்ணன் அபிராம் - பளை மத்திய கல்லூரி, செல்வக்குமார் மிதுசன் - சோரன்பற்று கணேசா வித்தி.

தரம்- 2- கெனிக லிஸ்ரஸ் நிரூசன் - பளை மத் திய கல்லூரி, தேவசகாயம் அனு சிகா- பளை றோ.க.த.க.பா, ருபேந்திரன் கிருத்திகா - பளை றோ. க.த.க.பா.

தரம்- 3- கெனிகலிஸ் ரஸ் கனிஸ்ரலா- பளை மத்திய கல்லூரி, திரவியரட்ணம் அபிராம் - பளை மத்திய கல்லூரி, கேதீஸ்வரன் கிசேரன் - பளை மத்திய கல்லூரி. *(தொடரும்)*

**நிரந்தர நியமனம் வழங்கப்படாததால்**

# விரக்தியின் விளிம்புக்குத் தள்ளப்பட்ட வன்னிப் பகுதி தொண்டர் ஆசிரியர்கள்

கிளிநொச்சி, ஒக்.25

வன்னிப் பெரு நிலப்பரப்பில் உள்ள பாடசாலைகளில் பணிபுரியும் ஆயிரத்துக்கு மேற்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் நீண்டகாலமாக நிரந்தர நியமனம் கோரியும் பயன் கிடைக்காததால் விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

கடந்த 2005 ஆம் ஆண்டு மூன்று வருட தொண்டர் ஆசிரியர் சேவையைப் பூர்த்தி செய்தவர்களின் விவரங்கள் பெறப்பட்டு ஆளுநரின் பணிப்பின் பேரில் நேர்முகத் தேர்வுகள் நடத்தப்பட்டன. ஆனால் பல மாதங்களாகியும் நியமனம் வழங்கப்படாதது குறித்து இவர்களால் கவலை தெரிவிக்கப்பட்டது.

தமக்கு நியமனம் பெற்றுத் தருமாறு பல்வேறு தரப்புடன் நேரடியாகவும் கடிதங்கள் மூலமும் தொடர்பு கொண்டுள்ள போதிலும் தமது கோரிக்கையை ஏற்றுச் செயற்படுத்த எவரும் முன்வரவில்லை எனவும் இவர்கள் தெரிவித்தனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், மடு, வடமராட்சி கிழக்கு, வவுனியா வடக்கு ஆகிய கல்வி வலயங்களிலுள்ள பாடசாலைகளில் பணிபுரியும் தொண்டர் ஆசிரியர்களே தமக்கு நிரந்தர நியமனம் கோரி நிற்கின்றனர்.

இதேவேளை,

எதிர்காலத்தில் தொண்டராசிரியர்களாக எவரும் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்களென அமைச்சரொருவர் நாடாளுமன்றத்தில் அறிவித்தமை குறிப்பிடத்தக்கதாகும். (க- 207)

# கிளிநொச்சியில் இந்த ஆண்டு காலபோகத்தில் 17 ஆயிரத்து 300 ஏக்கரில் நெற்செய்கை

கிளிநொச்சி கமநல சேவை நிலையத்தின் கீழ் இவ்வாண்டு காலபோக நெற்செய்கை சுமார் 17 ஆயிரத்து 300 ஏக்கர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள காணிகள் யாவும் இவ்வாண்டு காலபோக செய்கைகளுக்கு உட்படுத்தபட்டு வருகின்றன.

இதனடிப்படையில் 17 ஆயிரத்து 300 ஏக்கர் நிலப்பரப்பில் காலபோக செய்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இதற்குரிய உரமானியங்களை வழங்கி வருவதாகவும் கிளிநொச்சி கமநல சேவை நிலையத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கிளிநொச்சி கமநல சேவை நிலையத்தால் ஊரியான் உபதிட்டக் குழுவுக்கு நான்கு தெளி கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஊரியான் பிரதேசத்தில் விவசாயிகளின் விவசாயச் செய்கைகளை ஊக்குவிக்கும் வகையிலும் அதிகளவிலான வறிய விவசாயிகளின் நன்மை கருதியும் கிளிநொச்சி கமநல சேவை நிலையத்தால் நான்கு தெளி கருவிகள் ஊரியான் உபதிட்டக் குழு நிர்வாகத் தினரிடம் வழங்கப்பட்டுள்ளன. இதனை விவசாயிகள் தமது தேவைகளுக்கு மட்டுமே பயன்படுத்த முடியும் எனவும் கமநல சேவை நிலையத் தால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-6)

# தேவிபுரம், சுதந்திரபுரம் விவசாயிகளுக்கு சம்பா விதை நெல் விநியோகம்

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர் பிரிவில் மீள் குடியமர்ந்த தேவிபுரம், சுதந்திரபுரம் கிராமங்களில் உள்ள விவசாயிகளுக்கு காலபோக நெற்செய்கைக்கெனச் சம்பா விதை நெல் வழங்கப்பட்டுள்ளது.

மீள்குடியமர்ந்த மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் இந்தச் சம்பா விதை நெல் விவசாயத் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ளது.

தமது விவசாயத்தை மேம்படுத்துவதற்கு எந்தவித உதவிகளும் வழங்கப்படாத நிலையில் இருந்த தமக்கு இத்தகைய உதவி கிடைத்திருப்பது மிகவும் உபயோகமானதாக உள்ளதாக விதைநெல் வழங்கப்பட்ட விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இதைப் போன்று மென்மேலும் உதவிகள் வழங்கப்பட்டால் தமக்குப் பேருதவியதாக அமையுமென வும் இவர்கள் கூறுகின்றனர். (க-500)

# வேயப்படாத சந்தைக் கூரையால் வியாபார நிலையங்களுக்கு பாதிப்பு

கிளிநொச்சிப் பொதுச் சந்தையின் கூரை வேயப்படாத காரணத்தால் தற்போது பெய்து வரும் மழையினால் சந்தை வியாபாரிகள் பெரும் சிரமங் களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கிளிநொச்சி பொதுச்சந்தை தற்போது அம்பாள் குளத்தில் இயங்கி வருகின்றது. இந்தச் சந்தையின் கூரைகள் கிடுகால் வேயப்பட்டுள்ளன. ஆனால் உரிய நேரத்தில் வேயப்படாத காரணத்தால் கிடுகுகள் உக்கிக் காணப்படுகின்றன. இதனால் தற்போது பெய்து வரும் பெரு மழையால் ஒழுக்கு ஏற்பட்டு மழை நீர் வியாபார நிலையங்களுக்குள் உட்புகுந்து வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிரமங்களை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சந்தையானது கரைச்சிப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்டது. இந்தச் சந்தைக் கூரையை வேயவெனப் பிரதேச சபை யால் கிடுகுகள் பறிக்கப்பட்டுப் பல வாரங்கள் ஆனபோதிலும் வேலைகள் நடைபெறவில்லை. இதனால் இந்தக் கிடுகுகள் மழை வெள்ளத்தில் கிடந்து உக்குவதாகவும் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

சந்தையின் கூரை ஒழுகிய நிலையில் சந்தைப் பகுதி சேறும் சகதியுமாகக் காட்சியளிக்கின்றது. இதனால் வியாபாரிகளும் சந்தைக்கு வருவோரும் பாதிப்புக்களுக்கு ஆளாகின்றனர். உரியவர்கள் கவனமெடுத்து சந்தைக்கூரையை வேய்ந்து சிரமங்களைக் குறைப்பதற்கு முன்வர வேண்டு மென வியாபாரிகளும் பொதுமக்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-426)

# வேரவில் இந்துவில் ஆசிரியர் பற்றாக்குறை; ஜனவரியில் தீர்ந்துவிடுமென உறுதிமொழி

ஊர்காவற்றுறை, ஒக்.25

கிளிநொச்சி, வேரவில் இந்து மகா வித்தியாலயத்தில் பிரதான பாடங் களைப் போதிப்பதற்கு ஆசிரியர்கள் இதுவரை நியமிக்கப் படாததால் தமது பிள்ளைகளின் எதிர்காலம் கேள்விக் குறியாகியுள்ளதாகப் பெற்றோர்கள் கல்வி அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ள மனுவொன்றில் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இந்தப் பாடசாலையில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு விஞ்ஞானம், தமிழ், சமயம், சங்கீதம், விவசாயம் போன்ற பாடங்களைக் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் இதுவரை நியமிக்கப்படவில்லை.

அதேபோன்று ஆரம்பப் பிரிவில் தரம் நான்குக்குக் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் இல்லை. உயரதரப் பிரிவிலும் தமிழ், இந்துநாகரிகம், வரலாறு போன்ற பாடங்களைக் கற்பிப்பதற்கு ஆசிரியர் இல்லாத நிலையே காணப்படுகின்றது.

இதுவிடயம் குறித்து கல்வி அதிகாரிகளுக்கு பல தடவை பெற்றோரால் தெரியப்படுத்தப் பட்ட போதும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், அண்மையில் சங்கீதம், நாடகமும் அரங்கியலும் பாடங்களுக்குப் புதிதாக ஆசிரியர்கள் நியமிக்கப்பட்ட போதும் அவர்களுக்குக் கடமையேற்ற மறு நாளே வேறு பாடசாலைகளுக்கு அதிகாரிகளால் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி ஏ-9 வீதியை அண்டிய பாடசாலைகளில் ஆசிரியர்கள் மேலதிகமாக உள்ள போதும் அவர்களை ஆசிரியர் பற்றாக்குறை உள்ள பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கு கிளிநொச்சி கல்வி வலய அதிகாரிகள் பாராமுகமாக இருப்பதாகப் பெற்றோர் ஆசிரியர் சங்க உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக விசாரித்த போது கிளிநொச்சிக் கல்வி வலயத்தில் மிகவும் கஷ்டப் பிரதேசத்தில் இந்தப் பாடசாலை அமைந்துள்ளதால் வெளிமாவட்ட ஆசிரியர்கள் இங்கு செல்வதற்கு விரும்புவதில்லையெனவும் ஆனால் எதிர்வரும் ஜனவரி மாதத்தில் இந்தப் பாடசாலையின் ஆசிரியர் பற்றாக்குறை தீர்க்கப்பட்டு விடும் எனவும் உறுதியாகத் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி கல்வி வலயத்துக்குட்பட்ட கஷ்டப் பிரதேசங்களில் அமைந்திருக்கும் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறைப் பிரச்சினை தொடர்ந்த வண்ணமே உள்ளது.

இதனால் இங்கு கல்வி கற்கும் மாணவர்களின் கல்வியில் பெரும் பின்னடைவுகள் காணப்படுகின்றன. (க- 127)

# கோம்பாவிலில் மீள்குடியமரும் மக்களுக்கு தற்காலிக வீடுகள் அமைக்கும் பணிகள்

முல்லைத்தீவு மாவட்டம் கோம்பாவிலில் முதற்கட்டமாக மீள்குடியமர்த்தப்படவிருக்கும் 200 குடும்பங்களுக்கான தற்காலிக வீடுகளை அமைக்கும் பணி துரிதமாக இடம்பெற்று வருகின்றது.

வவுனியா மெனிக் பாம் முகாமிலிருந்து கோம்பாவிலில் மீளக் குடியமர்த்தப்படவுள்ள இந்தக் குடும்பங்களுக்கான அடிப்படை வசதிகளும் சம காலத்தில் செய்து கொடுக்கப்படவுள்ளன.

கோம்பாவிலில் புதிதாக உருவாக்கப்பட்ட மீள்குடியமர்வுக் கிராமத்தில் ஆனந்தபுரம், சிவநகர், மந்துவில் ஆகிய இடங்களைச் சேர்ந்த 200 குடும்பங்கள் மீளக்குடியமர்த்தப்படவுள்ளன.

டிசெம்பர் மாதத்துக்கு முன்பு அனைவரும் மீளக்குடியமர்த்தப்பட இருப்பதால் அங்கு பொதுநோக்குமண்டபம் மற்றும் 13 பொதுக் கிணறுகள் அமைக்கப்படவுள்ளன. அதே வேளை போக்குவரத்துக்கு வசதியாக 15 மில்லியன் ரூபா செலவில் வீதிகளும் புனரமைக்கப்படவுள்ளன. மீளெழுச்சித் திட்டத்தின் கீழ் 10 மில்லியனும் மீளக் குடியேற்ற அமைச்சிலிருந்து 5 மில்லியனும் இந்தத் திட்டத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

மீளக்குடியமரவிருக்கும் மக்களுக்காக அமைக்கப்படவிருக்கும் 200 தற்காலிக வீடுகளில் தற்பொழுது 83 வீடுகள் பூர்த்தியடைந்த நிலையிலுள்ளன.

இந்த மக்களில் ஒரு பகுதினரைக் கோம்பாவிலுக்கு அழைத்துச் சென்று அமைக்கப்பட்டு வரும் வீடுகளை நேரில் காண்பிப்பதற்கான ஒழுங்குகளும் நடைபெற்று வருகின்றன. ஒவ்வொரு வீடும் ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை, இங்கு மீளக் குடியமர்த்தப்படும் மாணவர்கள் அருகிலுள்ள பாடசாலைகளில் கல்வியைத் தொடர்வதற்கான வசதிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (க-15)

# மன்னாரில் டெங்குத் தாக்கத்தை கட்டுப்படுத்த பொலிஸார் நடவடிக்கை

மன்னார், ஒக். 25

மன்னார் மாவட்டத்தில் இந்த வார ஆரம்பத்திலிருந்து இது வரை 10 பேர் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளதாக மன்னார் வைத்தியசாலையின் அத்தியட்சகர் எம்.எச்.எம்.அசாத் தெரிவித்தார்.

இவர்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் அடங்குவதாகவும் இவர்களுக்கு மன்னார் வைத்தியசாலையில் சிகிச்சை வழங்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட ஐவர் ஏற்கனவே சிகிச்சை பெற்று வந்தனர். இவர்களுள் நால்வர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். ஒருவர் சிகிச்சை பெற்று வருகின்றார். இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை மீண்டும் ஐந்து பேர் டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நிலையில் மன்னார் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேர் அடங்குவர். இவர்களுக்குரிய சிகிச்சைகள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது இவர்களின் காய்ச்சல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

இதேவேளை மன்னார் மாவட்டத்தில் டெங்கு நுளம்புகளைக் கட்டுப்படுத்தும் வேலைத் திட்டமொன்றைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். இதன் பிரகாரம் வீடுகள் தோறும் பொலிஸ் குழுவினர் பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர். டெங்கு நுளம்பு பரவக் கூடிய சூழலைக் கொண்ட வீட்டு உரிமையாளர்கள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

இதற்கும் செவி சாய்க்காதவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (க- 601)

## இறைவன் விரும்புவான்...




உன்னதமான சேவை - புதுக்குடியிருப்பில் அமைந்திருக்கும் இனிய வாழ்வு இல்லச் சிறார்களுக்குச் சுன்னாகம் றோட்டறக்ட் கழக அங்கத்தவர்கள் புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழ் மக்களின் உதவியுடன் பெறப்பட்ட உடைகளை வழங்குகின்றனர்.

# வேலிகள் இல்லாத சந்தைகள்

பூநகரிப் பிரதேச சபைக்கு உட்பட்ட ஜெயபுரம், நாச்சிக்குடா சந்தைகள் வேலியை இழந்த நிலையில் கால்நடைகளின் இருப்பிடமாக மாறியுள்ளன.

இதனால் சந்தை மிகவும் அசுத்தமாகக் காணப்படுவதோடு சந்தை வியாபாரிகள் நாளாந்தம் சிரமங்களை எதிர்நோக்கியும் வருகின்றனர். இதனால் தினமும் சந்தையைச் சுத்தம் செய்த பின்னரே இவர்கள் தமது வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளனர்.

சந்தை வரியை ஒழுங்காக அறவிடும் பூநகரி பிரதேச சபையினர் சந்தைப் பராமரிப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லையென வியாபாரிகள் கவலை தெரிவிக்கின்றனர். எனவே பிரதேச சபையினர் இதில் அக்கறை செலுத்தி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-406)

# வெள்ள நீரினால் அவதியுறும் மன்னார் மூர் வீதிப் பகுதி மக்கள்



மன்னார், ஒக்.25

மழைக்காலம் ஆரம்பித்த நிலையில் மன்னாரில் மூர் வீதிப் பகுதியிலுள்ள மக்கள் வெள்ள நீரால் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இந்தப் பகுதியிலுள்ள வீதிகள் மற்றும் கழிவு வாய்க்கால்களைச் சீர் செய்யுமாறு மக்கள் பலமுறை வேண்டுகோள் விடுத்த போதிலும் அது கவனத்தில் கொள்ளப்படாமையால் இந்த அவலநிலை தோன்றியுள்ளது.

மன்னார் மூர் வீதி அல்- அஸ்கர் மகா வித்தியாலயத்துக்குச் செல்லும் பிரதான வீதியின் ஒரு பகுதியில் கடந்த ஒரு வருடத்துக்கு முன்னர் செம்மண் கொட்டப்பட்டு அது பரவிய நிலையில் காணப்படு கின்றது. மேலும் மழைக் காலங்களில் பல பகுதிகளிலுமிருந்து வரும் வெள்ள நீர் இந்த வீதியூடாக வந்து குளத்தில் கலப்பது வழமையானது.

ஆனால் இந்த வீதி புனரமைக்கப்படாது உள்ளதுடன் கழிவு நீர் செல்வதற்கான வாய்க்கால்களும் இல்லாததால் மழை நீர் வீதிகளிலும் அருகிலுள்ள வீடுகளுக்குள்ளும் தேங்கி நிற்கின்றது. அத்துடன் கொட்டப்பட்ட செம்மண்ணும் கரைந்து சேறுபோலக் காட்சியளிக்கின்றது.

இதனால் வீட்டிலுள்ளவர்களும் வீதியால் பயணிப்பவர்களும் பாடசாலை செல்லும் மாணவர்களும் பெரும் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

நிலைமை மோசமாக மாறுவதற்கு முன்னர் நகரசபையினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டு மென்பதே இந்தப் பகுதி மக்களின் முக்கிய கோரிக்கை யாகவுள்ளது. (க-601)

# கால்நடைகளை கட்டுப்படுத்துமாறு கமக்கார அமைப்பினர் அறிவித்தல்

பூநகரி, ஒக்.25

பூநகரி கொல்லக்குறிச்சி கமக்கார அமைப்பினர் கட்டாக் காலிகளாக அலைந்து பயிர் களுக்கு அழிவை ஏற்படுத்தி வரும் கால்நடைகளை உடனடியாகக் கட்டுப்படுத்துமாறு பகிரங்க அறிவித்தலொன்றை விடுத்துள்ளனர்.

தற்போது காலபோக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டு நெற்பயிர்கள் முளைவிட்ட நிலையில் கால்நடைகளால் பயிர்களுக்கு அழிவு ஏற்பட்டு வருகின்றது.

கால்நடை உரிமையாளர்கள் இவற்றைக் கட்டுப்படுத்தாது விட்டால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட இருக்கின்றது.

கட்டாக்காலிகளாக அலைந்து திரியும் கால்நடைகள் பிடிகாரர் மூலம் பிடிக்கப்பட்டால் குற்றப் பணம், பிடிகூலி, பராமரிப்புக் கூலி என்பன அறவிடப்படும்.

மேலும் பின்வரும் அறிவித்தல்களையும் அவர்கள் விடுத்துள்ளனர்.

வயல் வெளிகளில் கட்டாக் காலிகளாக உலா வரும் கால்நடைகளைத் தற்போது தண்ணீர் உள்ள பெரிய தம்பிராய் குளத்துக்குக் கொண்டு செல்லுதல் வேண்டும்.

வங்கியில் கடன்பெற்று அதனை மீளச் செலுத்தாதவர்கள் உடனடியாகச் செலுத்துதல் வேண்டும்.

நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் வங்கிக் கடனைப் பெற விரும்பினால் உடனடியாகக் கமக்கார அமைப்புடன் தொடர்பு கொள்ளுதல் வேண்டும்.

மேலும் கடனாகப் பெற்ற வெங்காயத்தைத் திரும்ப ஒப்படைத்தல் வேண்டும். (க-406)

# 50 ஆண்டுகால மக்கள் சேவையை பெருமையுடன் கொண்டாடும் மக்கள் வங்கி



இலங்கை முழுவதும் பரந்தளவில் 703 கிளைகள் மற்றும் சேவை நிலையங்களையும், இலங்கை மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் நிதி சேவைகளையும் வழங்கிடும் மக்கள் வங்கியானது இத்தேச மக்களின் சமூக வாழ்வினை உயர்த்திட என்றும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறது. மக்கள் வங்கியின் பொன்விழா வீடமைப்பு வேலைத்திட்டம் அந்தச் சமூகப் பொறுப்பின் ஓர் அங் கமே ஆகும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைப் பிரகாரம் மக்கள் வங்கி ஊழியர்களின் ஒத்துழைப்புடன் ரூபா 60 மில்லியன் செலவில் மதவாச்சி - மன்னார் வீதியில் மடுப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட 50 வீடுகள் மக்களிடம் கையளிக்கப்படுகின்றன. இச்சமூகப் பணி வடக்கு, கிழக்கு யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் முயற்சியின் ஒரு படிக்கல்லாகும்.

1961ஆம் ஆண்டு முல்லைத்தீவில் தமது கிளையினைத் திறந்து வைத்ததன் மூலம் வடக்கு மக்களுக்கு தமது சேவையை விஸ்தரித்தது. அத்தோடு வேறு எந்த வங்கிக்கு முன்னரும் யாழ்ப்பாணம், காங்கேசன் துறை, வவுனியா, மட்டக்களப்பு மற்றும் கிளிநொச்சி போன்ற பிரதேசங்களில் தனது கிளைகளை ஆரம்பித்தது.

மக்கள் வங்கியின் தலைவர் டபிள்யூ. கருணாஜீவ இது பற்றித் தகவல் தருகையில், 'மக்கள் வங்கி இந்நாட்டு மக்களுக்கு அரை நூற்றாண்டு காலமாக வங்கி மற்றும் நிதி வசதிகளைப் பெற்றுக்கொடுத்து, சமூக மற்றும் கலாசார வளர்ச்சிக்காகத் தொடர்ந்தும், பெருமளவு பங்களிப்பை வழங்கி வருகிறது. கடந்த காலப்பகுதியில் எமது நாடு முகம்கொடுத்த பல்வேறு பிரச்சினைகளின் போது, பாதிக்கப்பட்ட மக்களுக்காக உடனடியாக உதவிகள் புரிவதற்கு மக்கள் வங்கியோடு அதன் ஊழியர்களும் தமது பங்களிப்பை வழங்கியமை ஒரு விசேடத்துவமாகும். அத்துடன், நின்றுவிடாது. மீளமைக்கப்படும் வடக்கு மக்களுக்காக அமைக்கப்பட்ட 50 வீடுகள் கொண்ட வீடமைப்புத் திட்டத்திற்கும் மக்கள் வங்கியின் ஊழியர்கள் வழங்கிய பங்களிப்பு மிகச்சிறந்ததாகும். இந்த மாபெரும் சமூக நலன்களுக்காக அவர்களுக்கு நன்றி செலுத்த இந்தச் சந்தர்ப்பத்தை நான் பயன்படுத்திக்கொள்கின்றேன்.' என்று கூறினார்.

யுத்தம் முடிவடைந்தவுடன் வங்கி பரந்தன், கிளிநொச்சி, மாங்குளம், காங்கேசன்துறை மற்றும் முல்லைத்தீவுப் பிரதேசங்களில் நவீன வசதிகளைக் கொண்ட கிளைகளையும் மற்றும் 'சேவை நிலையங்களை யும் ஒரே நாளில் திறந்து வைத்தது. செட்டிகுளம், கிராண், திரன்குளம் ஆகிய பிரதேசங்களிலும் எதிர்காலத்தில் கிள்ளகளை திறக்கத் திட்டமிடப்பட்டுள்ளதுடன் இதுவரை மக்கள் வங்கியானது வடக்கு, கிழக்குப் பிரதேசத்தில் கொண்டுள்ள கிளைகள் மற்றும் சேவை நிலையங்களின் எண்ணிக்கை 100 இலும் அதிகமாகும். (த)

# முதலாவது முழுமையான ஆடைகளின் தொகுதியை அறிமுகப்படுத்தும் ஹமீடியா




இலங்கையின் ஆண்கள் ஆடைத்துறையில் நிபுணத் துவம் பெற்ற முன்னணி நிறுவனமான ஹமீடியா, தனது முதலாவது முழுமையான 'ஆடைகளின் தொகுதி' (Wardrobe) இனை அறிமுகப்படுத்தியுள்ளது. அனுபவம் பெற்ற கிரிக்கெட் வீரரான அஞ்சலோ மெத்தியூஸ் ஆடுகளத்தில் வெளிப்படுத்திய சிறப்புத்துவத்தை அங்கீகரிக்கும் வகையில் அவருக்கு இந்த முழுமையான ஆடைகளின் தொகுதியை ஹமீடியா வழங்கிக் கௌரவித்துள்ளது. இதற்கமைய ஹமீடியா நிறுவனத்தினால் மெருகூட்டப்பட்ட Wardrobe இனை பயன்படுத்தும் முதலாவது நபராக மெத்தியூஸ் திகழ்கின்றார்.

இந்த நிகழ்வு கொழும்பு கிரஸ்கட் போல்வர்ட்டில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கூட்டாண்மை நிறுவனங்களின் உயர் அதிகாரிகள், நலன்விரும்பிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் எனப் பெருந்தொகையானோர் பிரசன்னமாகியிருந்தனர். Wardrobe என்ற பெயர் குறிப்பிடுவதைப்போலவே பல்வேறுபட்ட வைபவங்களில் தமது நிறுவனங்களையும் மற்றும் தம்மை சுயமாகவும் பிரதிநிதித்துவம் செய்யும் அதேநேரம், இவ்வாறான அனைத்து வேளைகளிலும் மிகவும் கச்சிதமாக ஆடை அணிந்திருக்க வேண்டும் என்று விரும்புகின்ற நவீனகால கூட்டாண்மை அதிகாரிகளை இதிலுள்ள தெரிவுகள் இலக்காகக் கொண்டுள்ளன. சொற்ப நேரத்தில், சௌகரியமான வகையில் ஆடைகளைத் தேடி எடுத்துக்கொள்ளக்கூடிய வசதி உள்ளிட்ட பல சிறப்பம்சங்கள் (அலுமாரி வடிவிலான) இந்த 'ஆடைகளின் தொகுதி' யில் காணப்படுகின்றன. இந்த ஆடைகளின் தொகுதியானது Platinum மற் றும் Gold என்ற இரு தெரிவுகளைக் கொண்டுள்ளது. Platinum ஆனது Georgio Armani, Hugo Boss போன்ற சர்வதேச வர்த்தகக் குறியீடுகளுக்கு இணையான முதல்தர மற்றும் சொகுசு ஆடைத் தெரிவுகளை உள்ளடக்கியுள்ளது. மறுபுறத்தில் Gold ஆனது உயர் தரமான அதேநேரம் பணத்துக்குப் பெறுமதியை வழங்கும் ஆடைத் தெரிவுகளை உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது. இவ்விரு தெரிவுகளிலான ஆடைகளின் தொகுதியும் என்வோய், FH, லீ பொன்ட் போன்ற வர்த்தகக் குறியீடுகளைக் கொண்ட ஆடைகள் மற்றும் வன் ஹியுசன், லுயிஸ் பிலிப்பி, பார்க் எவனியு, அடிடாஸ் போன்ற பல சர்வதேச வர்த்தகக் குறியீடுகளையும் கொண்டவையாக அமைந்துள்ளன. இதற்கு மேலதிகமாக அனைத்து நிகழ்வுகளுக்கும் பொருத்தமான அணிகலன்கள் மற்றும் பாதணிகளையும் (சம்பிரதாய, கசுவல், ஸ்மார்ட் கசுவல், பார்ட்டி, வைபவரீதியானவை) 'ஆடைகளின் தொகுதி' தன்னகத்தே கொண்டுள்ளது. இலங்கையில் இவ்வாறான முதலாவது உற்பத்தியைப் பிரகடனப்படுவதற்காகவும் அத்துடன் இந்த ஆடைகளின் தொகுதியை மேலும் பிரத்தியேகமானதாக அமைப்பதற்காகவும் எந்தநேரமும் இயங்கிக்கொண்டிருக்கும் கூட்டாண்மை அதிகாரிகளுக்கான 'வடிவமைப்பு' மற்றும் குறித்த நபரது அலுமாரியை 'அவருக்குரியதாக' வடிவமைத்தல் ஆகிய விடயங்களில் இலங்கையின் மிகவும் வரவேற்பைப் பெற்ற ஆண்கள் ஆடை வடிவமைப்பாளரான பௌசுல் ஹமீட் தனிப்பட்ட ரீதியில் தன்னை ஈடுபடுத்திச் செயற்பட்டுள்ளதுடன் ஒத்துழைப்புகளையும் வழங்கியுள்ளார். இந்த 'ஆடைகளின் தொகுதி' நேரத்தை மீதப்படுத்துவது மட்டுமன்றி கடைசி நிமிடத்தில் ஆடைகளைத் தேடுவதில் உள்ள சிரமங்களையும் இல்லாது செய்கின்றது. (த)

# பீபிள்ஸ் லீசிங் நிறுவனத்தின் 7 மில்லியன் ரூபா பங்குகள்




இலங்கையின் லீசிங் துறையில் முன்னணியில் திகழும் பீபிள்ஸ் லீசிங் வரையறுக்கப்பட்ட நிறுவனம் (PLCL) இரு நாள் வரை காத்திருந்த முதல் பொதுப் பங்கு வெளியீடுகளை **(IPO)** அறிவித்துள்ளது. ரூபா 7,020,000,720,00 ஐ ஈட்டும் நோக்குடன் தலா ரூபா 18 பெறுமதியான 390 மில்லியன் சாதாரண பங்குகளை வெளியிடுவதற்கு நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து நிறுவனத்தின் விநியோகிக்கப்பட்ட மற்றும் கொடுப்பனவு வழங்கப் பட்ட சாதாரண பங்குகளை 25% பெறுமதியுடையதாக புதிய பங்குகள் இருக்கும். எதிர்வரும் நவம்பர் 3ஆம் திகதி முதல் பொதுப்பங்குகள் வெளி யீடுகள் விநியோகிக்கப்பட்டவுள்ளன. தீவிரமாக விரிவாக்கம் அடைந்து வரும் லீசிங் நிறுவனத்தின் வளர்ச்சியில் பங்காளர்களாவதற்கு முதலீட்டாளர்களுக்கு இது அரிய சந்தர்ப்பமாகும்.

''நாட்டில் வேகமாக முன்னேறிவரும் லீசிங் நிறுவனங்களின் ஒன்றான பீபிள்ஸ் லீசிங் நிறுவனம் 20%க்கும் மேற்பட்ட தெளிவான சந்தை பங்குகளுடன் சந்தையில் முன்னணியில் இருப்பதை எவராலும் மறுக்கமுடியாது. அடுத்த தசாப்தத்தில் அதிஉன்னத வளர்ச்சியை அடைவதற்கான ஆற்றலை இந்த நிறுவனம் கொண்டுள்ளது. எதிர்காலத்தில் எமது இலட்சிய வளர்ச்சித் திட்டங்களில் எமது இயலுமையை வலுப் படுத்தும் அதேவேளை, எங்கள் பங்குதாரர்களின் பெறுமதியை விரிவாக்குவதற்கு இந்த **IPO** இற்கு தனிப்பட்ட மற்றும் நிறுவன முதலீட்டாளர்கள் மத்தியிலிருந்து சிறந்த வரவேற்புக் கிடைக்கும் என்பதில் நான் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளேன்.'' என **PLCL** இன் பிரதம நிறைவேற்று அதிகாரி டீ.பி. குமாரகே தெரிவித்தார்.

இந்த **IPO** இனை வரையறுக்கப்பட்ட **NDB** முதலீட்டு வங்கி மற்றும் வரையறுக்கப்பட்ட கெப்பிடல் எலையன்ஸ் ஹோல் டிங்ஸ் என்பன இணைந்து முகாமை செய்கின்றன.

இலங்கையில் மிகவும் நிபுணத்துவம் வாய்ந்த நிறுவனமான **PLCL**, இலங்கையின் அரச வங்கியான மக்கள் வங்கி வாடிக்கையாளர்களுக்கு லீசிங் மற்றும் நிதி சம்பந்தப்பட்ட சேவைகளை நேரடியாக வழங்கும் குறிக்கோளுடன் 1995 ஆம் ஆண்டு மக்கள் வங்கியின் முழு உரித்துடைய துணை நிறுவனமாக **PLCL** ஒன்றிணைக்கப்பட்டது. அன்றுமுதல், மக்கள் வங்கியின் வலிமை மற்றும் ஆதரவுடன் அதன் கிளைகளின் பரந்த வலையமைப்பும் **PLCL** இன் இலக்குச் சார்ந்த மற்றும் பல்வகை முகாமைத்துவ குழுவின் நிபுணத்துவம் என்பன ஊடாக லீசிங் மற்றும் வாடகை கொள்வனவு வசதிகளில் சந்தையில் முன்னணி இடத்தைப் பெற்றுள்ளது. தற்போது **PLCL** சிறு கடன்கள், இஸ்லாமிய நிதிச் சேவைகள், சொத்து மற்றும் இழப்பு காப்புறுதி மற்றும் மேலாண் மைச் செயற்பாடுகள் போன்ற பரந்த அளவிலான நிதிச் சேவைகளை வழங்கி வருகின்றது. (த)




*செலிங்கோ ஆயுள் காப்புறுதி யாழ். கிளையில் 250,000 ரூபா பெறுமதியான காப்புறுதியினை பெற்றுக்கொண்ட சிறீக்காந்தன் என்பவரின் புற்றுநோய் மரண இழப்பீட்டுத் தொகையான 102,000 ரூபா பெறுமதிக்கான காசோலையினை அவரது மனைவியிடம் உதவி அபிவிருத்தி முகாமையாளர் பா.நந்திக்குமார் வழங்குகிறார். அருகில் விற்பனை நிறைவேற்று அதிகாரி க.சிவகரன் காப்புறுதியினை வழங்கிய நிதித்திட்டமிடல் ஆலோசகர் வி.மோகனதாஸ் ஆகியோர் உள்ளனர்.* (த)



*இலங்கை வங்கியின் பூநகரி விரிவாக்கற்கிளை திறப்பு விழா நிகழ்வில் அந்தப்பகுதி மீனவர்களுக்கு மீன்பிடிப் படகுகள் கடனடிப்படையில் வழங்கும் நிகழ்வில் பயனாளியொருவருக்கு படகுக்கான ஆவணங்களை மாகாண உதவிப் பொது முகாமையாளர் கே.டி..கே. சுமணசிறி வழங்குகிறார்.* (த-207)

# சம்பூரில் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு 20 பேர்ச்சஸ் காணியும் 'அரை' நிரந்தர வீடும்

## திருகோணமலை மாவட்ட செயலகம் அறிவிப்பு

திருகோணமலை,ஒக்.25

சம்பூரிலிருந்து இடம்பெயர்ந்துள்ள ஒவ்வொரு குடும்பத்துக்கும் 20 பேர்ச்சஸ் காணியும் அரை நிரந்தர வீடு ஒன்றும் ஆரம்பத்தில் வழங்கப்படும் என்று திருகோணமலை மாவட்டச் செயலகம் தெரிவித்துள்ளது.

'சம்பூர் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கான அன்பான வேண்டுகோள்' என்ற தலைப்பிலான அறிவித்தலில் இந்த விடயத்தை செயலகம் தெரிவித்துள்ளது.

அரசாலும் பிரதேச செயலாளராலும் உங்களை மீளக் குடியமர்த்துவதற்காக சீதன வெளி, வேம்படித்தோட்டம், இளக்கந்தை, வீரமாநகர் வடக்கு, தங்கபுரம் குறவன்வெட்டுவான் ஆகிய பகுதிகளே தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தப் பிரதேசங்களிலேயே காணி வழங்கப்படவுள்ளது. இந்தக்கிராமங்களில் குடியிருக்க விருப்பம் தெரிவிப்பவர்கள் வரிசைக் கிரமப்படி தெரிவு செய்யப்படுவர் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2008.01.29 ஆம் திகதியிலான அதிவிசேட வர்த்தமானி மூலம் விசேட அபிவிருத்தி வலயமாகப் பிரகடனப்படுத்தப் பட்டுள்ள பகுதிகளிலேயே மீள் குடியேற்றம் இடம்பெறவுள்ளது.

2011.01.25 ஆம் திகதிக்குள் மீளக்குடியமர விருப்பம் தெரிவிப்போர் விண்ணப்பப்படிவங்களில் ஒன்று, இரண்டு, மூன்று என்னும் அடிப்படையில் குறிப்பிட வேண்டும். விண்ணப்பப் படிவங்களைப் பிரதேச செயலாளர் அலுவலகத்துக்குவந்து பதிவு செய்து கொள்ளுமாறு மாவட்டச் செயலகம் தெரிவித்துள்ளது. (ச)


# வாடகைக்கு விடப்பட்டுள்ள ஹற்றன் நடைபாதைகள்

நோர்வூட், ஒக்.25

ஹற்றனில் வருமான அதிகரிப்பை முன்னிட்டு நகர சபையால் நடைபாதைகள் வாடகைக்கு விடப்பட்டுள்ளன. பண்டிகைக் காலத்துக்காகத் தற்காலிகமாக வர்த்தகர்களுக்கு நடைபாதைகள் வியாபாரத்துக்காகக் கொடுக்கப்பட்டுள்ளன.

தீபாவளிப் பண்டிகைக்காக தலைநகர் மற்றும் பிற மாவட்டங்களிலிருந்து ஹற்றனுக்குப் பெரும் எண்ணிக்கையில் மக்கள் வந்துபோவர். இதனால் நெருக்கடி ஏற்படும். இதனைக் கருத்திற் கொண்டு பண்டிகைக்கால விற்பனைக்கு ஓர் ஒதுக்குப்புற இடத்தைத் தெரிவுசெய்து கொடுப்பதால், இந்தப் பிரச்சினைத் நீக்கப்படும் என்று பொதுமக்கள் தெரிவிக் கின்றனர். சாதாரண நாள்களில் பொருள்களை இறக்கும் லொறிகளுக்குக் கூட நகரில் நிறுத்தத் தடை விதிக் கப்பட்டுள்ளது.

மக்களின் நலன்கருதி எடுக்கப்படும் நடவடிக்கைகள் வரவேற்கப்படுகின்றன. ஆனால், இவ்வாறான சன நெருக்கடி நிறைந்த நாள்களில் மக்களின் நலனும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர்கள் குறிப்பிடுகின்றனர். (ச)



தேசிய வாசிப்பு மேம்பாட்டு வாரத்தை முன்னிட்டு புத்தகக் கண்காட்சி நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்தநிகழ்வில் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எம்.உதயகுமார், சம்மாந்துறை பிரதேச செயலாளர் ஏ.மன்சூர், அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஏ.ஜே.எம்.இர்ஷாட் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# பணமோசடியில் ஈடுபட்ட முகாமையாளர் பதவி நீக்கம்

மொனராகலை,ஒக்.25

ஒரு லட்சம் ரூபாவை மோசடி செய்த கூட்டுறவு பெண் முகாமையாளர் ஒருவரை வேலையிலிருந்து உடனடியாக நீக்கியுள்ளனர் என்று ஊவா மாகாண கூட்டுறவு ஆணையாளர் தெரிவித்தார்.

மொனராகலை மாவட்டத்திலுள்ள வெல்லவாய, தனமல்விலை பிரதேசத்திலுள்ள கூட்டுறவு வங்கியில் கடமையாற்றிய பெண் வங்கி முகாமையாளர் ஒருவர் பொதுமக்களால் கூட்டுறவு வங்கியில் அடகுவைக்கப்பட்ட நகைகளை, வேறொரு வங்கியில் அதிகளவு பணத்துக்கு ஈடு வைத்துள்ளார். அத்துடன், அடகுச்சீட்டு வழங்காமல் சுமார் ஒரு லட்சம் ரூபாவை முறைகேடான முறையில் கையாண்டு வந்துள்ளார்.

அடைவு வைத்தோர் தமது நகைகளை மீட்கச் சென்ற போதெல்லாம் இன்றில்லை நாளை என்று சாக்குப்போக்குச் சொல்லி காலம் கடத்தி வந்துள்ளார். இதனால் ஆத்திரமடைந்த பொதுமக்கள் இந்தப் பெண் முகாமையாளரின் முறைகேடான நடவடிக்கை குறித்து ஊவா மாகாண கூட்டுறவு ஆணையாளருக்கு அறிவித்துள்ளனர்.

இதையடுத்து, அங்கு சென்ற கூட்டுறவு அதிகாரிகள், பெண் முகாமையாளரின் கைங்கரியத்தைக் கண்டு திகைத்துப் போய் உடனடியாக வேலையிலிருந்து அவரை நீக்கியது மாத்திரமல்லாது சட்ட நடவடிக்கையில் இறங்கியிருக்கின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# மட்டு. சிறைக் கைதி மரணம்

மட்டக்களப்பு,ஒக்.25

மட்டக்களப்பு சிறைச்சாலையிலுள்ள கைதியொருவர் சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்துள்ளார்.

வாழைச்சேனையைச் சேர்ந்த 34 வயதுடைய கைதியே சுகயீனம் காரணமாக உயிரிழந்தவர் ஆவார். இந்தக் கைதி சுகயீனமடைந்த நிலையில் சிறைச்சாலை அதிகாரிகளினால் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டபோது சிகிச்சைபலனின்றி உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர் கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் ஆஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாக ஆள் கடத்தும் நடவடிக்கைக்கு உடந்தையாக இருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற விசாரணையின் பின்னர் சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். தற்போது சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மரண விசாரணையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை சிறைச்சாலை அதிகாரிகள்மேற்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# சூழல் பாதுகாப்புப் பிரிவால் அறுவர் கைது

கல்முனை,ஒக்.25

டெங்கு நுளம்புப் பெருக்கத்திற்கு காரணமாக இருந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் மட்டக்களப்பு, கல்லடியிலுள்ள விருந்தினர் விடுதி உரிமையாளர்கள் இருவர் உட்பட ஆறு பேர் மட்டக்களப்பு சூழல் பாதுகாப்புப் பிரிவினரால் கடந்த வியாழக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சூழல் பாதுகாப்புப் பொலிஸ் பிரிவுப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் புஷ்ப குமார தலைமையிலான குழுவினர், மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்டவர்களுக்கு சுகாதாரப் பொதுப் பரிசோதகர்கள் முன்னிலையில் பிணை வழங்கப்பட்டது. அத்துடன், இவர்களுக்கான வழக்கு விசாரணை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெறவுள்ளது. (ச)

# கிழக்கு மாகாண எம்.பிக்கள் புறக்கணிப்பு கூட்டமைப்பின் அமெ.பயணத்தால் அம்பலம்

## பியசேன எம்.பி. தெரிவிப்பு

அம்பாறை, ஒக்.25

கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப்பீடம் புறக்கணிக்கின்றது என்ற உண்மையைக் கூட்டமைப்பின் அமெரிக்கப் பயணம் அம்பலப்படுத்தியுள்ளது என்று அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொடியப்பு பியசேன தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் அமெரிக்கப் பயணம் குறித்துக் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:

அரசுக்கு நான் ஆதரவு வழங்கத் தீர்மானித்தேன் என்பதை சிலர் விமர்சிக்கின்றனர். இவர்களுக்கு நான் ஏன் இவ்வாறானதொரு தீர்மானத்தை எடுக்க நேரிட்டது என்று இப்பொழுது நன்கு புரிந்திருக்கும்.

கிழக்கு மாகாண மக்களையும், அவர்களின் பிரதிநிதிகளையும் கூட்டமைப்பின் தலைமைப் பீடம் புறக்கணிக்கின்றது. இவ்வாறான கூட்டமைப்பின் செயற்பாடுகளே என்னை அரசு பக்கம் செல்லவைத்தது.

தமிழ் மக்களுக்கும், அரசுக்கும் இடையிலான அந்நியோன்யமான உறவை மீண்டும் ஏற்படுத்த நான் மத்தியஸ்தம் வகிக்கின்றேன். இதுதான் துரோகமா? விமர்சிப்பவர்கள் விடை தாருங்கள் -என்றார். (ச)

# ஹெரோயின் விற்க முயன்றோர் கைது

கண்டி,ஒக்.25

கண்டியில் சட்டவிரோதமாக ஹெரோயின் போதைப்பொருள் விற்பனை செய்ய முயன்றதாகத் தெரிவிக்கப்படும் மூன்று பேர் 8.380 கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் அலவத்து கொடை பொலிஸாரால் கடந்த சனிக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் கொழும்பு, கிரிபத்கொடை பகுதியிலிருந்து கொண்டு வந்து கண்டியில் ஹெரோயின் போதைப்பொருள் விற்பனை செய்ய முயன்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். கொழும்பில் தற்போது போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட முடியாத நிலைமை காணப்படுவதால் கண்டியில் போதைப்பொருள் விற்பனை செய்வதற்காக இங்கு வந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அலவத்துகொடை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து, கடுகன்னாவைப் பகுதியிலுள்ள வீடொன்றைச் சோதனையிட்டபோது இவர்கள் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களிடம் விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# போதைப்பொருள் விற்ற 650 பேர் பொலிஸ் வலையில்

மட்டக்களப்பு,ஒக்.25

மட்டக்களப்பு மாவட்டத்தில் சட்டவிரோதமாகப் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்ட 650 பேர் மாவட்ட மதுவரித் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட மதுவரி அத்தியட்சகர் நடராஜா சுசாதரன் தெரிவித்துள்ளார்.

களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு ஏறாவூர், வாழைச் சேனை மற்றும் வாகரை ஆகிய நீதிமன்றங்களில் இவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டு சுமார் 30 லட்சம் ரூபா தண்டப் பணமாக அறவிடப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவர்களில் அதிகமானோர் மீளக்குடியமர்ந்த வெல்லா வெளி பிரதேச செயலகப் பிரிவிலேயே கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# நகைகளைத் திருடிய பணிப்பெண்

வத்தளை,ஒக்.25

வத்தளை, கந்தானைப் பிரதேசத்திலுள்ள வீடொன்றில் நகைகளையும் பணத்தையும் திருடியதாகத் தெரிவிக்கப்படும் அந்த வீட்டுப் பணிப்பெண் அலவத்துகொடை பொலிஸாரால் கடந்த சனிக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தப் பணிப்பெண் குறித்த வீட்டில் எவரும் இல்லாத வேளையில் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. 1,50,000 ரூபா பெறுமதியான நகைகளையும் 4,000 ரூபா பணத்தையும் திருடிக் கொண்டு இந்தப் பெண் தப்பிச் சென்றுள்ளார்.

இதனையடுத்து பொலிஸார் அலவத்துகொடையிலுள்ள இந்தப் பெண்ணின் வீட்டை சோதனையிட்டபோது திருடப்பட்ட தங்க ஆபரணங்களுடன் அவர் கைதுசெய்யப்பட்டார். (ச)

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**மேடம்:**
எந்த வேலையும் தங்கு, தடையின்றி சுறுசுறுப்பாக நடைபெறும். தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். உங்களின் சில வேலைகளை மற்றவர்கள் மூலம் வெற்றிகரமாக முடித்துக் கொள்வீர்கள். ஆதாயகரமான பண வரவுகளைப் பெற வாய்ப்பு உண்டு.

**இடபம்:**
விருந்தினர்கள் அல்லது வீட்டிற்கு வந்த சிலரிடம் பேச முடியாத அளவுக்கு, ஒன்றுக்கு மேற்பட்ட வேலைகளைச் செய்யலாம். கிடைத்த வாய்ப்பு ஒன்றை நழுவ விடாமல் பார்த்துக் கொள்வீர்கள். விலையுயர்ந்த பொருள்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்க வேண்டாம். நண்பர் ஒருவருக்கு நல்ல யோசனை சொல்வீர்கள்.

**மிதுனம்:**
பணியில் கவனக்குறைவாகச் செயற்பட்டு அவதிக்கு ஆள்படலாம். மற்றவர்கள் உங்களைப் பார்த்து பொறாமைப்படும் வகையிலான சம்பவங்கள் நடக்கலாம். கடன் பிரச்சினை ஒன்றை சாக்கு போக்குச் சொல்லி சமாளிக்க நேரிடலாம். உறவினர் ஒருவருக்கு அவசர உதவி செய்ய நேரிடலாம். பதட்டம், பதற்றம் உண்டாகும்.

**கடகம்:**
பெரிய மனிதர்கள் சிலர் உங்களின் முயற்சிகளுக்கு உறுதுணையாக இருப்பர். அதிக விலை கொடுத்து வாங்க நினைத்த பொருள் ஒன்றை குறைந்த விலைக்கு வாங்குவீர்கள். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த ஒருவர் உங்களைத் தேடி வரலாம். கடன் மிகுதிகளைச் செலுத்துவீர்கள். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும்..

**சிங்கம்:**
அஜாக்கிரதையாக, பிடிவாதமாகச் செயற்படுவதன் மூலம் சில விடயங்களில் இழப்புகளைச் சந்திக்கலாம். உங்களின் கடந்த காலச் செயற்பாடுகள் பற்றி மற்றவர்களிடம் சொல்ல வேண்டாம். மறதியால் அவதிகளுக்கு ஆள்படலாம். பயணங்களுக்காக கணிசமான பணத்தைச் செலவு செய்யலாம். கேளிக்கை, கொண்டாட்டம் உண்டு.

**கன்னி:**
உழைப்பே உயர்வு தரும் என நினைத்து மகிழ்ச்சி, உற்சாகமாகச் செயற்படும் நாள். சுய தொழில் புரிவோர் கூடுதல் முற்பதிவுகள் பெற்று பரபரப்பாகப் பணியாற்ற நேரிடலாம். வெளியூர் பயணங்கள் செல்லும் சிலருக்கு உதவிகரமாக இருப்பீர்கள். உறவினர் ஒருவரின் பேச்சு உங்களுக்கு ஊக்கம், தெம்பு தருவதாக அமையலாம்.

**துலாம்:**
அனுபவ பாடம் பெறும் நாள். கடிதங்கள் அல்லது தொலைபேசி வழியில் எதிர்பார்த்த முக்கிய செய்திகள் வந்து சேரலாம். மன உறுதியைக் குலைக்கும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களைத் தொடர்பு கொண்டு உதவி கேட்கலாம். சிறு உடல் உபாதைகளால் உற்சாகம் குறையலாம். தண்டச் செலவுகள் நேரும்.

**விருச்சிகம்:**
வழக்கமான சில வேலைகளில் ஆரம்பத்தில் தாமதம் ஏற்பட்டாலும் பின்னர் சுறுசுறுப்பாக முடியும். சிக்கலாகி விடுமோ என நினைத்த காரியம் ஒன்று, சுலபமாக முடிந்து விடும். பிள்ளைகளின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். கடன் மிகுதிகள் வசூலிப்பு பலன் தரும். ஆடை, ஆபரணங்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும்.

**தனுசு:**
சொந்த பந்தங்களுக்கு உதவி செய்வதில் அக்கறை காட்டுவீர்கள். கடந்த காலங்களில் உங்களை மதிக்காமல் செயற்பட்ட சிலர், இப்போது உங்களின் வீடு தேடி வரலாம். வியாபாரிகள் தொழில் நிமித்தம் அங்கும் இங்கும் அலைய நேரிடலாம். உங்களின் அஜாக்கிரதையால் உங்களுக்குக் கிடைக்க வேண்டிய பெயர் மற்றவர்களுக்குச் செல்லலாம்.

**மகரம்:**
எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும், அதைச் சரிக்கட்ட புதிய பண வரவுகள் வரலாம். தொழில் விஷயங்களில் உங்களை முன்னிலைப்படுத்திக் கொள்ள முற்படுவீர்கள். பெண்கள் குறுகிய தூர பயணங்கள் செல்ல வாய்ப்பு கிடைக்கும். உங்களின் அனுபவம் ஒன்றை மற்றவர்களுக்கு அறிவுரையாகச் சொல்வீர்கள்.

**கும்பம்:**
தீவிரமாக முயற்சித்தும் சில காரியங்கள் முடியாமல் போகலாம். பிள்ளைகள் வழியில் கணிசமான பொருள் செலவுகளைச் சந்திக்கலாம். பண விஷயங்களில் சிலர் உங்களிடம் கொடுத்த வாக்குறுதியை காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம். மற்றவர்கள் மீதுள்ள கோபத்தை சிலர் உங்களின் மீது காட்டலாம்.

**மீனம்:**
எந்த வேலையையும் சுறுசுறுப்பாகச் செய்து குடும்பத்தினரின், நண்பர்களின் பாராட்டுக்களைப் பெறுவர். உதிரி வருமானங்களைப் பெறும் வாய்ப்பு உண்டு. சக ஊழியர்கள் சிலர் உங்களுக்காக செலவு செய்யலாம். பல நாள்களாக சந்திக்காமல் இருந்த ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கும். புதியவர்கள் சிலரின் அறிமுகம் கிடைக்கும்.

# விருதுகளு

# வி



கல்வியில் சமவுரிமை கேட்டு ஆரம்பித்த சாதாரண எழுச்சிதான், கால் நூற்றாண்டுகளுக்கு மேலாகத் தமிழினத்தை உலகே விழி வியந்து பார்த்த அசாதாரண புரட்சியின் அடிகோல் என்பது தேசியம் நோக்கிய இவ்வினத்தின் சுதந்திர அறுவடையை எதிர்நோக்கிக் காத்திருக்கும் எல்லோருக்கும் தெளிவு!

உரும்பிராயில் சிலையாக நின்றவன் தன் மாணவப் பருவத்திலேயே, இடுப்பில் இரும்பாயுதம் சுமந்து ஆரம்ப கால மிக மெலிதான ஒவ்வொரு வளர்ச்சியிலும் பங்களித்ததை நன்றியுடன் எண்ணங்கூர்ந்து மாணவர் நாள் கூட அனுஷ்டிக்கப்பட்டது மறக்கக் கூடியதல்ல. சாதாரண எந்தவொரு பெண்ணும் விரும்புகின்ற அமைதியான வாழ்க்கைக்கு எதிர்மாறான, அதிர்வுகளையெல்லாம் தினம் தினம் தாங்கி, எல்லாமே ''முடிந்து விட்டது'' என்று விம்பப்படுத்தப்பட்ட இருள் நிமிடங்கள் வரை ஆண்களுக்கு நிகராய் தாளாச் சமராற்றி அமரகாவியமடைந்த தமிழச்சிகள் எல்லோருமே மாணவப் பருவ நிறைவில் ஆயுதமேந்தியவர்கள்தான்.

தலையிட்ட பாரதம், தலையிடியாய் மாறிய போது, ''சாகும் வரை உண்ணாவிரதம்'' என்ற சொற்பதத்தை நிருபித்தவன் எனும் பெருமைக்குரியவனாய் அகிம்சையை தொண்டையிலிறுக்கியவனும் தன் இறுதிவருட படிப்பை பூர்த்தி செய்திராத மருத்துவப் பீடத்தின் மாணவனேதான். இந்த வகையில் கற்கும் காலத்தில் கிளர்ந்தெழும் தன்னுணர்வால், விடுதலை நெருப்பை, கொள்ளிகளாகவும், குச்சிகளாகவும், கங்குகளாகவும் தம் நெஞ்சில் சுமந்த குற்றத்துக்காய் வெள்ளையாடைகளுடனேயே வீதியில் வைத்து உயிர் உரித்தெறியப்பட்டோர் 2005 தொடக்கம் 2009 வரையான அதி பிற்காலப் பகுதிக்குள் மிகவும் அதிகம்.

எவ்வகையிலாயினும் அடக்குறைக்கு எதிராகத் தமது எதிர்ப்பைப் பதிவு செய்துவிட வேண்டும் என்கின்ற குருதிக் கொதிப்பு பதின்ம வயதுகளின் ஈற்றிலும், இருபதின் முன்பிலும் இருப்பது இயல்பே.

இந்த எழுதாவிதியை எம் தமிழ்ச்சாதி தெரிந்தோ தெரியாமலோ தன் தலையில் சுமந்தது. யாழ்.குடாநாட்டின் பெரும்பாலான உயர்கல்வி மாணவர்களின் கல்லூரிச் சூழலிலும் சரி, புறக்கல்விச் சூழலிலும் சரி சாவின் பயத்தை முதுகில் ஒட்டிக் கொண்டு வகுப்புகளுக்கு வந்து போன கடுங்காலங்கள் பலப்பல. ஏனைய வகுப்பு மாணவர்களைப் போல இலகுவில் வீடுகளுக்குள் முடங்கிவிட முடியாத பரீட்சையை நோக்கிய தேவை, இயல்பாகவே உயர்தர மாணவர்களிடையே போராட்டத்தின் பாதிப்புக்களை ஆழப் பதிப்பதற்கு முக்கிய ஏதுவாகியது. கூடவே கற்பிக்கும் ஆசிரியர்களும் பெரும்பான்மையில் தேசிய சிந்தனையை பாடத்திட்டத்துடன் சேர்த்தே ஊட்டும் ''கதாநாயகர்களாகவே'' மாணவர்களிடையே வலம் வந்தார்கள் என்பதும் சேர்ந்துவிட, அவ்வப்போது அரச இயந்திரத்தை ஆத்திரத்துடன் எதிர்த்த ''காலவரையற்ற ஹர்த்தால்கள்'', ''முகாம் அகற்றும் போராட்டங்கள்'' ,'' தொடர் பேரணிகள்'', ''வீதிகளின் குறுக்கே எரிந்த மரக்குற்றிகள்'', ''ரயர்கள்'' என்பன ஆளும் ''காது''களில் புகுந்த சிற்றெறும்பாக 'குடைச்சல்' கொடுத்ததையும் மறுப்பதற்கில்லை.

''இலகுவில் ஒன்று கூடும் தன்மை'', ''எடுத்த முடிவுகளை சுலபத்தில் விற்றுவிடாத வைராக்கியம்'', ''முடிக்கும் வரை பின் வைக்காத முயற்சி'' என்பன போன்ற பல விசேடித்த தன்மைகள் வேறெந்தக் குழுவுக்கும் வாய்க்காத சிறப்பியல்புகளாக ''மாண



# ...ளுக்குள் ...ஷம் !



வர்கள்'' என்ற மாபெரும் 'குடைக்குள்' மட்டும் கிடைக்கும் புரட்சிக் கதகதப்பு!

ஆரம்ப காலங்களில் ஜே.வி.பி. - மாணவர்கள் அமைப்புக்கள் உள்ளிட்ட தென்னிலங்கை பல்கலைக்கழகங்களும், பிற்காலத் தமிழ் மாணவர் பேரவை, ''பொங்குதமிழ்'' எழுச்சிக்காய் வீதி வீதியாய் கால்தேய்ந்த வடக்கு கிழக்குப் பல்கலைக் கழகங்களுக்கும், கொள்கைகளில் இணக்கமின்மை இல்லாத போதும், நிர்வாகத்தை ஸ்தம்பிக்க வைக்கும் வீரியத்தில் ஏதோவொரு ஒற்றுமை இருந்ததை ஆழ்ந்து கணித்து வைத்திருந்தனர் ஆட்சியாளர்கள்!

''உலகின் எந்த மூலையிலாயினும், அடக்குமுறைக்கு உள்ளாகும் போது, ஆத்திரத்துடன் உங்களால் குமுறிக் கொந்தளிக்க முடிந்தால், நீங்கள் என் தோழர்களே!'' - என்ற ''சேகுவேரா''வின் சொற்களை வேதமாக நெஞ்சிலும்- தாடிக்குள், கீருஞ்சுருட்டுக்குள் புரட்சி நெருப்பைப் புதைத்து வைத்த அந்த சூரிய மனிதனின் - படங்களை தம் ஆடைகளிலும் சுமக்கும் எந்தவொரு ''புத்தக இளைஞனை''யும் தங்களது செல்லப்பிள்ளையாக இலகுவில் ஏற்றுக் கொள்வதில்லை ஜனநாயக நாடுகள்.

''அதிகார வரம்பின் அகலிப்பு'' எல்லை மீறும் போது, தட்டிக்கேட்கும் ''சீருடைப் பிரம்பு''களாக அவர்கள் குறுக்கே வந்துவிடக்கூடாது என்பதில் மிக அவதானம் எடுக்கத் தவறுவதில்லை எல்லாத் தேசங்களும். முன்னைய ''சோவியத் யூனியன்'' சிதறுவதற்கும், முந்தை நாள் ''எகிப்திய'' மக்கள் எகிறுவதற்கும், நேற்றுத் தான் ''தென்சூடான்'' தனியரசானதற்கும், இன்றுவரை ''லிபிய'' தேசம் பதறிக் கிடப்பதற்கும் ''பொறி கொடுத்த பொல்லாத வர்களை'', தமது கடல் எல்லைகளுக்குள் வளர்த்து விடுவதற்கு '' எல்லாம் வல்ல'' இலங்கை நிச்சயம் தயாராக இல்லை.

கற்கும் காலத்தில் புத்திக்குள் ஏற்றிக் கொள்ளும் புரட்சிச் சித்தாந்தங்களுக்குப் பதிலாக, வேறேதோ ஒன்றைத் தாராளமாய் தாரை வார்க்க வேண்டிய கடப்பாடுதான், தமது வருங்கால வசந்தங்களுக்கு வாய்ப்பென்று நம்புவோர் எப்போதும் எடுக்காத ''சந்தேகப் பார்வை'' ஒன்றை வடக்கின் எல்லாக் கல்விச் சமூகங்கள் மீதும் இன்னமும் வைத்திருப்பது கண்கூடு.

அன்னைக்கும் அப்பனுக்கும் அடுத்ததாக, ஆண்டவனுக்கும் முன்னதாக பிள்ளைகளின் உதாரண புருஷர்களாக, உத்தம இரண்டாம் தாயாக உருவகிக்கப்படும் ஆசிரியர்களை ''வளைத்துப் போடுவதன்'' மூலம் காரியமாற்றும் கச்சிதத்தை வெற்றிகரமாகவே தொடங்கியிருக்கின்றன வில்லன் தரப்புகள்.

எத்தனையோ ஆயிரம் ஆசிரியர்கள் சேவையிருக்கும் இந்த நாட்டில், தன்னை ''நல்லாசிரியர் விருதுக்கு'' அல்லது '' சிறந்த அதிபர்'' விருதுக்கு தெரிவு செய்துள்ள இந்த இராஜாங்கத்தின் மீதும், விருது வழங்கும் விழாவுக்குச் சிறப்புற ஏற்பாடுகளை முன்னிறுத்தி, இந்த நாட்டின் முதல் குடிமகனின் கைகளால் ''பொற்கிழி'' வழங்கப் பெற்ற கௌரவத்தின் நினைவுகள் மீதும் இலகுவில் விசுவாசம் உடையவர்களாக கல்விச் சமூகத்தின் தூண்களை, ''புகழ் முருங்குகளாக'' மாற்றி விடத் துடிக்கும் கபடம், பரிசு பெற்றவர்களுக்குக் கூடத் தெரிந்த பாலபாடம்.

இனிவரும் ஆண்டுகளில் இவ்''விருது''களுக்கான விண்ணப்பபங்கள், புத்தகசாலைகளில் ''போர்ட்'' போட்டு விற்கப்படும் அளவுக்கு மலிந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை! குறிப்பாக அவலங்களால் மீண்டெழுவதற்கு இன்னமும் அவகாசம் கிடைத்திராத வன்னி மண்ணின் வித்தியாபீடங்களின் மீது விசேட ''கவனிப்பு'' காட்டியதையும் கவனத்தில் கொண்டே ஆக வேண்டும். குறித்த விருதைப் பெற்றுக் கொள்வது தான் ''வரும் வருடங்களின்'' உயர் கௌரவம் என்ற போலிப் புற்கற்றையை வண்டியின் முன்னால் தடி நீட்டிக் கட்டிவிட்டு, ''எப்படியும் நீங்கள் என்னிடம் தானே சிபாரிசுக்கு வரவேண்டும் '' என்ற மமதையில் தூங்கப் போகும் வெள்ளை வேட்டிகளைத் தேடித்தேடி தூக்கமிழக்கப் போகின்றனவா குரு''விழிகள்''?

பாடசாலையின் வசதியான மாடிக் கட்டடம் ஒன்றைத் தமது தாபரிப்பில் கட்டிக் கொடுத்த நன்றிக்கடனுக்காக, சதாகாலமும் வாசலருகிலேயே காவலரண் அமைத்து, கல்லூரிக் கிணற்றிலேயே குளித்து உடை மாற்றும் ''வீரர்களை'' தெரியாமல் தான் விட்டுவிடுகின்றனரா அதிபர்கள்? பிரபல பெண்கள் கல்லூரியின் விளையாட்டு மைதானத்துக்கும், காவல்துறை கட்டுப்பாட்டு விடுதிகளுக்கும் இடையில் ஆளுயர மதில் மறைப்புக் கூட இல்லை என்பதை ஏன் கேட்கவில்லை இன்று வரை?

சும்மா பாடசாலை மட்டத்தில் நடைபெறும் ''முற்பகல் விழா''வுக்குக் கூட விருந்தினர் பட்டியலில் ஏதாவது ஒரு ''சீருடை அதிகாரியை'' போட வேண்டிய கட்டாயம் வலிந்ததா? இல்லை வரவழைத்ததா? தமது ஏற்பாட்டில் நடைபெறுகின்ற தனியார் நிகழ்ச்சிகளுக்கெல்லாம் ''பாடசாலையின் பாண்ட் அணியையோ'', ''நாடகக் குழுவையோ'', ''நடனப் பெண்களையோ'' கேட்டு அதிபர் அலுவலகத்தின் படிகளில் ஏறும், ''சப்பாத்துக்களுக்கு'' எரிச்சலின்றிப் பதிலளிக்கும் ''பொறுமையை'' எப்படிக் கற்றுக் கொண்டீர்கள்?

## ■ செந்தூரி

''மனிதாபிமானத்தை''(?) ஒரு கையிலும், ''இரசாயன மரண ஆயுதங்களை'' மறுகையிலும் ஏந்திய இதே வீரர்கள் தானே இற்றைக்கு வெறும் இரு வருடங்களுக்கு முன்பு, உயிரற்ற பெண்ணுடல்களையும் ஆடைவிலக்கி, அசிங்கப்படம் பிடித்து உலகப் புகழ்பெற்ற ''ஒஸ்கார்'' போட்டியாளர்கள்! 'கட்டிவைத்துச் சுட்டு', 'கால்களால் உதைத்து', 'இழி சொற்களால் இறந்தவர்களையும் பழித்து', 'கொத்துக் கொத்தாக ஒரே குழியில் போட்டு மூடி விட்டு' வந்தவனுக்கு, சரிசமனாகப் பக்கத்துக் ''கதிரையில்'' உட்காரக் கிடைத்த வாய்ப்பு எம்மினத்தின் வரமா? சாபமா?

ஆனாலும் உணர்விழக்காத உத்தமர்கள் இந்தச் சேவையிலிருக்கின்றார்கள் இன்னமும் என்பதையும் மறைப்பதற்கில்லை! சுவரொட்டியை ''படமாய்'' வரைந்து மேடையில் கொடுத்துப் பாராட்டு வாங்கிய மாணவிக்குப் பின்னால் இருந்த தூண்டுதலுக்கும், சுற்றமும், ''பக்கமும்'' வற்புறுத்திய போதும் குனிய மறுத்து, பணியாத ''பத்து'' வயதுக்குப் பின்னால் இருந்த ஓர்மத்துக்கும் நிறையவே வித்தியாசங்கள் உண்டு என்பது உண்மைதானே? நீறு பூத்திருந்தாலும், ''நெருப்பு'' தன் பெயரை'' ''நீர்'' என்று மாற்றிக் கொள்வதில்லையே? நாங்களும் தானே?? ✱

# தினம் தினம் தீபாவளி



மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்று தான் எல்லோரும் ஆசைப்படுகிறார்கள். ஆனால் ஆசைப்படுவதால் தான் மகிழ்ச்சி இல்லாமல் போகிறது என்பதை யாரும் புரிந்து கொள்ள மாட்டேன் என்கிறார்கள். உண்மையில் மகிழ்ச்சி என் றால் என்ன என்று புரிந்து கொண்டால் மட்டுமே ஒருவன் மகிழ்ச்சியாக இருக்க முடியும். ஓர் உதாரணம் சொல்கிறேன்.

நல்ல வெயில் நேரம்... செல்வந்தர் ஒருவர் குதிரையின் மீது அமர்ந்து போய்க் கொண்டிருந்தார். அவருக்குப் பின்னால் உட்கார்ந்து அவர் மீது வெயில் படாதபடி ஒருவன் குடைபிடித்துக் கொண்டிருந்தான். பணக்காரரத் காலில் செருப்புவேறு. சிறிது ஓய்வெடுக்க ஒரு மரத்தடியில் குதிரையை ஒதுக் கினார் அவர்.

அப்போது வெயிலில் காலில் செருப்பின்றி, தலைக்கு மேல் குடையின்றி துடிதுடிக்க ஓடி வந்து அதே மரத்தடியில் ஒதுங்கினான் ஏழை ஒருவன். கருணையுடன் அவனைப் பார்த்தார் பணக்காரர். பெருமூச்சுடன் அவரை நிமிர்ந்து பார்த்தான் ஏழை. மெல்ல துணிவை வரவழைத்துக் கொண்டு '' ஐயா... நான் வெயிலில் காலில் செருப்பின்றி போக வேண்டி உள்ளது. ஆனால் தாங்கள் குதிரையில் செருப்புடன் போகிறீர்கள். பெரிய மனதுடன் செருப்பை எனக்குத் தந்து உதவலாமே... குதிரை மேல் போகும் உங்களுக்குச் செருப்பு அவசியம் இல்லை அல்லவா'' என்றான்.

கருணை மிக்க அந்தப் பணக்காரர் சட்டென்று கால் செருப்பைக் கழற்றி கொடுத்து ''போட்டுக் கொள்ளுங்கள்'' என்றார். ஏழை ஒரு நிமிடம் மகிழ்ச்சி பெற்றான். மறுநிமிடம் ''ஐயா... குதிரை மீது போகும் நீங்கள் விரைவில் ஊர் போய்ச் சேர முடியும். ஆனால் நடந்து போகும் நான் நீண்ட நேரம் நடக்க வேண்டி வருமே! தங்களுக்குக் குடை அவசியமா? எனக்கு அது உதவியாக இருக்குமே என்று யோசிக்கக் கூடாதா?'' என்று புதிய கோரிக் கையை முன்வைத்தான்.

அவன் கோரிக்கையில் உள்ள நியாயத்தை உணர்ந்த செல்வர் தன் பின்னாலிருப்பவனிடம் இருந்து குடையைப் பெற்று ஏழையிடம் நீட்டி ''வைத்துக் கொள்ளுங்கள் ஐயா... வெயில் கொடுமையின்றி வீடு செல்லுங்கள்'' என்று பணிவுடன் கொடுத்தார். ஏழைக்கு அளவற்ற மகிழ்ச்சி. ஆனால் அரை நிமிடம் தான் அது நீடித்தது. சட்டென்று புது வருத்தம் ஒன்று பிடித்துக் கொண்டது.

''ஐயா... தாங்கள் மிக நல்லவராக இருக்கிறீர்கள்... அது மட்டுமல்ல ... திடகாத்திரமாகவும் இளமையாகவும் இருக்கிறீர்கள். தாங்கள் நினைத்தால் நடந்தே ஊர் போக முடியும். எனவே குதிரையையும் எனக்குக் கொடுக் கலாமே.. எனக்குக் கொடுப்பீர்களா? என்று இழுத்தான். அடுத்த கணம் செல்வந்தர் முகம் கறுத்தது. தம் இடுப்பில் இருந்த சாட்டையை வெடுக்கென்று உருவி அளவற்ற கோபத்துடன் சுளீர் சுளீர் என்று ஏழையைச் சாட்டையால் அடிக்கத் தொடங்கினார்.

ஆனால் ஏழையோ எந்த வருத்தமும் இன்றி பெரிதாக மூச்சு விட்டபடி ''அடியுங்கள் ஐயா... அடியுங்கள்... நன்றாக அடியுங்கள்'' என்று தன் முதுகை மாறி மாறி திருப்பிக் காட்டினான். பணக்காரர் திகைத்துப்போய் ''ஏன் இப்படி பைத்தியம் போல் நடந்து கொள்கிறாய்'' என்று உரக்க கத்தினார்.

''நான் குதிரையைக் கேட்டதும் நீங்கள் கோபம் அடைந்து சவுக்கால் அடிக்கத் தொடங்கிவீட்டீர்கள். அப்படி என்றால் என்ன அர்த்தம். கண்டிப்பாகக் குதிரையைக் கொடுக்கும் எண்ணம் உங்களுக்கு இல்லை என்று தெளிவாகிவிட்டது. இப்போதுதான் மனம் நிம்மதி அடைந்தது. அப்படி நான் கேட்காமல் விட்டிருந்தால், அடடா கேட்டிருந்தால் கொடுத்திருப்பாரோ... ஐயோ கேட்காமல் விட்டு விட்டோமே... என்று மனசு படாதபாடு பட்டிருக்கும். இப்போது கண்டிப்பாகக் கிடைக்காது என்று ஒரு நிம்மதி பிறந்துவிட்டது'' என்றான்.

இன்றைக்கு மனிதர் பலர் எப்போதும் துக்கமாக இருப்பதற்குக் காரணம் இதுதான். எது கிடைத்தாலும் திருப்தி அடைவதே இல்லை. அது கிடைத்திருக்குமோ... இது கிடைத்திருக்குமோ... அதை விட்டு விட் டோமே மா... இதை விட்டு விட்டோமோ... என்று எப்போதும் வேதனையிலேயே இருக் கிறார்கள். கிடைத்த எதுவும் மகிழ்ச்சி தருவதில்லை. மாறாக ஏதோ ஒன்று கிடைக்கவில்லை என்ற ஏக்கம்தான் எல்லோரையும் கொல்லாமல் கொல் லுகிறது. துக்கம் பலரையும் பீடித்திருக்கிறது. எப்போதும் துக்கம் இன்றி இருப்பதுதான் உண்மையான ஞானம் என்பது பலருக்கும் புரியவே இல்லை.

துக்கத்துக்குக் காரணமான நிகழ்வுகள் பெரிதும் வெளியிலிருந்துதான் நம் மீது திணிக்கப்படும். ஆனால் அதைத் துக்கமாக எடுத்துக் கொள்வதா இல்லையா என்று தீர்மானிக்கிற உரிமை நம்மிடம்தான் இருக்கிறது. அதைத் தான் ஞானம் என்று ரமணர்; ராமகிஷ்ணர் போன்ற ஞானிகள் புரிய வைக்கிறார்கள். ரமணருக்கும், ராமகிஷ்ணருக்கும் கடுமையான நோய் தாக்கிய போதும் அது தாங்க முடியாத வேதனை என்று புலம்பவில்லை. துடிக்க வில்லை. கடவுளைச் சபிக்கவில்லை. மாறாக அவை இறைவன் கொடுத்த பிரசாதம் என்று ஏற்றுக்கொண்டார்கள். துக்கம் வெளியில் இருந்து தாக்கினாலும் அதைத் துக்கமாக அவர்கள் கருதவில்லை. அவர்களது வித்தியாசமான மனோநிலை அவர்களைத் துக்கத்திலிருந்து மீட்டது.

ஆனால் இன்று மனிதர்கள் இதற்கு நேர்மாறாக இருக்கி றார்கள். இயல்பாக நிகழும் சின்னச் சின்ன நிகழ்வுகளைக் கூட தங்கள் அஞ்ஞானத்தால் துக்கமாக்கிக் கொள்கிறார்கள்.

இயேசுவைச் சிலுவையில் அறைந்தபோது ''இறைவா... உமது விருப்பப்படியே எல்லாம் நிகழும்'' என்று துக்கத்தை ஞானமாக்கினார். இன்று நம்மவர்கள் பரிசுகள் பெற்றாலும் பிறருக்குக்கிடைத்த பரிசுகளோடு ஒப்பிட்டு துக்கப்படுகிறார்கள். சாக்ரடீஸீக்கு விஷம் கொடுத்த போது கூட இன்முகத் தோடு எற்றுக்கொண்டார். ஆனால் நாமோ பாயசமே கொடுத்தால் கூட அதில் முந்திரி பருப்பு குறைவாக இருந்தது என்று துக்கம் அடைகிறோம். என்றும் அஞ்ஞானம் துக்கத்தில் சிக்கவைக்கிறது. ஞானமோ அதிலிருந்து விடுவிக்கிறது. துக்கத்தால் நாம் துக்கப்படுவதில்லை. அஞ்ஞானத்தால்தான் துக்கப்படுகிறோம்.

**சுகி. சிவம்**



காரைநகரில் அமைந்துள்ள காரை கிட்ஸ் பார்க் பாலர் பாடசாலைகளில் இடம் பெற்ற ஆசிரியர் தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கலாநிதி ஆ.தியாகராசா ம.ம. வித்தியாலய ஓய்வு நிலை அதிபர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை மற்றும் ஆசிரியர்கள் மாணவர்கள். (ம–250)

# கிராமங்களில் அபிவிருத்திகளில் தூர நோக்குடன் செயற்படும் நிலை

## கெயார் யாழ்.மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர்

நாவற்குழி, ஒக்.25

கிராமங்களின் அபிவிருத்தியில் தூர நோக்குடன் அரச, அரச சார்பற்ற துறைகள் இணைந்து செயற்படக் கூடிய நிலை உருவாகியுள்ளது என்றார் கெயார் சர்வதேச நிறுவனத்தின் யாழ். மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் திருமதி ஜோய்றோஸ் ஞானேஸ்வரன் தெரிவித்தார்.

கெயார் சர்வதேச நிறுவனத்தின் அச்சுவேலி தெற்கு நவோதய சனசமூக நிலையத்தினூடாக சமூக முன்னெடுத்தல் குழுவின் முதலாம் ஆண்டு நிறைவு விழாவில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

கிராமத்தினுடைய அபிவிருத்தி குறித்துதூர நோக்குடன் சிந்தித்துச் செயற்படும் காலப்பகுதியில் நாம் இன்று இருக்கின்றோம்.

கிராமத்தினுடைய அபிவிருத்தியில் தூர நோக்குடன் அரச, அரச சார்பற்ற துறைகள் இணைந்து சிறப்பாகச் செயற்படக் கூடிய நிலை உருவாகியுள்ளது.

கிராம மக்களின் தமது வாழ்வாதாரத்தை உயர்த்துவதில் இந்தத் துறைகள் இணைந்து செயற்படுவதை இந்தச் சமூக முன்னெடுத்தல் குழுக்களின் ஊடாகக் காண்கின்றோம்.

கிராமப் புறங்களில் பொது மக்கள் தமது அன்றாட போக்குவரத்துக்குச் சீரான உள்ளகப் பாதைகள் இல்லாது மிகவும் கஷ்டப்படுகின்றனர்.

காணிகள் பங்கிடப்படும் போது போக்குவரத்துப் பாதைகள் தொடர்பாகச் சரியான முறைமை கைக்கொள்ளப்படுமாயின் இது போன்ற பிரச்சினைகள் தீர்ந்து விடும்.

கிராமிய மக்களை வலுவூட்டி அவர்களைத் தமது சொந்தக் காலில் நிலைத்து நிற்க இது போன்ற சமூக முன்னெடுத்தல் குழுக்கள் உதவும்.

கிராமங்களில் தன்னிறைவு குறித்து எமது கெயர் சர்வதேச நிறுவனம் கை கொடுத்து வருகின்றது. தொடர்ந்து கை கொடுக்கவும் தயாராகவே உள்ளது.

மக்களை வலுவூட்டி அவர்கள் தங்களுக்குரியதை தாங்களே முடிவு செய்யும் திட்டங்களே சிறப்பானவை.

இந்தப்புதியஅணுகுமுறைதன் சமூக முன்னேற்றத்தை ஏற்படுத்தும்- என்றார். (ம–121)

# முதியோரின் நலன் பேணும் தொழில் ஓய்வூதியத் திட்டம்

## சமூக பாதுகாப்புச் சபையின் யாழ்.மாவட்ட இணைப்பதிகாரி

முதியோர் வறுமை குறைக்க சுயதொழில் ஓய்வூதியத் திட்டம் உதவுகின்றது. முதியோர் தொடர்பான நலன் பேணலை உத்தேசித்து இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் ஊடாக சுய தொழில் ஓய்வூதியத் திட்டத்தை அரச முன்னெடுத்து வருகின்றது.

இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் யாழ். மாவட்ட இணைப்பதிகாரி பாக்கியராஜா பிரதீபன் இவ்வாறு தெரிவித்தார்.

கோப்பாய் வடக்கில் கிராம அலுவலர் சு.சண்முகவடிவேல் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

மேற்குலக நாடுகள் முதியோர் யாவருக்கும் சமூக உதவிப் பணம் கொடுக்கின்றது. மிகவும் செழிப்பான வளம் கொழிக்கும் பொருளாதாரத்தை உடைய அந்த நாடுகளுக்கு இணைத்து முதியோருக்கும் இவ்வாறு கொடுப்பது சாத்தியமானது.

ஆனால் இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் இவ்வாறு அனைவருக்கும் கொடுப்பதற்குப் போதுமான நிதிவளமில்லை.

அதனால்தான் அரசு முதியோர் வறுமையைக் குறைக்கும் நோக்கில் இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையை உருவாக்கியுள்ளது.

இந்தச் சபை பலம் பொருந்திய நிதியமைச்சின் கீழ் இயங்குகின்றது. நாளாந்தம் சுயதொழிலில் ஈடுபடுவோரில் 18 வயது முதல் 59 வயதுவரையிலானோர் மாதாந்த வருமானம் 6 ஆயிரம் ரூபாவுக்கு குறைவாகப் பெறும் யாவரும் இதில் அணைந்து கொள்ள முடியும்.

முதல் தவணைப் பணத்தைப் பிரதேச செயலகங்களில் செலுத்தவும் ஏனைய தவணைப் பணங்களை தமது வீட்டுக்கு அருகில் உள்ள தபாலகம் அல்லது உபதபாலகம் ஊடாகச் செலுத்தவும் முடியும்.

60 வயதை அடைந்த பின்பு ஓய்வூதியப் பணத்தையும் அங்கேயே எடுக்க வழி செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சுயதொழில் ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்து கொண்டோர் பொருத்தமான பங்களிப்பைச் செலுத்தியிருந்தால் அங்கவீனம் அல்லது இறப்பு ஏற்படும் போது சமூகப் பாதுகாப்பு உதவித் தொகை, மரணப் பணிக் கொடை என்பன பெறவும் முடியும். உழைக்கும் போது உங்களின் பெயரில் சேமிப்பு ஒன்றை ஓய்வூதியத் திட்டத்தில் செலுத்த முற்படும் அனைவருக்கும் அரசும் தனது பங்களிப்பு ஒன்றைச் செய்கின்றது.

அதாவது தனது முதுமைக் காலத்தைநலமுறக்கழிக்க விரும்பி திட்டத்தில் இணையும் அனைவருக்குமாக உதவுத் தொகையைச் செலுத்துகின்றது.

அத்தகைய உழைப்பாளிகள் தமது முதுமைக் காலத்தில் ஓரளவு நலமுறக்கழிப்பதற்காக இந்தத் திட்டம் உதவுகின்றது. வறுமையைக் குறைப்பதற்கு நிவாரணம் வழங்குவது ஓர் தற்காலிக ஏற்பாடாகும்.அது நிறுத்தப்பட்டு விடும்.

ஆனால் இந்தச் சுயதொழில் ஓய்வூதியத் திட்டம் இறப்பு வரையில் பணத்தைப் பெறும் நிரந்தர ஏற்பாடாகும்.

இலங்கையில் மிகப் பெரும்பான்மையான உழைப்பாளிகள் நாளாந்த தொழில் புரிவோராக உள்ளனர். இன்னமும் 5 வருடங்களில் எமது நாட்டின் சனத் தொகையில் கால் பங்கினர் முதியோராகவுள்ளனர். முதுமையை நலமுறக் கழிக்க விரும்பும் பிரஜைகளுக்கு இது கைகொடுக்கின்றது. உழைக்கும் காலத்திலேயே தமது முதுமைக் காலத்தை நினைத்துச் செயற்பட்டுக் கொள்ள உழைப்பாளிகள்முன்வரவேண்டும்என்றார்.

இந்த நிகழ்வில் பிரதேச செயலகப் பிரிவின் சமூக சேவைகள் அதிகாரி, சமூர்த்தி அபிவிருத்தி அலுவலர் கு.சிவகுமார் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ம–121)

# இளைஞர் விருது வழங்கல் போட்டி முடிவுகள்

சித்திரம் - ச.சுகாகன் (வல்லை வீதி சங்கானை), கு.நேருஜன் (அச்சுவேலி) இ.திவாகர் (யாழ்ப்பாணம்).

அறிவிப்பாளர்-ச.நிகேஸ் (வட்டுக்கோட்டை), வி.ஜெயச் சந்திரன் (கொக்குவில் மேற்கு), அ.அனிஸ்மாலா (இளவாலை).

பேச்சுப் போட்டி- ச.நிகேஸ் (வட்டுக்கோட்டை), வி.ஜெயச் சந்திரன் (கொக்குவில்), அ.அனித் நிரோக்சன் (கொக்குவில்).

கிராமிய நடனம் (குழு)- ஸ்ரீ.நிறஞ்சலா (இணுவில்), கு.சிவரூபி (இணுவில்), த.குலரூபி (யாழ்ப்பாணம்).

தனிநடனம் - க.பவன் (இணுவில் கிழக்கு), பு.யயர்ணா (இணுவில்), ஸ்ரீ.நிறஞ்சலா (இணுவில்)

நாட்டார் பாடல்- சி.சிவதாரணி (சாவகச்சேரி), செல்வம் கஜீபன் (மானிப்பாய்), ஜெ.கஸ்தூரி (யாழ்ப்பாணம்)

இளம்பாடகர்- செ.சாருமதி (சாவகச்சேரி), பெ.ஜெ.சசினி ரிசாந்தி (இளவாலை), செ.கஜீபன் (மானிப்பாய்).

சக்ஸபோன்- ய.நவரூபன் (அரியாலை), ய.காண்டீபன் (அரியாலை), சி.யமீலா (அரியாலை).

அபிநயநடிப்பு-அ.இ. அனிஸ்மாலா (இளவாலை), செ.நிறோஜினி (சங்கானை), செ.ருபின்சன் (ஆனைக்கோட்டை).

கட்டுரை- தி.திலீபன் (கோண்டாவில்), ந.கார்த்திகா (யாழ்ப்பாணம்), சி.அனுசன் (தெல்லிப்பழை).

கவிதை- ஏ.தினேஸ்சங்கர் (மானிப்பாய்), ச.நிசானா (குடத்தனை), வெ.துஷ்யந்தன் (கரவெட்டி).

சிறுகதை- தி.திலீபன் (கோண்டாவில் கிழக்கு) ம.எலிஸ் ஏஞ்சல் (643/1 கடற்கரை வீதி குருநகர்), ஏ.தினேஸ்சங்கர் (மானிப்பாய்).

பாடல் இயற்றல்- செ.கஜீபன் (சுதுமலை தெற்கு), ஏ.தினேஸ் சங்கர் (மானிப்பாய்), கு.நேருஜன் (அச்சுவேலி.)

## நிர்வாகிகள் தெரிவு

சாவகச்சேரி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவு அன்மையில் சங்க மண்டபத்திலே நடைபெற்றது.

இனிவரும் ஆண்டுக்கான தலைவராக சி.பூபாலசிங்கம் மீண்டும் தெரிவு செய்யப்பட்டார். உபதலைவராக அ.பாலனும், செயலாளராக க.சி. மகாலிங்கமும்தெரிவுசெய்யப்பட்டனர். அத்துடன் ஐந்து பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. (ம–288)

## லயன்ஸ் கழகத்தின் நலத்திட்டங்கள்

தென்மராட்சி,ஒக்.25

சர்வதேச லயன்ஸ்கழக 306 பி 1 மாவட்டத்தின் பிராந்திய தலைவர் லயன் எஸ். நித்தியனந்தம் கடந்த ஞாயிற்றுக் கிழமை சாவகச்சேரி லயன்ஸ் கழக அலுவலகத்துக்கு உத்தியோகபூர்வமாக வருகைதந்து கழகத்தின் நலத்திட்டங்களை வழங்கினார்.

கழகத்தலைவர் லயன்ஸ் கே. பிரதீபன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கற்றலில் ஆர்வமுள்ள வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கியதுடன் மரக்கன்றுகள் நடும் திட்டத்தையும் ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் சர்வதேச லயன்ஸ் கழக 306 பி 1, மாவட்டத்தின் இணைப்பாளர்கள்,மாவட்ட தலைவர்கள் , பிராந்திய மற்றும் வலயக் தலைவர்கள் கலந்து கொண்டனர். (ம–207)

## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறு

யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை

இ.நிவேதா -161, தே.தனுஜன் -159, ச.அனுஷன் -153, சு.கலைக்சன் -152.

## கட்டக்காலி மாடுகள் ஏல விற்பனைக்கு

கொழும்புத்துறை,ஒக். 25

அரியாலை கிழக்கு பகுதிகளில் நல்லூர் பிரதேச சபையால் பிடிக்கப்பட்ட கட்டாக் காலி மாடுகள்ஏலத்தில்விற்பனை செய்யப்படவுள்ளன.

இந்த ஏல விற்பனை இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிழக்கு அரியாலைப் பகுதியில் நடைபெறுவுள்ளது ஏலத்தில் மாடுகளை பெற்றுக் கொண்டவர்கள் உடனடியாக பணத்தைச் செலுத்தி மாடுகளை எடுத்துச்செல்ல வேண்டுமென நல்லூர் பிரதேச சபைத் தலைவர் கேட்டுள்ளார். (ச–135)

## நியமனம்

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போ முகாமையாளராக கே.கந்தசாமி நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இதுவரை காலமும் உதவி முகாமையாளராகக் கடமையாற்றி வந்தவர்.

இங்கு கடமையாற்றிய முகாமையாளர் கே.குலபாலசெல்வம் யாழ்.கோண்டாவில் டிப்போ முகாமையாளராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (ம–236)

# கொண்டாட்டம்

**நகர்வலம் 4**

தீபாவளிக் கொண்டாட்டத்தில் இன்னொரு முக்கியமான விடயம் வீட்டுக்கு வருகை தரும் விருந்தினர்களை இனிப்புப் பண்டங்களுடன் வரவேற்பதும் வழமை. முன்னர் எல்லாம் அம்மா, அம்மம்மா என்று வீட்டில் பலர் இருந்ததால் அவர்கள் கூடி இனிப்புப் பண்டங்கள் செய்தார்கள். இன்றோ அம்மாமார் வேலைக்குப் போய் விடுகிறார்கள். இல்லையேல் தொலைக்காட்சித் தொடர் பார்ப்பதே அவர்களுக்கு ஒரு வேலையாகப் போய்விட்டது. இந்த நிலையில் இனிப்புப் பண்டம் செய்ய அவர்களுக்கு ஏது நேரம்? எனவே அதற்கும் இன்று கடைகள்தான் தஞ்சம் என்றாகி விட்டது.

நாம் எதை வாங்க வேண்டுமோ அவையெல்லாம் கடைகளில் கிடைப்பதால் அப்படியே வாங்கினால் போதும். தீபாவளிக்கென்று அப்படி என்ன ஸ்பெஷலா வாங்கப் போகிறார்கள் என்று அறிய பல்பொருள் விற்பனை நிலையங்கள், இனிப்பு வகைகள், மிச்சர் விற்கும் கடைகளுக்குள் நானும் சென்றேன்.

அதிகமானோரின் தெரிவு 'மிக்சர்' தான். யாழ்.நகர் பல்பொருள் விற்பனை நிலையங்கள் பெரிய பெரிய வியாபார நிலையங்களில் கூட மிக்சரின் இந்தப் படையெடுப் பைத் தடுக்க முடியவில்லை.

ஒவ்வொரு கடைகளிலும் ஆங்காங்கே தீபாவளித் தள்ளுபடி 10 வீதம் எனக் குறிப்பிட்டிருப்பதால் அதன் படியே ஆவலுடன் நுழைகிறார்கள். வழமையாக வாங்கும் அத்தியாவசியப் பொருள்களின் கொள் வனவும் இந்த தள்ளு படியுடன் வாங்கிவிட வேணும் என்ற ஆவல் அவர்களுக்கு.

இவர்களின் ஆவல்களுக்கு இலகுவாகப் பொருள் கள் மீது விலைப் பட்டியலும் இடப்பட்டிருப்பதால் தாமாகவே பணத்தின் பெறுமதிக் கேற்ப கூடைகளில் நிரப்பிய வண்ணம் நிற்கிறார்கள்.

''தீபாவளிக்கு இவ்வளவு பெரும் எண்ணிக் கையான மக்கள் கடைக்கு வந்தபடியே இருக்கும் போது எப்படி இவ்வளவு வேகமாக அவர்களுக்கு



தேவையான பொருள்களை கொடுத்தனுப்புகிறீர்கள்'' என்று ஓர் கடைக்காரரிடம் கேட்டேன்.

''அதிகமான பொருள்கள் தென்னிலங்கையில் இருந்துதான் வருகின்றன. வியாபாரத்துக்கு தகுந்த மாதிரி அவர்கள் எல்லாவற்றையும் 'பக்கிங்' செய்து மக்களைக் கவரக்கூடிய டிசைன்களில் பைகளில் போட்டுத்தான் அனுப்புகிறார்கள். இதனால் எங்க ளுக்கு நேரம் மிச்சம். சனம் எதை வந்து கேட்குதோ அதை உடனே கொடுக் கக் கூடிய மாதிரி இருக்கிறது'' என் கிறார்கள் கடைக்காரர்கள்.

யாழ். நகர் கடைகளில் அதிகமான ஒவ் வொரு பொருள்களுக்கும் விசேட விலைக் கழிவுகள் தீபாவளிக்கென்று வழங்குகின்றார்கள்.

சாதாரண கடைகளைவிட பெரிய வர்த்தக நிலையங்களில் தற்போது வீசா கார்ட் மூலம் பொருள்களை கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட கழிவுகள் வழங்கப்படுகின்றன.

இது தொடர்பாக வர்த்தகர் ஒருவரை ஆவலுடன் விவரம் கேட்டேன் ''தீபா வளிக் கென்று ஒவ்வொரு பொருள் களுக்கும் 10 வீதம் தள்ளுபடி கொடுத் தாலும் ஏ.ரீ. எம். கார்ட் வைத்திருப்ப வர்கள் 2000 ரூபாவுக்கு மேல் பொருள் களைக் கொள்வனவு செய்யும் போது அவர் மேலும் சில நூறு ரூபாவுக்கு இல வசமாக பொருள்களை வாங்க முடியும். வங்கி வசதி இலகு வாக்கப்பட்டதால் அதிக மானோர் இந்த வசதியைப் பெறுகிறார்கள். தீபாவளிக் கென்று இந்த தள்ளுபடியைக் கொடுத்துள்ளோம்'' என்றார் நகரின் பிரபல வர்த்தகர் ஒருவர். அத்துடன் அதிகூடிய பெறுமதி மிக்க பொருள்களை கொள்வனவு செய்பவர்களுக்கு நினைவுப் பரிசில்களும் ஒருசில கடைகளால் வழங்கப்படுகின்றன.

நிஸா






NDB
தங்க
சேமிப்பு

நாளைய தங்கம் - இன்றைய விலையில்

இன்றைய விலைக்கு தங்க நாணயம்*/தங்க பிஸ்கட்* ஒன்றை உங்கள் பெயருக்கு பதிவு செய்து, தவணை முறையில் பணம் செலுத்தி உங்களுடையதாக்குங்கள்.

அழையுங்கள் 011 2 448 888 அல்லது
அருகிலுள்ள NDB வங்கிக் கிளைக்கு வாருங்கள்.

இம்மேம்படுத்தல் நடவடிக்கை கீழ்வரும் கிளைகளில் நடைபெறுகின்றது:




- யாழ்ப்பாணம்
- அம்பாறை
- திருகோணமலை
- மட்டக்களப்பு
- வவுனியா

மேம்படுத்தல் நடவடிக்கை காலம்
ஒக்டோபர் 24 முதல் 31 வரை

இலங்கையின் வங்கி வரலாற்றில் ஒரு புரட்சியை ஏற்படுத்தும் விதமாக NDB வங்கி முதன் முறையாக அறிமுகம் செய்யும் NDB தங்கச் சேமிப்பு. இன்றைய விலைக்கு உங்கள் பெயருக்கு தங்க நாணயம்*/தங்க பிஸ்கட்* ஒன்றை பதிவுசெய்து கொண்டு, தவணை முறையில் பணம் செலுத்துங்கள். குறித்த தவணைக் காலத்தின் இறுதியில், இன்றைய விலைக்கு அதனைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

வாழ்க்கையை நிதமும் மாற்றும்

NDB வங்கி

PHOENIX O&M

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



2011 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் எமது பாடசாலையைச் சேர்ந்த **செல்வி பவினயா பரமேஸ்வரன்** அவர்கள் 182 புள்ளிகளைப் பெற்று பாடசாலையில் வரலாற்றுச் சாதனையை நிலை நாட்டி,தென்மராட்சி வலய மட்டத்தில் 5 ஆம் இடத்தைப் பெற்று சித்திய டைந்தமையைப் பாராட்டுவதோடு அவர் கல்வியில் மேலும் பல சிறப்புக்களைப் பெற்று உயர்வடைய வாழ்த்துகின்றோம்.

மேலும் 100இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற 7 மாணவர்களையும் அவர்களுக்கு கற்பித்த ஆசிரியர் செல்வி சி.கமலாம்பிகை அவர்களையும் அவர்களை வழிநடத்திய அதிபர் திரு.ந. ஜெயகுமாரன் அவர்களையும் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யா/சந்திர மௌலீச,
வித்தியாலயம், மட்டுவில்.

பாடசாலைச் சமூகம்.

# கிராம சேவகர் பிரிவு ரீதியாக கிராம ஒன்றியம் அமைக்க முடிவு

யாழ்ப்பாணம், ஒக்.25

யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட 47 கிராம சேவகர் பிரிவுகளிலும் கிராம ஒன்றியம் அமைப்புகள் உருவாக் கப்படவுள்ளன.

இதன் மூலம் அந்தந்தப் பிரதேசங் களில் மேற்கொள்ளப்படும் அபிவிருத் தித் திட்டங்கள் தொடர்பாக கலந்து ரையாடப்படவுள்ளன.

ஆசியா பவுண் டேசன் நிறுவனத் தின் ஏற்பாட்டில் யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் மேற்கொள்ளப் படும் அபிவிருத் தித் திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் கடந்த சனிக் கிழமை யாழ்.கிறீன் கிறாஸ் ஹோட் டலில் இடம்பெற் றது.

இந்த நிகழ்வில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள் ளது.

5 வருடங்கள் கொண்ட அபிவிருத்தித் திட்டமாக இது அமைவதால் அதனை சரியான முறையில் ஆவணப்படுத்தி மக்களின் தேவைக் கேற்ப மேற்கொள்ளப்படவுள்ளது.



இதனால் கிராமங்களில் கிராம ஒன்றியம் எனும் அமைப்பை உருவாக்கி அதன் மூலம் பிரதேச தேவைகளுக்கு ஏற்ப அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த நிகழ்வில் யாழ்.பிரதேச செயலர் திருமதி தெய்வேந்திரம் சுகுணரதி, நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா உட்பட கிராம அலுவலர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள்; சமூக ஆர்வலர்கள் பலர் கலந்து கொண்டனர். (ம-313)


## "அம்பாள் எக்ஸ்பிரஸ்" இன் இனிய தீபாவளி வாழ்த்துக்கள்- யாழ்.கொழும்பு பஸ் சேவை



**தினசரி முழு சொகுசு பஸ் சேவை புறப்படும் நேரம்**

யாழ்.பேருந்து நிலையத்திலிருந்து-7:45P.M கொழும்பு வெள்ளவத்தையிலிருந்து 7.00 - 7.30P.M கொட்டாஞ் சேனையிலிருந்து -8.00 P.M தினித்து வமிக்க எமது சேவை தினந் தோறும் நடைபெறுகின்றது என்பதை அனைவருக்கும் அறியத் தருகின்றோம். சில ஆசனப் பதிவாளர்களின் கதைகளை கேட்டு ஏமாறாதீர்கள்! என்பதை எமது வாடிக்கையாளர்களுக்குத் தெரிவிக்கின்றோம்.

குமார் (யாழ்) 0770637301

ராகுலன்(கொழும்பு) 0771532343

வவா-0777872322

நேரடித் தொடர்புகளுக்கு Hotline- 0777176516



## விற்பனைக்கு

பழைய சுண்ணாம்பு வீடு (கட்டடம்) விற்பனைக்கு
தொடர்புகளுக்கு- 0775060023
0778448747



## THE ROYAL COLLEGE OF JAFFNA

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப் பயில By ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி வகுப் புகள் யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய், சங்கானை. தொடர்பு:0776751649



## தரம் 5 புலமைப்பரீட்சைக்கு தயார்படுத்தும் பெற்றோர்களுக்கு ஒரு நற்செய்தி!

இதோ உங்கள் பிள்ளைகளின் முன்னேற்ற படிநிலைகளை நீங்களே சுயமாக அறிய புலமைச்சுடர் வழங்கும் ஓர் அரிய வாய்ப்பு.

**புலமைச்சுடர் சந்தாப்பிரதியின் விசேட வினாத்தாள் திருத்தற்சேவை**

படிமுறை 1
*திங்கட்கிழமையில் உங்கள் வீட்டுவாசலில் புலமைச்சுடர் கையேடு கிடைக்கும்.

படிமுறை 2
*அதில் உள்ள வினாத்தாளை உங்கள் பிள்ளை அமைதியாக இருந்து விடையளிக்க ஏற்பாடு செய்யுங்கள்.

படிமுறை 3
*மறுதினம் செவ்வாய்க்கிழமை / புதன்கிழமை எமக்கு தபால் மூலம் அனுப்பி வையுங்கள்.

படிமுறை 4
*அதனை நாம் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் மூலம் திருத்தி புள்ளியிட்டு, ஆலோசனைகளுடன் மீண்டும் உங்களுக்கு அனுப்பிவைக்கப்படும்.

படிமுறை 5
*உங்கள் பிள்ளை பாடசாலை, தனியார்துறையில் கற்கும் கல்வியின் அடைவு நிலையை இவ் வினாத்தாள் திருத்தற் சேவை மூலம் பெற்றோராகிய நீங்கள் புரிந்துகொள்ள முடியும்.

படிமுறை 6
*அத்துடன் உங்கள் பிள்ளை கூடிய புள்ளி பெற்றால் புலமைச்சுடரில் புகைப்படம் பிரசுரம் செய்து பாராட்டி வாழ்த்தப்படும்.

படிமுறை 7
*இது உங்கள் பிள்ளையின் பெறுபேற்றை ஊக்குவித்து மாவட்ட நிலையில் முதன்மை பெறத்தூண்டும்.

**இவ்வசதிகள் அனைத்தையும் பெற்றுக்கொள்ள இன்றே புலமைச்சுடர் சந்தாதாரராக இணையுங்கள்!**

★சந்தாப்படிவங்கள் புலமைச்சுடரிலும், சுடர் ஒளி, உதயன் நாளிதழிலும் பிரசுரமாகின்றன.

**தொடர்புகளுக்கு:** ஆசிரியர் கல்விச்சுடர்
இல. 85,
ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு 14,
தொ. பே. இல. :
011 5738855 , 071 6850005
மின்னஞ்சல்:kalvisudarinfo@gmail.com
விநியோகப் பிரிவு இலக்கங்கள்:
யாழ். -0215677222, கொழும்பு-0115737599


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/கைதடி குருசாமி வித்தியாலயத்தில் 2011 ஆம் ஆண்டு 5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் 156 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்த செல்வி

**மகேந்திரன் திருமகள்**

அவர்களைப்பாராட்டி வாழ்த்துவதோடு எமது பாடசாலையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற

1.ந.கயானா-123 2.பி.ராகவி-123
3.சி.டனுசன்-120 4.ஆ.வசீகரன்-103
5.ம.பானுரதி-100

ஆகியோரையும் மேன்மேலும் சித்திகள் பெற்று கல்வியில் சிறந்து விளங்க வாழ்த்துகிறோம். அத்துடன் அதிபர், வகுப்பாசிரியர் மற்றும் ஏனைய ஆசிரியர் களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**யா/கைதடி குருசாமி வித்தியாலய அபிவிருத்தி நலன்விரும்பிகள்.**


## அனுதினமும் இயேசுவுடன்

அருட்திரு. கலாநிதி. செல்வின் ஹியுஸ்




அனுதினமும் தேவனிடம் நெருங்கிச் சேரவும்
அனுதினமும் தேவனின் வசனத்தைக் கற்றுக்கொள்ளவும்
அனுதினமும் இயேசுவோடு நடக்கவும்

எமது வெளியீடான ""அனுதினமும் இயேசுவுடன்"" எனும் தியான நூலை வாசித்துப் பயன் பெறுங்கள்.

கொழும்பு வேதசாஸ்திர கல்வி நிறுவனத்தினூடாக விநியோகிக்கப்பட்டது.
தொ.பே. 011 4954049


கிறிஸ்தோம்பு வெளியீடுகள் பிறைவட் லிமிடட். தொ.பே. 011 2447665, 011 2421073
பிரதி ஒன்று 50 ரூபா.
வருட சந்தா செலுத்தியும் பெற்றுக் கொள்ளலாம்.


## கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க விசேட பொதுக்கூட்டம்-2011

கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதியயாப்புத் திருத்தம், நம்பிக்கை நிதியச் சபையினைத் தெரிவு செய்தல் எதிர்வரும் 06.11.2011 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் நடைபெறும். அங்கத்தவர்கள் சகலரும் தவறாது சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். நம்பிக்கை நிதிய யாப்புத் திருத்தம் தொடர்பான பிரேரணைகள், தீர்மானங்களை 03.11.2011 இற்கு முன்னர் செயலாளருக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**செயலாளர்,
கொக்குவில் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம் கொக்குவில்.**

## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தின் முன்னாள் பதிவாளர் பற்றிஷன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்(1986-1996) P.C அன்ரனி அவர்களின் மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தை அவரது குடும்பத்தினருக்கு தெரிவித்துக்கொள்கிறோம்.

61, ST.PATRICKS ROAD,
JAFFNA.
T.P:0212226148

பதிவாளர், அலுவலகர்கள்,
ஆசிரியர்கள், மாணவர்கள்,
தொழிலாளர்கள்.

## கண்ணீர் அஞ்சலி



உரும்பிராய் ஓடையம்பதி கற்பகவிநாயகர் ஆலய பரிபாலன சபையின் முன்னாள் தலைவர் அமரர் சின்னத்தம்பி இராசரத்தினம் அவர்களின் துணைவியார்

திருமதி **இராசரத்தினம் மகேஸ்வரி**

அவர்களது மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்திபெற அருளுமாறு கற்பகப் பிள்ளையார் பாதம் பணிகின்றோம்.

உரும்பிராய்.

ஒடையம்பதி கற்பக விநாயகர்
ஆலய பரிபாலன சபையினர்.

# சைவத்தையும் கல்வி அறிவையும் கிராம மக்கள் மத்தியில் வளர்த்து வரும் உன்னத பணியில் காந்தியூர் ச.ச நிலையம்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

காந்தியூர் சனசமூக நிலையத்தில்1967 ஆம் ஆண்டு ஆ.கிட்டிணர் தலைவராக இருந்த காலத்தில் சனசமூக நிலையத்தில் நூலக சேவையை விஸ்தரிக்க முடிவு எடுக்கப்பட்டது.

இதன் பிரகாரம் அமரர் பொ.பால கணேசமூர்த்தி ஒரு தொகுதி நூல்களை அன்பளிப்புச் செய்தார். அவரைத் தொடர்ந்து ஏனைய பலரும் நூல்களை அன்பளிப்புச் செய்தனர். தற்போது ஒரு தொகையான நூல்களைக் கொண்ட நூல் நிலையமாக காந்தியூர் சனசமூக நிலையத்தின் நூலகப் பிரிவு செயற்பட்டு வருகின்றது.

இந்த சனசமூக நிலையத்தின் மூத்த அங்கத்தவர்களில் ஒருவரான இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர் வே. ஆழ்வாப்பிள்ளை 1967 ஆம் ஆண்டு மார்கழி மாதம் வழங்கிய அன்பளிப்புடனும், கிராம கட்ட்ட வேலை வல்லாளர்களின் உதவியுடனும் காந்தியின் உருவச்சிலை ஒன்று வடிவமைக்கப்பட்டு, சனசமூக நிலைய வாசலில் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.

1970 ஆம் ஆண்டு கிராம மக்களின் சுகாதாரத்தை மேம்படுத்துமுகமாக, அதே ஆண்டு ஆவணிமாதம் 14 ஆம் திகதி குழந்தைகளின் நோய்த்தடுப்பு இயக்க விழா நடத்தப்பட்டது. இதில் மாவட்ட வைத்திய அதிகாரி சுகாதாரப் பரிசோதகர்கள் கலந்துகொண்டு சன சமூக நிலையத்தின் சுகாதார நடவடிக் கைகள் தொடர்பான சேவையைப் பாராட்டினார்கள். விழாவுடன் மட்டும் நின்றுவிடாமல் அடிக்கடி சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை சனசமூக நிலையம் நடத்தி மக்களிடையே சுகாதார விழிப்புணர்வை ஏற்படுத்தியது. தற்போதும் கூட இந்தச் சனசமூக நிலையத்தில் தான் தாய் சேய் ஆரம்ப சுகாதார சிகிச்சைகள் மாதந் தோறும் நடத்தப்பட்டு வருகின்றன.



1948 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த சனசமூக நிலையத்தை முதலாவது சந்ததி நிர்வாகம் என்னமாதிரி கட்டுக்கோப்பான சனசமூக நிலையத்தையும், கிராமத்தையும் அபிவிருத்தி நோக்கிய பாதையில் இட்டுச் சென்றதுடன் கிராம மக்கள் மத்தியில் சைவசமயத்தையும், கல்வி அறிவையும் வளர்த்தெடுத்தார்களோ அதே மரபில் ஆனால் கால நேரத்துக்கேற்றவாறு, இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் நிர்வாகத்தைப் பொறுப்பேற்று வழிநடத்தியும் இரண்டாவது சந்ததியும் நிர்வாகத்தை வழி நடத்திச் சென்றது.

1978 களில் மு.யோகராசா தலைமையிலான நிர்வாகக் குழுவினர் நிர்வாகத்தைப் பொறுப்பேற்றதைத் தொடர்ந்து அப்போது பருத்தித்துறை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த அமரர் க.துரைரத்தினத்திடம் சனசமூக நிலையத்தின் நிலைமை பற்றியும், மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்திகள் பற்றியும் எடுத்துக் கூறியதையடுத்து அவ்வாண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் 7ஆயிரம் ரூபாவும், 3ஆயிரம் ரூபாவுமான இருகட்டங்களாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த நிதியைப்பயன்படுத்தி சன சமூக நிலையத்தின் பழுதடைந்த கூரைகள் யாவும் திருத்தியமைக்கப்பட்டன. இந்த நேரத்தில் வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ள பல கிராமங்கள் மின் ஒளி பெற்று வந்த நிலையில் இந்தக் கிராமத்துக்கு மின் ஒளி கிடைக்காமல் இருந்தது. இருளில் மூழ்கியுள்ள இந்த கிராமத்துக்கு மின்சாரம் வேண்டும் என்று சனசமூக நிலையத்தினர் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் துரைரத்தினத்திடம் வேண்டுகோள் விடுத்த போது, அதனை ஏற்றுக்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் இந்த கிராமத்துக்கு மின்சாரம் வழங்கவென 10 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்திருந் தார். கிராமத்துக்கு மின்சாரம் கிடைத்த போதும் சனசமூக நிலையத்துக்கு. மின்சாரம் கிடைக்கவில்லை. சனசமூக நிலையத்துக்கு மின்சாரம் பெறுவதற்காக இரு தடவைகள் நிதிக்கு வீடி யோப்படம் காண்பிக்கப்பட்டு சேகரிக் கப்பட்ட நிதியிலிருந்து சனசமூக நிலையத்துக்கு மின் இணைப்பு சேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு 1979 ஆம் ஆண்டி லேயே சனசமூக நிலையம் ஒளிபெற்றது.

காந்தியூர் சனசமூக நிலையத்தை அபிவிருத்தி செய்து அதனூடாக பல்வேறு சேவைகளை இந்தக் கிராமத்துக்கு வழங்க வேண்டும் என்ற நோக்கோடு 1982 ஆம் ஆண்டு இந்தக் கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்கள் ஒன்று சேர்ந்து சனசமூக நிலைய அபிவிருத்திக்கு நிதி வேண்டும் என்பதை உணர்ந்து, பகுதிநேரமாக தமது உடலுழைப்புகளை வழங்கி உழைத்து நிதிகளைச் சேகரித்து அந்த நிதிகளை வைத்து சனசமூக நிலைய அபிவிருத்திக்கு மட்டுமன்றி கிராமிய அபிவிருத்திக்கும் செலவுகளைச் செய்து கிராமத்தை அபிவிருத்தியை நோக்கிய பாதையில் இளைஞர்கள் வழி நடத்திச் சென்றார்கள்.

1982 ஆம் ஆண்டு சனசமூக நிலையத்தை சொந்தக் காணியில் இயங்க வைப்பதற்காக சனசமூக நிலையத்தின் நிர்வாகத்தைச் சேர்ந்த கிராம இளைஞர்கள் கிராமமக்களிடம் 5 ஆயிரம் ரூபா நிதியைச் சேகரித்து தேசிய சேமிப்பு வங்கிக்கணக்கில் சேமிப்புக்கணக்கில் வைப்பிலிடப்பட்டது. இந்த வைப்புப் பணத்திலிருந்து கிடைத்த வட்டியை மாதாந்தம் பெற்று சனசமூக நிலையத்துக்கு தேவையான பத்திரிகைகள் பெறப்பட்டு வந்தன.

**கர்ணன்**

இந்த நிலையில் பருத்தித்துறைப் பிரதேசத்துக்கான குடி தண்ணீர் விநியோகத்திட்டம் ஒன்றை வெளிநாட்டு நிறுவனம் ஒன்றின் உதவியுடன் ஆரம்பிப்பதற்கான வேலைகள் ஆரம்பமான போது குடிதண்ணீர் விநியோகத்துக்கான நிலத்தடி குழாய்களைப் புதைக்கும்பணியை ஒப்பந்தம் மூலம் பெற்றிருந்தனர். கிராமத்து இளைஞர்கள், பெரியவர்கள் ஒன்றிணைந்து இரவு பகல் பாராது வீதி ஓரங்களில் கிடங்குகளை வெட்டி தண்ணீர்க்குழாய்களைப் புதைத்து, நெற்றி வியர்வை சிந்திப்பெற்ற பெரிய தொகைப்பணத்தை சனசமூக நிலையத்தின் முதலீடாக வைத்துக் கொண்டனர்.

இந்த சனசமூக நூல் நிலையத்தில் புத்தகம் இரவல் கொடுக்கும் பணி 1985 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கென சனசமூக நிலைய அங்கத்தவர்களிடமிருந்து தலா 10 ரூபா வீதம் சந்தாப் பணத்தைச் சேகரித்து, அந்தப் பணத்தில் பல்வேறு வகையான புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டு நூல் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்தன. இந்தப் புத்தகங்களைக் கிராம மக்கள் வாசிப்பதற்கென தினமும் மாலை வேளைகளில் இரவல் கொடுக்கப்பட்டு வந்தன.

(தொடரும்)


## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**இளையதம்பி கிருபாகரன்**
திதி: 2011.10.25

மலர்வு
1974 -12 -31

மறைவு
2006- 10 - 19

அண்ணா! அண்ணா! என கூப்பிட்ட குரல் கேட்கலையா?
எங்கே விட்டு சென்றாய் அண்ணா!
இதயம் இயங்க மறுக்கிறது; ஈரவிழிகளுடன்
தினம் தினம் ஊனமாய் நிற்கிறோம்.
காலம் எல்லாம் காத்த கண்மணிகளை
விட்டு எங்கு சென்றாய்?
என்றும் தெய்வம்போல்
எமக்கு துணையாக இருப்பீர்கள்!

இராசவீதி,
தோப்பு, அச்சுவேலி.

அன்புத் தங்கை,
தம்பிமார்.

## 27 ஆவது ஆண்டு நினைவு நாள்

அன்னையின் மடியில்
11 ★ 04 ★ 1972



ஆண்டவன் திருவடியில்
25 ★ 10 ★ 1985

செல்வி **நிமாலினிவீரசிங்கம்** (பாப்பா)

கண்ணீரில் கரைந்தது 27 வருடங்கள்
மறைந்ததம்மா கண்முன்னே
உறவாட எம்முன்னே நீ இல்லையம்மா!
எம்மோடு தோளோடு சாய்ந்து
நீ சொன்ன கதைகளெல்லாம்
நான் இன்று கண்ணீரில் எழுதுகிறேன்.
கனவாகிப் போனதென்ன
காவியமான தென்ன
நீங்காத நினைவுடன்

அப்பா, அம்மா,
சகோதர, சகோதரிகள்,
மற்றும் உறவினர்கள்.

34/1, இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

## முக்கிய அறிவித்தல்

மானிப்பாய், பிரதான வீதி, சென் அன்ரனீஸ் பாடசாலைக்கு முன்பாக அமைந்துள்ள கட்டப்பாளி அல்லது வளந்தில் என்று அழைக்கப்படும் நிலப்பரப்பு 6 உம் குளி 4.35 உம் விஸ்தீரணம் கொண்ட காணி சின்னையா புஸ்பலீலா ஆகிய எனக்கு உரியதென்றும் இந்தக் காணிக்கு வேறு யாரும் உரிமை கோரவோ, விற்கவோ முடியாது என்பதையும் இத்தால் பொதுமக்களுக்கு அறியத்தருகின்றேன்.

சின்னையா புஸ்பலீலா
4 ஆம் கட்டை, ஆனைக்கோட்டை.

## 11 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**கந்தப்பு தவராசா** (பவா)
(முன்னாள் சந்தைக் குத்தகையாளர், நெல்லியடி)
திதி: சதுர்த்தசி

பதினொரு ஆண்டுகள் கடந்தாலும்
ஆறவில்லை எமது துயர்!
அகலவில்லை உங்கள் நினைவு
தேடற்கரிய பொக்கிஷமே!
எமது உயிர் கலந்த தெள் அமுதே
உம்மைப் பிரிந்த துயரத்தில்
கலங்குகின்றோம். நாம்!

உங்களைப் பிரிந்து துயருறும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்.

கரவெட்டி மத்தி,
கரவெட்டி.

# எல்லை நிர்ணயத்துக்கு ஆணைக்குழு விரைவில் நியமிக்க அரசு முடிவு

கொழும்பு,ஒக்.25

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிச் சபைகளின் எல்லைகளை நிர்ணயிப்பது தொடர்பாக ஆணைக்குழு வொன்றை நியமிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

வரவு-செலவுத் திட்டம் விவாதம் முடிவுற்றதன் பின்னர் எதிர்வரும் ஜனவரி மாதத்தில் இந்தச் சபைகளின் தேர்தல் தொகுதிகளுக்கான எல்லைகளை நிர்ணயிப்பதற்கு உரிய சட்டங்கள் நிறைவேற்றிக் கொள்ளப்படவுள்ளன.

அடுத்த ஆண்டில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை தொகுதி வாரி முறைமையில் நடத்துவது தொடர்பான விதிமுறைகள் உள்ளடங்கும் சட்டமூலமொன்றையே அரசு முதலில் நாடாளுமன்றத்தில் முன்வைக்கவுள்ளது.

முன்வைக்கப்படும் முறைமைக்கும் அமைய தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களுள் மூன்றில் இரண்டு தொகுதி வாரிமுறைமையிலும் மூன்றில் ஒன்று விகிதாசார முறைமையிலும் தெரிவு செய்யப்படவுள்ளனர். அதற்கமைய இந்தப் புதிய தேர்தல் முறையானது கலப்படமானதொரு முறையாக இருக்குமெனவும் அரசின் சிரேஷ்ட பேச்சாளரொருவர் கொழும்பின் ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தல் தொகுதிகளின் எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டதன் பின்னர் அதே முன்னுதாரணமாகக் கொள்ளப்பட்டு மாகாண சபைகளின் தேர்தல் பிரதேசங்கள் வகுக்கப்படவுள்ளன.

தேர்தல் தொகுதிகள் வகுக்கப்படும்போது விசாலத்தன்மை, சனத்தொகை, சனச்செரிவு மற்றும் அபிவிருத்தி மட்டம் என்பன அளவு கோள்களாகக் கொள்ளப்பட்டு தேவைப்படும் மாற்றங்களை மேற்கொள்வதற்கு சட்ட அனுகூலங்கள் அமையும். இந்தப் புதிய தேர்தல் முறைமை அறிமுகமாவதோடு விருப்புவாக்கு முறைமையும் அற்றுப் போகிறது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச-22)



எழுவைதீவு முருகவேள் வித்தியாலயத்தின் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளின் நலன்கருதி பாடசாலையின் பழைய மாணவியான உ.ராஜேஸ்வரியால் அண்மையில் ஒரு லட்சத்து முப்பதாயிரம் ரூபா பெறுமதியான போட்டோப்பிரதி இயந்திரம் ஒன்று அன்பளிப்புச் செய்யப்பட்டது. (ச)

## ஹரீஸ் எம்.பிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தல்

கொழும்பு, ஒக்.25

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரிஸுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளு மாறு கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீமிடம் அந்தக் கட்சியின் அதியுயர்பீட உறுப்பினரான சட்டத்தரணி ஏ.எம்.பாயிஸ் வேண்டு கோள்விடுத்துள்ளார்.

இது தொடர்பிலான கடிதமொன்றை சட்டத்தரணி பாயிஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமிற்கு ஒக்டோபர் 20 ஆம் திகதி அனுப்பியுள்ளார்.

குறித்த கடிதத்தில், "ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக கல்முனை மாநகரசபைத் தேர்தலில் போட்டியிட்ட சட்டத்தரணி நிஸாம் காரியப்பருக்கு ஆதரவு வழங்க கல்முனைக்குச் சென்ற போது, நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸினால் கல்முனை அல் - சுஹறா வித்தியாலயத்திற்கு அருகில் வைத்து அச்சுறுத்தப்பட்டேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் முறையற்ற வார்த்தைகளால் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் அச்சுறுத்தினார். இதற்கு கல்முனை அல் - சுஹறா வித்தியாலயத்தில் வாக்களித்துவிட்டு வந்த பொதுமக்கள்சாட்சியாக உள்ளனர். அத்துடன் அவர் என்னை அச்சுறுத்திய பின்னர், நான் அச்சுறுத்தியதாக கல்முனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என ஊடகங்கள் மூலம் அறியமுடிந்தது.

எனவே, இவ்வாறு கட்சியின் ஒழுக்கங்களை நாடாளுமன்ற உறுப்பினர்ஹரீஸ்மீறுவது தொடர்பில் உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்குமாறும் வேண்டிக்கொள்கிறேன்- எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## கிராம உத்தியோகத்தர் சங்கத்தின் 18 ஆவது சம்மேளனக் கூட்டம்

வரணி, ஒக்.25

ஐக்கிய இலங்கை கிராம உத்தியோகத்தர்கள் சங்கத்தின் 18 ஆவது சம்மேளனக் கூட்டம் எதிர்வரும் முதலாம் திகதி இடம்பெறவுள்ளது.

சங்க யாப்பின் பிரகாரம் இந்தக் கூட்டத்துக்கு சமூகமளிப்பவர்கள் 10 அங்கத்தவர்கட்கு ஒருவர் என்ற விதத்தில் பெயர் குறிப்பிட்டு அனுப்புமாறு சகல மாவட்டக் கிளைச் செயலாளர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

சங்கப் பதவிகட்கு போட்டியிடும் அங்கத்தவர்கள் உரிய படிவத்தைப் பூரணப்படுத்தி மாவட்டக்கிளைச் செயலாளர்கள் மூலம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதிக்கு முன் அனுப்புமாறும் உரிய படிவங்கள் மாவட்டச் செயலாளர்கட்கு காலக் கிரமத்தில் அனுப்பப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-122)

## புலமைப் பரிசில் நிதிப் படிவங்கள் வந்தன

தென்மராட்சி, ஒக்.25

கடந்த ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களை ஆறாம் தரத்துக்குப் பிரபல பாடசாலைகளில் அனுமதி பெறுவதற்கும், புலமைப் பரிசில் நிதி பெறுவதற்குமான ஏ.பி.சி படிவங்கள் கல்வி அமைச்சினால் அந்தந்தக் கல்வி வலயங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்கள் வலயக் கல்வி அலுவலகத்தில் இந்தப் படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (ம-207)

முதலாவது பிறந்த நாள் வாழ்த்து




வைத்திய கலாநிதி
விஸ்வேதிதன் வினோஜா
தம்பதியரின் செல்வப் புதல்வி
ஐஸ்னுகா
தனது முதலாவது பிறந்த நாளை
இல.7/4, துரைராசா வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்
எனும்முகவரியில் உள்ள அவரது
இல்லத்தில் இன்று (25.10.2011)
செவ்வாய்க்கிழமை
மாலை 4 மணிக்கு
வெகு விமரிசையாகக்
கொண்டாடுகிறார் என்பதை
மகிழ்ச்சியுடன் அறியத்
தருகின்றோம்.
இந்த நிகழ்விலும் அதனைத்
தொடர்ந்து நடைபெறும் இரவு
போசனத்திலும் உற்றார்,
உறவினர், நண்பர்கள்,
அன்புள்ளங்கள் அனைவரையும்
கலந்து சிறப்பிக்குமாறு
வேண்டுகின்றோம்.





வாழ்த்துபவர்கள்
அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா,
அம்மம்மா, தாத்தா, மாமன்மார், மாமிமார்,
ரமணன் மாமா, மாமி,
கண்ணன் மாமா (லண்டன்),
ரமணன் கட்டடப்பொருள்
விற்பனை நிலையம் உரிமையாளர் மற்றும்
ஊழியர்கள், உறவினர், நண்பர்கள், ஆதரவாளர்கள்.

## சுய தொழில் கொடுப்பனவு

தென்மராட்சி, ஒக்.25

தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு சுயதொழில் உதவிகோரி விண்ணப்பித்த மூவருக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் முதலாம் கட்டக் கொடுப்பனவாக தலா 7 ஆயிரத்து 500 ரூபா வீதம் வழங்கவென உரிய தொகை பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பின்வரும் பயனாளிகள் தமது தேசிய அடையாள அட்டை ஆகியவற்றுடன் எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. பாஸ்கரன் பவளம் - அல்லாரை தெற்கு, ஜெபநேசன் பிரியா - தவசிக்குளம் ,மிருசுவில் , கிருஷ்ணதீபன்யமுனா - இராமாவில் கொடிகாமம். (ம-207)

## நகர அதிகாரசபை உருவாக்கம் உத்தேச யோசனை சட்டமா அதிபரிடம்

கொழும்பு, ஒக.25

நகர அதிகாரசபை உருவாக்குவது குறித்த உத்தேச யோசனை சட்டமா அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகரசபை உள்ளிட்ட நான்கு முக்கிய நகரசபைகளை உள்ளடக்கி இந்த நகர அதிகாரசபை உருவாக்கப்பட உள்ளது.

நகர அதிகாரசபை உருவாக்குவதன் மூலம் மாநகர சபை முதல்வருக்கோ அல்லது உறுப்பினர்களுக்கோ எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாது என்று ஆளும் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

அதிகாரசபையை உருவாக்குவதற்குத் தேவையான சட்டப் பின்னணி குறித்து ஆராயும் நோக்கில் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு நகர அதிகாரசபை குறித்த வரைவுத்திட்டத்தை ஒப்படைத்துள்ளது. (ச)

யாழ். மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வ -து)

LE - 5257 இலக்க பாரவூர்தி
உடற்கோப்பு திருத்தியமைத்தலுக்கான
கேள்வி விண்ணப்பம் கோரல்

இந்தச் சங்கத்தின் (LE-5257) இலக்க அசோக் லேலண்ட் பாரவூர்தியினது உடற்கோப்பைத் திருத்தி அமைப்பதற்கான கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. உடற்கோப்பு தொடர்பாக வேலை விவரங்கள் விவரிக்கப்பட்டுள்ள கேள்வி விண்ணப்பப்பத்திரங்களை சங்கக் காரியாலய வேலை நாள்களில் காலை 9 மணிதொடக்கம் பி.ப. 3 மணி வரை பெற்றுக்கொள்ளவும்.

கேள்விப் பத்திரங்களை 07.11.2011 திகதிக்குப் பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக "தலைவர், யாழ்.மாவட்ட தனியார் பாரவூர்திக் கூட்டுறவுச் சங்கம்,இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்" எனும் முகவரிக்கு பதிவு அஞ்சல் மூலம் அனுப்பிவைக்கவும்.

க.இலங்கநாதன்
தலைவர்

# கூடங்குளம் அணுமின் நிலையத்தை மூட சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றுக!

## கூடங்குளம் போராட்டக்குழு வலியுறுத்து

கூடங்குளம் அணுமின் நிலையத்தை மூட வலியுறுத்தி சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று அணு உலை தடுப்பு இயக்கம் புதிய கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

கூடங்குளம் அணுமின் நிலையத்தை மூட வலியுறுத்தி அணுமின் நிலைய எதிர்ப்பாளர்கள் 3 ஆவது கட்டமாக இடிந்தகரையில் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். நேற்று 6 ஆவது நாளாக உண்ணாவிரதம் நீடிக்கிறது.

இதில் கூடங்குளம், கூத்தங்குளி, பெரு மணல், இடிந்த கரை போன்ற கிராமங்களை சேர்ந்த பொதுமக்கள் சுமார் 5 ஆயிரம் பேர் வரை கலந்து கொண்டனர். நேற்றுமுன்தினம் நடந்த உண்ணாவிரதத்தில் மதுரை குரு மடத்தைச் சேர்ந்த பயிற்சிக் குருவானவர்கள் 30 பேர் பங்கேற்றனர்.

அப்போது அடுத்தக்கட்ட போராட்டம் குறித்து ஆலோசனை நடத்தப்பட்டது.

மத்திய அரசு அமைத்துள்ள குழுவை போராட்டக்குழு புறக்கணித்துள்ள நிலையில், இக்குழு தொடர்பாக மாநில அரசு என்ன முடிவு எடுக்கிறது என்பதை பொறுத்து செயற்பட இருப்பதாகப் போராட்டக்குழு உறுப்பினர் புஷ்பராயன் தெரிவித்தார்.

இந்தநிலையில் கூடங்குளம் அணுமின் நிலையத்தை மூட வலியுறுத்தி, அணு உலை தடுப்பு இயக்கம் சார்பில் ராதாபுரத்தில் 3 நாள் தொடர் உண்ணாவிரதம் நேற்று முன் தினம் ஆரம்பமாகியது. நேற்று 2 ஆவது நாளாக உண்ணாவிரதம் இடம்பெற்றது.

கூடங்குளம் அணுமின் நிலையத்தை மூட வலியுறுத்தி தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். அணுமின் நிலைய எதிர்ப்பாளர்கள் மீது போடப்பட்டுள்ள வழக்குகளை வாபஸ் பெற வேண்டும் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி உண்ணாவிரதம் நடத்தப்படுவதாக அணு உலை தடுப்பு இயக்க தலைவர் தமிழ்மாந்தன் தெரிவித்தார். (வ)

# இந்தியாவில் முதன்முதலாக நகைகளை வழங்கும் ஏ.ரி.எம். இயந்திரம் அறிமுகம்

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு இந்தியாவில் முதன்முறையாக தங்கம் மற்றும் வைர நகைகளை வழங்கும் ஏ.ரி.எம். இயந்திரத்தை கீதாஞ்சலி குழுமம் மும்பையில் நிறுவியுள்ளது. கீதாஞ்சலி நிறுவனத் தலைமை செயல் அதிகாரி சஞ்சீவ் அகர்வால் கூறுகையில்:

தங்கம் மற்றும் வைர நகைகளை விற்பனை செய்வதற்கு என்றே ஏ.ரி.எம். இயந்திரத்தை நாட்டிலேயே முதன் முறையாக மும்பையில் நிறுவி உள்ளோம்.

வியாபார நிறுவனங்கள், விமான நிலையங்கள் மற்றும் கோயில்கள் உள்ளிட்ட 75 இடங்களில் இது போன்ற ஏ.ரி.எம்.களை நிறுவ இந்தக்குழுமம் திட்டமிட்டுள்ளது.

தங்கம் மற்றும் வெள்ளி நாணயங்கள், காதணிகள், மத ரீதியான நகைகள், வைரக்கல் பதித்த நகைகள் ஆகியவை பல்வேறு எடை அளவுகளில் கிடைக்கும்.

ஆயிரம் ரூபா முதல் 30 ஆயிரம் ரூபா வரையிலான மொத்தம் 36 வகையான நகைகளை இந்த இயந்திரத்தின் மூலம் பணம் செலுத்தி வாங்கிக் கொள்ளலாம்.

இதன்மூலம் அடுத்த 3 ஆண்டுகளில் ஆண்டுக்கு ரூ. 450 கோடி முதல் ரூ.500 கோடி வர்த்தகம் நடைபெறும் என்று தெரிவித்தார். தங்க நாணயங்கள் வழங்கும் ஏ.ரி.எம் இயந்திரங்கள் துபாய், சீனாவில் ஏற்கனவே நிறுவப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது. (வ)

# சிதம்பரத்துக்கு எதிராக சுவாமியின் மனு நவம்பர் 8 இல் விசாரணை

டில்லி, ஒக்.25

2ஜி ஊழல் வழக்கில் மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரத்தையும் துணை குற்றவாளியாகச் சேர்க்க வேண்டும் என்று ஜனதா கட்சித் தலைவர் சுப்ரமணிய சுவாமி தாக்கல் செய்த மனு மீதான விசாரணையை அடுத்த மாதம் 8 ஆம் திகதிக்கு சி.பி.ஐ .நீதி மன்றம் ஒத்தி வைத்துள்ளது.

பண்டிகை காலம் என்பதால் நீதிமன்ற அலுவலர்கள் பலர் விடுமுறையில் உள்ளனர். எனவே இந்த வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள் ளதாக சுவாமி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

2ஜி ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றை ஒதுக்கீட்டில் ப.சிதம்பரத்துடன் சேர்ந்துதான் ஆ.ராசா விலை நிர்ணயம் செய்தார் என்பதால் அவரையும் இந்த வழக்கில் சேர்க்க வேண்டும் என்று சுவாமி மனுத் தாக்கல் செய்துள்ளார்.

2ஜி ஊழலில் சிதம்பரத்தின் பங்கு குறித்து விசாரிக்க வேண்டும் என்று பா.ஜ.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகளும் மத்திய அரசை வலியுறுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (வ)

## நினைவில் நிற்பவர்...




நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் - ஐ.என்.ஏ., டிரஸ்ட் சார்பில், கவுகாத்தியில் நடந்த 68 ஆவது ஆசாத் இந்து ஹக்குமத் தின விழா கொண்டாட்டத்தில் கலந்து கொண்ட நேதாஜியின் குடும்ப உறுப்பினர்கள். (வ)

# மத்திய அமைச்சர்களுக்கு தலைமைத்துவப் பணிகள்

## உத்தரவிட்டார் மன்மோகன்

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தாம் அயல் நாட்டுக்குப் பயணம் மேற்கொள்ளும் வேளைகளில் மத்திய அமைச்சர்களுக்கு சிங் சில பணிகளைச் செய்ய உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து மத்திய அமைச்சர்களான பிரணாப் முகர்ஜி மற்றும் பா.சிதம்பரம் இருவருக்கும் மன்மோகன் சிங் கூறுகையில்: நான் அயல்நாட்டுப் பயணம் மேற்கொள்ளும் போது இருவரும் டில்லியிலேயே இருந்து மத்திய அரசின் நடவடிக்கைகளைக் கண்காணித்து செயற் படுத்த வேண்டும் என்று கூறியுள்ளார்.

அரசியல் விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு கூட்டம் நடந்தால் அதற்குத் தலைமை தாங்க வேண்டும் என்றும் அவர்களுக்கு உத்தரவிட் டிருக்கிறார். அடுத்த மாதத்தில் பிரான்ஸ், மாலை தீவுகள், இந்தோனேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு அடுத்தடுத்து அவர் சுற்றுப் பயணம் மேற்கொள்வதையடுத்து மத்திய அரசின் முக்கிய முடிவுகளை எடுப்பதற்குப் பொறுப்பானவர்கள் இருக்க வேண்டும் என்பதற்காக இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். (வ)

# கனிமொழியின் பிணை நவ.3 இற்கு ஒத்திவைப்பு



தம்மைப் பிணையில் விடுவிக்குமாறு கனிமொழி தாக்கல் செய்திருந்த மனு தொடர்பான தீர்ப்பு அடுத்த மாதம் 3 ஆம் திகதி வழங்கப்படும் என்று நீதிபதி அறிவித் துள்ளார்.

அவரது பிணை மனு மீதான விசாரணை நேற்று நடைபெற்றது. 2ஜி வழக்கில் விசாரணை முடிந்துவிட்டது. குற்றப்பத்திரிகையும் பதிவுசெய்யப் பட்டுவிட்டது. இதனால் கனிமொழி ஆதாரங்களைக் கலைத்து விடுவார் என்று கூறுவதற்கு இடமில்லை. எனவே அவரைத் தொடர்ந்து காவலில் வைத்திருக்க வேண்டிய தேவை இருக்காது என்று அவரது சட்டத்தரணி வாதிட்டார்.

இதைத்தொடர்ந்து பிற்பகல் 2 மணியளவில் சி.பி.ஐ. தரப்பில் இதுதொடர்பாக பதிலளிக்கப்பட்டது. அதில் கனிமொழிக்கு பிணை வழங்கத் தங்களுக்கு ஆள்சேபம் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

2ஜி வழக்கில் 13 இல் இருந்து 17 ஆவது குற்றவாளி வரை உள்ளவர்களுக்கு பிணை வழங்குவதில் தங்களுக்கு ஆட்சேபம் இல்லை என சி.பி.ஐ. தெரிவித்தது. இந்த 5 பேரில் கலைஞர் ரிவியின் சரத்குமார், சுரீமொரானி, ஆசிப் பல்வா, ராஜிவ் அகர்வால் ஆகியோர் உள்ளனர்.

எனினும் ஷாகித் பல்வா மற்றும் ஆ.ராசாவின் முன்னாள் தனிச்செயலர் ஆர்.கே.சந்தோலியா ஆகியோரின் பிணை மனுக்களுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாகவும் சி.பி.ஐ. குறிப்பிட்டது. கனிமொழிக்கு நேற்று பிணை வழங்கப்படும் என்று தி.மு.க.வினர் எதிர்பார்த்தனர். எனினும் தீர்ப்பை அடுத்த மாதம் 3 ஆம் திகதிக்கு நீதிபதி ஒத்திவைத்ததால் அவர்கள் ஏமாற்றம் அடைந்தனர். தீபாவளிக்கு முன்னதாக அவர் வெளியாகி விடுவார் என்று எதிர்பார்த்திருந்த நிலையில் தீபாவளியை திகார் சிறையிலேயே கனி மொழி கழிக்க வேண்டியதை எண்ணி அவர்கள் மனம் கலங்கினர். (வ)

# தகவல் அறியும் உரிமை சட்டத்துக்கு அதிகாரிகள் அச்சமடைகின்றனர்

## விலாஸ் ராவ் கருத்து

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தால் தங்களுடைய கருத்தை எழுத அரசு அதிகாரிகள் அச்சமடைகின்றனர் என்று மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சர் விலாஸ் ராவ் தேஷ்முக் தெரிவித்தார்.

இது குறித்து அவர் கூறுகையில்:

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தால் இன்றைக்கு அரசு நிர்வாகத்தில் எதுவுமே ரகசியம் இல்லை. அமைச்சரவை முடிவுகள், அதிகாரிகள் தெரிவித்த கருத்துகள் என எல்லாவற்றையும் தகவல் அறியும் சட்டத்தின் கீழ் பெறலாம் என்கிற பொழுது தகவல் அறியும் சட்டத்தை கண்டு அதிகாரிகள் அஞ்சுகின்றனர்.

அரசு கோப்பில் தங்கள் கருத்துக்களை வெளிப்படையாகத் தெரிவித்து வந்த அதிகாரிகள் இன்றைக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் எல்லா ஆவணங்களும் வெளியாவதால் கருத்துக்களை தெரிவிக்க அஞ்சுகிறார்கள். - என்று விலாஸ் ராவ் தேஷ்முக் கூறினார்.

# இந்தியாவில் முதல் முறையாக குழந்தைகளுக்கான நீதிமன்றம்

குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகள், பாலியல் கொடுமைகள் போன்றவற்றை விசாரிப்பதற்காக குழந்தைகள் நீதிமன்றம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் முதல் முதலாக குழந்தைகள் குறித்த வழக்குகளை விசாரிப் பதற்காக குழந்தைகள் நீதிமன்றம் டில்லியில் ஆரம்பிக்கப்பட்டு விசாரணை ஆரம்ப மாகியது. இந்த நீதிமன்றத்தில் கடந்த மூன்று மாதங்களில் 450 இற்கும் மேற்பட்ட வழக்குகள் விசாரிக்கப்பட்டன.

தலைநகர் டில்லியில் பெண் குழந்தைகளுக்கு எதிரான வன்கொடுமைகள் மாநிலத்தின் எங்காவது ஒரு பகுதியில் நிகழ்ந்து கொண்டிருப்பதாகவும், இது நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும் முறைப்பாடுகள் எழுந்தன.

இந்தநிலையில் டி.சி.பி. சி.ஆர் என்ற டில்லி மாநில குழந்தைகள் உரிமை மற்றும் பாதுகாப்பு ஆணையகம் கடந்த 2010 ஆம் ஆண்டில் டில்லி உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்ததையடுத்து, பெண் குழந்தைகளுக்கு எதிரான வன் கொடுமைகள், குற்றங்கள் குறித்து விரைவாக விசாரிக்கவும், குழந்தைகளுக்கு உரிய சட்டப் பாதுகாப்பு வழங்கவும், தனி நீதிமன்றத்தை அமைக்க வேண்டும் எனவும் கூறியிருந்தது.

இந்த வழக்குத் தொடர்பாக நடந்த விசாரணையில் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் குறித்து விசாரிக்க மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் குழந்தைகள் நீதிமன்றம் அமைக்க வேண்டும் என்று உத்தர விட்டது.

இதைத்தொடர்ந்து டில்லி மாநிலத்தில் உள்ள 11 மாவட்டங்களிலும் கடந்த ஜூலை மாதம் குழந்தைகள் நீதிமன்றங்கள் ஆரம்பிக்கப்பட்டன. தற்போது இந்த நீதிமன்றங்களில் 450 இற்கும் மேற்பட்ட வழக்குகள் பதிவாகியுள்ளதாக டி.சி.பி.சி.ஆர் அமைப்பு தெரிவித்துள்ளது. இந்த நீதிமன்றங்கள் மூலம் குழந்தைகள் தொடர்பான வழக்குகளுக்கு விரைவில் தீர்வு கிடைக்கும் என டி.சி.பி. சி.ஆர் அமைப்பின் செயலர் எக்ஸ். கே. மெகதோ கூறினார். (வ)

# ஆலயங்களில் திருட்டுகளை முறியடிக்க பொலிஸாரின் செயற்பாடுகள் திருப்தியில்லை

## சர்வமதப் பேரவையின் ஒன்று கூடலில் விசனம்

யாழ்ப்பாணம், ஒக்.25

பொலிஸார் தமது கடமையைச் சரிவரச் செய்திருந்தால் ஆலயங்களில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்கள் பலவற்றை முறியடித்திருக்கலாம்.

பொலிஸாரின் கண்ணில் படாமல் அவை வெளி மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்க முடியாது. யாழ். நகரில் இடம்பெற்ற யாழ்.மாவட்ட சர்வமதப் பேரவையின் கலந்துரையாடலின் போது இவ்வாறு விசனம் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலின் போது சமயங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நோக்கில் யாழ்.மாவட்ட சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத் தலைவர் சபா வாசுதேவக் குருக்கள், அருள் தந்தை பிரவிதீன் மகேசன், மௌலவி சுபியான், கணபதிக் குருக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்ற ஆலயங்களின் நிர்வாக சபைகளின் பிரதிநிதிகளும் இதில் கலந்து கொண்டு கருத்துக்களைத் தெரிவித்தனர்.

யாழ்.நாக விகாரைக்கு எதிர்ப்பக்கமாகவுள்ள விகாரைப் பீடாதி பதியின் தங்குமிட கட்டடத்தின் இரண்டாம் மாடியில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

அழைப்பு விடுக்கப்பட்டிருந்த நாக விகாரைப் பீடாதிபதி நி.விமலதேரர் இதில் கலந்து கொள்ளவில்லை. உடல் நிலை பாதிக்கப்பட்டிருப்பதன் காரணமாகவே கலந்துரையாடலில் பங்குபற்ற முடியாதுள்ளதாக அவர் அறிவித்தார்.

கலந்துரையாடல் ஆரம்பிக்கும் நேரத்திலேயே பீடாதிபதி இந்த அறிவிப்பை நிகழ்வின் ஏற்பாட்டாளர்களுக்கு வழங்கினார்.

இந்தக் கலந்துரையாடலின் போது தெரிவிக்கப்பட்டதாவது:

இந்து ஆலயங்களின் திருட்டுக்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகிறது. திருட்டுப் போன பொருள் பல இதுவரை பொலிஸாரால் மீட்கப்படவில்லை.

ஆலயத்திருட்டுச் சம்பந்தமான முறைப்பாடுகள் பலவற்றைப் பொலிஸார் முறைப்பாடாக பதிவு செய்ய மறுத்துள்ளனர்.

பெரியளவிலான ஆலய வாகனங்கள், சிற்பங்கள், பொருள்கள் ஆகியன வீதியால்திருடர்களால் கொண்டு செல்லப்படுகின்றன.

ஆனால் அது எப்படி பொலிஸாரின் கண்ணில் படாமல் இருக்கும்.



பொலிஸார் தமது கடமையைச் சரிவர செய்திருந்தால் பல திருட்டுகளை முறியடித்திருக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

பொலிஸாரின் இரவு ரோந்து மிகவும் அவசியமானது. ஆலயங்களின் பாதுகாப்புக்காக இது அவசியம் என்று கூறப்பட்டது.

இதில் யாழ்.மாவட்ட சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தலைவர் சபா வாசுதேவக்குருக்கள் கருத்துக் கூறும் போது:- ஆலயங்களில் இடம்பெற்று வரும் திருட்டுகளை முறியடிக்க சம்பந்தப்பட்ட தரப்பினர்களுடன் கலந்துரையாடி வருகிறது இந்து குருமார் ஒன்றியம்.

ஆலய திருட்டுக்களை முறியடிக்க ஆலய காவலாளி இரவுக் கடமையில் நியமிக்கப்பட வேண்டும். இது மிகவும் அவசியமானது. அத்துடன் பொலிஸாரது ஒத்துழைப்பும் மிகவும் தேவை.

பித்தளைப் பொருள்கள், கலைப் பொருள்கள் முதலியவற்றை யாழ்ப்பாணத்தை விட்டு வெளியே எடுத்துச் செல்வதாயின் கிராம அலுவலரது அல்லது கலாசார உத்தியோகத்தரது சிபார்சுக் கடிதம் அவசியம்.

அது இல்லாதவிடத்து திருடப்பட்ட பொருளாகக் கருதி சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நடைமுறை அமுல்படுத்தப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். (ம-14)

# மலையகத் தொழிலாளரின் தீபாவளி பெரும் சோகத்தில்

தேயிலை உற்பத்தி தொழிற்துறையில் தற்போது மலையகத் தேயிலைத் தோட்டங்களில் வாழும் தோட்டத் தொழிலாளர்கள் கைவிடப்பட்டுள்ள நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கம் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மேலும் கூறுகையில்:-

இன்றைய காலகட்டத்தில் பல மாத காலமாகவே மலையகப் பிரதேசங்களில் நிலவும் சீரற்ற கால நிலையால் தோட்டத் தொழிலாளர் வர்க்கம் வேலையின்றித் துன்பப்படுகிறது.

முன்னர் இந்தத் தொழிலாளர்கள் 18 கிலோவுக்கும் 25 கிலோவுக்கும் இடையிட்ட தேயிலைக் கொழுந்து என்ற இலக்கை நிறைவு செய்து வந்துள்ளனர்.

ஆனால் தற்போது பயிர்ச் செய்கை நிறுவனங்கள் இவர்களுக்கு மாதமொன்றில் 5 அல்லது 6 தினங்களுக்கு மட்டுமே வேலை வழங்குகின்றன.

ஆனால் நாள் முழுவதும் வேலை செய்வதாலும் கூட அரைநாள் என்ற கணக்கிலேயே பெயர் போடப்படுகிறது.

இந்த நிலையால் 75 வீதமான வரவு என்ற இலக்கு முழுமைப்படுத்தப்படாதிருப்பதன் காரணமாக 75 வீத வரவுக்காக வழங்கப்படும் 105 ரூபா என்ற கொடுப்பனவுகூட வழங்கப்படுவதில்லை.

இந்த நிலையில் தீபாவளி முற்பணத்தின் தொகையும் கூட குறைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-22)

ISUZU

DFCC லீசிங்



மிக உன்னதமானதொரு இணைப்பில்

அதி உன்னதமான பல சலுகைகள்

இலங்கையின் ட்ரக் விற்பனையில் முதலிடம் வகிக்கும் இசுசு வண்டிகளின் ஏகமுகவர்களான **சதொச மோட்டர்ஸ் பிஎல்சி** நிறுவனத்துடன், இலங்கையின் முதலாவது மற்றும் முன்னணி அபிவிருத்தி வங்கியான **DFCC வங்கி** இணைந்து, இலகு முறையில் வர்த்தக ட்ரக் வண்டிகளை கொள்வனவு செய்ய விசேட லீசிங் வசதிகளையும், சிறப்புச் சலுகைகளையும் உங்களுக்குப் பெற்றுத்தர காத்திருக்கின்றன.

**SML இடமிருந்து**

- ரூ. 50,000/- வரையான விலைக்கழிவு.
- 06 இலவச சேவைகள். (மூலப்பொருட்களுக்காக மாத்திரம் அறவிடப்படும்)
- 40,000 கி.மீ. அல்லது 02 வருட உத்தரவாதம்.
- என்ஜினுக்கு 100,000 கி.மீ. வரையான உத்தரவாதம். (சதொச மோட்டர்ஸ் பிஎல்சி நிறுவனத்தின் நிர்வகிப்பிலிருக்க வேண்டும்)



**DFCC லீசிங் இடமிருந்து**

- குறைந்தபட்ச தவணைகள்.
- உங்களின் வருமானத்திற்கேற்ற கொடுப்பனவுமுறை.
- இலகுவான காப்புறுதிக் கட்டுப்பாடுகள்.
- DFCCயின் அனைத்து சேவைகளையும் பெறும் வாய்ப்பு.

இச்சலுகை 2011 ஒக்டோபர் 01 முதல் டிசெம்பர் 31 வரை மட்டுமே.

• நிபந்தனைகள் உண்டு.

**SML சதொச மோட்டர்ஸ் பிஎல்சி** (PQ 105)
25, வொக்சோல் வீதி, கொழும்பு - 02. தொ.பே: 011 4943500, 011 2331622, 011 2431568, 011 2432858, 011 4939187 தொலைநகல்: 0114 713663
உடனடி அழைப்புகள்: 0114 714077, 0112 327360,
கபில - 0779 419000 ரஞ்சித் - 0777 354155 சந்தன - 0777 420491
சம்பத் - 0777 420442 ஷங்கர் - 0779 667797
மின்னஞ்சல்: isuzusales@sml.lk இணையதளம்: www.sathosamotorsplc.com

**DFCC வங்கி**
மேலதிக விபரங்களுக்கு : 0112880901/02/03/05/06/07, 0773 060006, 0773 060000
மின்னஞ்சல் : leasing@dfccbank.com
இணையதளம் : www.dfccbank.com
DFCC BANK

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி **இம்மானுவல் புஸ்பராணி குருஸ்**
(வேம்பார்)

மண்ணில்: *18.09.1941* விண்ணில்: *25.09.2011*

" சீவியத்தில் என்னை நேசித்தவர்களே, மரணத்திலும் என்னை மறவாதீர்கள்".

கடந்த (25.09.2011) அன்று மரணமடைந்த எமது தாயாரின் திடீர் மறைவினால் நாம் துயரடைந்திருந்த வேளையில் எமது இல்லம் நாடிவந்து எமக்கு அனுதாபம் தெரிவித்தோருக்கும், நேரிலும் தொலைபேசி மூலமும் எமக்கு ஆறுதல் கூறியோருக்கும் மலர் வளையம் வைத்தும், துண்டுப் பிரசுரம் வெளியிட்டோருக்கும் எமது துயரில் பங்குகொண்ட கொழும்பு லயன்ஸ் கிளப் (Watersmeet) உறுப்பினர்கள் கொழும்பு (Amilex Pvt Ltd ஆகியோருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்த யாவருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்ம இளைப்பாற்றிக்காக நாளை (26.10.2011) புதன்கிழமை காலை 6 மணிக்கு புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

*தகவல்:*
*பி.ஜெ.பர்னான்டோ குடும்பத்தினர்.*

*131, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.*


# துருக்கி பூகம்பத்தில் பலியான 200 பேரின் உடல்கள் மீட்பு

## இடிபாடுகளில் சிக்குண்ட பலர் உயிருக்குப் போராட்டம்

துருக்கியின் வான் மாகாணத்தில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தில் சிக்கி 1000 க்கும் மேற்பட்டோர் பலியாகியிருக்கலாம் என்று அஞ்சப்படுகின்ற நிலையில் இதுவரை இடிபாடுகளில் இருந்து 200 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. தொடர்ந்தும் இராணுவத்தினர் மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

துருக்கி நாட்டின் தென் கிழக்கு பகுதியில் வான்நகர் அருகேயுள்ள தபானில் கிராமத்தை மையமாகக் கொண்டு 7.3 ரிச்டர் அளவில் பூகம்பம் பதிவானது. பூகம்பம் காரணமாக வான் நகர், எர்சிஸ் பகுதிகளில் பல கட்டடங்கள் மற்றும் வீடுகள் முற்றிலும் இடிந்து தரைமட்டமாகின. வான் நகரில் மட் டும் 80 கட்டடங்கள் இடிந்து சேதமடைந்தன.

அங்குள்ள காசிம் காராபகிர் வீதியில் இருந்த 7 அடுக்கு மாடிக்கட்டடம் முற்றிலும் நொறுங்கி விழுந்து தரைமட்டமானது. பூகம்பம் ஏற்பட்ட பகுதிகளில் மொத்தம் 1000 கட்டடங்கள் இடிந்து இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.





பூகம்பத்தில் கட்டடங்கள் இடிந்ததைத் தொடர்ந்து இடிபாடுகளில் சிக்கிப் பலர் பலியாகி உள்ளனர். அவர்களின் உடல்கள் மீட்கப்பட்டு வருகின்றனர.

வான் நகரில் மட்டும் 117 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 1090 பேர் காயம் அடைந்துள்ளனர். இடிபாடுகளில் ஏராளமானவர் கள் சிக்கி உயிருக்குப் போராடி வருகின்றனர். தங்களை காப்பாற்றும்படி அபயக்குரலும் எழுப்புகின்றனர். அவர்களை மீட்கும் பணி தீவிரமாக நடைபெறுகிறது. அதில் ராணுவ வீரர்கள் 500 பேர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பூகம்பம் பற்றிய தகவல் அறிந்ததும் துருக்கி பிரதமர் எர்டோகன் தனது நிகழ்ச்சிகளை ரத்துச் செய்து விட்டு வான் நகருக்கு விரைந்து சென்று மீட்புப் பணிகளை நேரில் பார்வையிட்டு துரிதப்படுத்தினார். காயம் அடைந்தவர்கள் மருத்துவ வசதி உடைய ஹெலிகொப்டர்கள் மூலம் வைத்தியசாலைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். மேலும் பூகம்பம் பாதித்த பகுதிகளில் 2 கூடாரங்களில் தற்காலிக வைத்தியசாலை அமைக்கப்பட்டுள்ளது.

படுகாயம் அடைந்தவர்களுக்கு அங்கு உடனடிச் சிகிச்சை அளிக்கப்பட்டு பின்னர் அவர்கள் வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றனர். (ந)

## கடாபியை தான் கொன்றதாக வாலிபர் பேட்டி

திரிபோலி, ஒக்.25

லிபிய முன்னாள் அதிபர் கடாபியை சுட்டது நான் தான் என பெங்காசியைச் சேர்ந்த புரட்சிப் படை வீரர் சனாத் அல்-சதக் அல் உரேப பெருமையுடன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது;

காயத்துடன் சாக்கடை குழாய்க்குள் பதுங்கியிருந்த கடாபியை நான்தான் பார்த்தேன். உடனே அவரை 2 தடவைகள் துப்பாக்கியால் சுட்டேன். அதில், ஒரு குண்டு அவரது கையில் பாய்ந்தது. மற்றொன்று அவரது தலையில் பாய்ந்தது. இருந்தும் அவர் உடனடியாகச் சாகவில்லை. அரை மணி நேரம் உயிருடன் இருந்தார். பின்னர் சிர்த் நகர வீதியில் அவரைநடத்திஅழைத்துச் சென்ற போதுகுழந்தைகளும், சில பெண்களும் அவரைச் சூழ்ந்தபடி வந்தனர். அதன் போது அவர் தங்கத் துப்பாக்கி வைத்திருந்தார். அவரை பெங்காசி நகருக்கு கொண்டு செல்ல விரும்பினோம். ஆனால் மிஸ்ரதா வீரர்கள் அங்கு கொண்டு சென்று சுட்டுக் கொன்றனர் என்றார். (ந)

## இறந்த பின்னரும் அச்சுறுத்தும் கடாபி

சான் பிரான்சிஸ்கோ , ஒக்.25

லிபிய அதிபர் கடாபி கொல்லப்பட்டது பரபரப்பாகப் பேசப்படும் நிலையில், அவரது புகைப்படத்தோடு கணினிகளை முடக்கச்செய்யும் வைரஸ்கள் சேர்க்கப்பட்டுள்ளதாக, பிரபல கணினிப் பாதுகாப்பு நிறுவனமான சோப்ஸின் தொழில்நுட்ப ஆலோசகர் கிரஹாம் குலுலி தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள செய்தியில், ஈமெயில் மூலம் அனுப்பப்படும் லிபிய அதிபர் கடாபியின் புகைப்படத்தில், கணனியை பாதிக்கக்கூடிய வைரஸ்கள் இருப்பதாகவும், இந்த ஈமெயிலைத் திறந்தால் கணனிச் செயற்பாட்டை முடக்கச்செய்யும் அபாயம் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். இதன் மூலம் கணினியில் உள்ள தகவல்களைத் திருடவும் வாய்ப்புள்ளதாகத் தெரிவித்துள்ளதால், இந்தப் புகைப்படத்தை பற்றி சைபர் கிரைம் அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர். (ந)



ஆஸ்திரேலியா, கான்பெராவில் உள்ள நாடாளுமன்ற அலுவலக வரவேற்பு நிகழ்வில் கலந்துகொண்ட இரண்டாம் எலிசபெத் ராணி(இடது), ஆஸ்திரேலியப் பிரதமர் ஜுலியா கில்லர்ட்(வலது).

## சுதந்திரம் பெற்ற நாடாக லிபியா அறிவிப்பு

லிபியா சுதந்திர நாடாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து புதிய அரசியலமைப்புச் சட்டம் மற்றும் புதிய தலைவரும் அறிவிக்கப்பட உள்ளார் என லிபியப் பிரதமர் முகமது ஜிப்ரில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, லிபியப் பிரதமர் பதவியில் இருந்து முகமது ஜிப்ரில் விலக உள்ளார். இன்னும் அங்கு 8 மாதத்தில் அங்கு தேசிய சபைத் தேர்தல் நடக்கவிருக்கின் றது. அதில் பொது மக்கள் வாக்கு போட்டு தங்கள் பிரதிநிதிகளைதேர்ந் தெடுப்பார்கள் என்றும் தெரிவித்துள்ளார். கடந்த 42 ஆண்டுகளுக்கு பின் லிபிய மக்கள் வாக்களிக்க உள்ளார்கள் எனவும் பிரதமர் தெரிவித்துள்ளார். (ந)

## பாகிஸ்தானுக்கே துணை நிற்போம்

### அதிபர் கர்சாய் பேட்டி



அமெரிக்கா, இந்தியா போன்ற எந்த நாடுகள் பாகிஸ்தான் மீது தாக்குதல் நடத்தினாலும் ஆப்கானிஸ்தான் பாகிஸ்தானுக்கே எப்பொழுதும் துணை நிற்கும் என ஹமீத் கர்சாய் கூறியுள்ளார்.

பாகிஸ்தானிலுள்ள ஜியோ செய்திக்கு பேட்டி அளித்த ஆப்கன் அதிபர் ஹமீத் கர்சாய் மேலும் கூறியதாவது; பாகிஸ்தானுடன் சண்டையிடும் நாடு எதுவாக இருந்தாலும், குறிப்பாக அமெரிக்கா மற்றும் இந்தியாவாக இருந்தாலும் நாங்கள் பாகிஸ்தான் பக்கம் துணை நிற்போம் என்றார். பாகிஸ்தான் மற்றும் அமெரிக்காவுக்கு இடையே நிகழும் பதற்றமான சூழ் நிலைக்கு காரணம் ஹக்கானி பிரச்சினையே.

அமெரிக்கா தாக்குதல் நடத்தும் போது, ஆப்கன் படைகள் பாகிஸ்தானுக்கு துணை நிற்கும் என்றும், பாகிஸ்தானுக்கும், இந்தியாவுக்கும் இடையே போர் நடந்தால் ஆப்கனின் உதவி பாகிஸ்தான் மக்களுக்கே கிடைக்கும் எனவும் கூறினார். (ந)

## துனிஷியாவில் தேர்தல்; 70 வீதமான மக்கள் வாக்களிப்பு

துனிஷியாவில் அரசுக்கு எதிரான அமைதியின்மை ஏற்பட்டு முதல்முறையாக நடைபெற்ற தேர்தலில் சுமார் 70 வீதமான மக்கள் வாக்களித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

புதிய சட்ட வரைபு மற்றும் இடைக் கால அரசை அமைக்கவுள்ள 217 ஆசனங்களைக் கொண்ட சட்ட சபைக்கான பிரதிநிதிகள் இந்தத் தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி பென் அலி பதவி கவிழ்க்கப்பட்டு ஒன்பது மாதங்களின் பின்னர் இந்தத் தேர்தல் நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இஸ்லாமிக் கட்சியான எனாடா இந்த வாக்கெடுப்பில் வெற்றி பெறும் என எதிர்பார்க்கப்படுவதாக அந்த நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அரபு நாடுகளில் டுனிசியாவில் ஏற்பட்ட மிகப்பெரிய மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை அடுத்து பென் அலி கடந்த ஜனவரி மாதம் 14 ஆம் திகதி நாட்டை விட்டு வெளியேறியிருந்தார்.

## இறைச்சிக்கு வெட்டப்படவிருந்த 800 நாய்கள் சீனாவில் மீட்பு!

பீஜிங் , ஒக்.25

சீன இறைச்சிக் கடைகளில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையில் 800க்கும் மேற்பட்ட நாய்களை சீன விலங்குகள் பாதுகாப்பு அமைப்பினர் மீட்டுள்ளனர்.

சீனாவில் நாய் கறி விற்பனை அதிகரித்து வருவதற்கு சீன விலங்குகள் பாதுகாப்பு அமைப்பு கடும் கண்டனம் தெரிவித்து வந்தநிலையில், சிசுவான் மாகாணத்தில் உள்ள ஜிகாங் என்ற நகரில் விலங்குகள் பாதுகாப்பு அமைப்பினர் அதிரடிச் சோதனையில் இறங்கினர். அதன்போது நகரில் உள்ள எல்லா இறைச்சி கடைகளுக்குள் திடீரெனப் புகுந்து,அங்கு இறைச்சிக்காக வெட்டுவதற்கு வைத்திருந்த நாய்களை மீட்டனர். நகர் முழுவதும் இதுபோல் 800 நாய்கள் மீட்கப்பட்டதாக விலங்குகள் அமைப்பினர் தெரிவித்தனர்.

விலங்குகள் அமைப்பினர் ரெய்ட் சோதனை நடத்திய போது, பல கடைக்காரர்கள் ஏராளமான நாய்களை வேறு இடங்களுக்கு கொண்டு சென்று விட்டனர். எனினும், அவற்றை பறிமுதல் செய்த போது இறைச்சிக் கடை உரிமையாளர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து பிரச்சினையில் ஈடுபட்டனர். அவர்களிடம் பேச்சு நடத்திய பின் நஷ்ட ஈடாக 6 லட்சம் ரூபாயை விலங்குகள் பாதுகாப்பு அமைப்பினர் வழங்கியதையடுத்து நாய்களை மீட்டு வந்தனர்.

அந்த நாய்களை பராமரிக்க தேவையான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இதுகுறித்து அவர்கள் கூறுகையில், விலங்குகளை கொல்லக் கூடாது. நாய் கறியை சீனர்கள் இனி சாப்பிடக் கூடாது. இதற்கு வழி செய்யத் தனிச் சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என்றனர். (ந)

## அரபு நாடுகளின் அமைதியின்மை மத்திய கிழக்கு பேச்சை பாதிக்கும்

அரபு நாடுகளில் ஏற்பட்டுள்ள அமைதியின்மை மத்திய கிழக்கு சமாதானப் பேச்சுக்களை பாதிக்கலாம் என டொனி பிளேயர் தெரிவித்துள்ளார். ஜனநாயக ஆதரவு, ஆர்பாட்டங்கள் ஏனைய அரபு நாடுகளிலும் பரவுமாயின் பலஸ்தீனம் மற்றும் இஸ்ரேலுக்கு இடையில் சமாதானத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகளுக்கு அவை நெருக்கடியை ஏற்படுத்தும் எனவும் அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (ந)

# யாழ். மத்திய கல்லூரியை வென்று சென். பற்றிக்ஸ் அணி சம்பியன்


முதலாமிடம் பெற்ற சென் பற்றிக்ஸ் கல்லூரி


இரண்டாமிடம் பெற்ற யாழ். மத்திய கல்லூரி

யாழ்ப்பாணம், ஒக்.25

யாழ். கோட்ட மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 18 வயது பிரிவு அணிகளுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றி பெற்று கோட்ட மட்டச் சம்பியனானது.

நேற்று முன்தினம யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய அணியை எதிர்த்து நாவாந்துறை ஆர்.சி. வித்தியாலய அணி மோதிக் கொண்டது. இதில் இரண்டு அணியினரும் எதுவித கோல்களைப் பெறாததனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

ஆட்டத்தில் வெற்றி தோல்வியைக் காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டு மூன்றாமிடத்தைத் தனதாக்கிக் கொண்டது. (த-23)

# லீக் முறையிலான கூடைப்பந்து பட்டபிளை, பமிலியன்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், ஒக்.25

சர்வதேச லயன்ஸ் கழகம் 301 'பி'யின் அனுசரணையுடன் யாழ். மாவட்டக் கூடைப் பந்தாட்டச் சங்கம் நடத்தும் லீக் முறையிலான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் பெண்களுக்கான ஆட்டங்களில் பட்டபிளை விளையாட்டுக்கழகம், பமிலியன்ஸ் விளையாட்டுக் கழகம் ஆகியன வெற்றி பெற்றுள்ளன.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத்திடலில் இடம் பெற்ற ஆட்டத்தில் முதலில் இடம் பெற்ற ஆட்டத்தில் யாழ். இந்து மகளிர் அணியை எதிர்த்து பட்டபிளை விளையாட்டுக் கழகம் மோதிக் கொண்டது. இதில் பட்டபிளை விளையாட்டுக் கழக அணி 30 :07 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்றது.

மற்றைய ஆட்டத்தில் கே.ஸி. ஸி.ஸி. அணியை எதிர்த்து பமிலியன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

இதில் பமிலியன்ஸ் விளையாட்டுக்கழக அணி 29:17 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. (த-23)

# இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு, ஒக்.25

யாழ்ப்பாணம் கூடைப்பந்தாட்டச் சங்கம் யாழ். மாவட்டக் கூடைப் பந்தாட்ட அணிகளுக்கு இடையே நடத்தும் ஆண்களுக்கான கூடைப் பந்தாட்டப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, கூடைப்பந்தாட்ட மைதானத்தில நடைபெறவுள்ள போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:- யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி எதிர் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி. யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி எதிர் கொக்குவில் இந்துக் கல்லூரி பி.ப. 3மணிக்கு பெண்களுக்கான அரையிறுதி ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. (த-86)

# பற்றிக்ஸ் - ஹென்றிஸ் இன்று மோதல்

யாழ்ப்பாணம், ஒக்.25

சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரிக்கும் இடையிலான 14, 16, 18, 20 வயதுப் பிரிவுகளின் நட்பு ரீதியிலான உதைபந்தாட்டப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (த-23)


யாழ்ப்பாணத்தில் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கான றக்பி விளையாட்டுப் பயிற்சி யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது. இந்த நிகழ்வில் யாழ். மாவட்டப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துரு சிங்க பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார், சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோர் கலந்து கொண்டார்கள். (த-86)

# பலத்த போராட்டத்தின் பின்னர் ஆவரங்கால் இந்து சம்பியன்


முதலிடம் பெற்ற ஆவரங்கால் இந்து வி.க.


இரண்டாமிடம் பெற்ற ஆவரங்கால் மத்தி

வலி.வடக்கு, ஒக்.25

மல்லாகம் கோட்டைக்காடு ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகம் அமரர் ஜெகநாதன் ஞாபகார்த்தமாக யாழ். மாவட்டக் கரபந்தாட்ட அணிகளுக்கு இடையே நடத்திய கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் பலத்த போராட்டத்தின் பின்னர் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.

நேற்று முன்தினம் இரவு மின்னொளியில் இடம் பெற்ற இறுதிப் போட்டியில் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக் கழகமும் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

ஐந்து சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் பலத்த எதிர்ப்பின் மத்தியில் முதல் இரண்டு சுற்றுக்களை ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் முறையே 25:23, 25:20 புள்ளிகள் என்ற அடிப்படையில் வென்றது.

மூன்றாவது சுற்றில் வெற்றி பெற்ற இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்துக்கு இடம் கொடாது விளையாடிய ஆவரங்கால் மத்தி விளையாட்டுக் கழகம் 25:19 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது.

நான்காவது சுற்றை எந்த அணிபெறும் என்ற ரசிகர்களின் ஆரவாரத்தின் மத்தியில் இரு அணிகளும் மோதிக்கொண்ட போதிலும் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் இறுதி நிமிடத்தில் தனது பொறுப் புணர்ந்து விளையாடி 25:19 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது.

ஆட்ட நிறைவில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் 03:01 சுற்று என்ற அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனாகியது.

போட்டியின் நாயகனாக இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ஜ.ஜெனகனும் போட்டியின் தொடர் நாயகனாக மத்தி விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எஸ்.சிவசொரூபனும் தெரிவு செய்யப்பட்டார்கள். (த-86)

# ஜொலிஸ்ரார், சொக்ஸ், கே.கே.எஸ், பற்றீசியன் அணிகள் அரையிறுதியில் மோதுவதற்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஒக்.25

சர்வதேச லயன்ஸ் கழகம் 301 'பி'யின் அனுசரணையுடன் யாழ். மாவட்டக் கூடைப் பந்தாட்டச் சங்கம் நடத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் ஆண்களுக்கான காலிறுதியாட்டத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் சென்றலைட்ஸ் சொக்ஸ் விளையாட்டுக்கழகம், கே.கே.எஸ். விளையாட்டுக் கழகம், பற்றீசியனஸ் விளையாட்டுக் கழகம் ஆகியவை வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றன.

யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் மின் ஒளியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற முதலாவது காலிறுதியாட்டத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.

இதில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 41:37 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

ஞாயிற்றுக்கிழமை மின் ஒளியில் இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் முதலில் இடம் பெற்ற ஆட்டத்தில் கே.கே.எஸ். விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக 'பி' அணி மோதிக் கொண்டது.

இதில் கே.கே.எஸ். விளையாட்டுக்கழக அணி 54:48 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி கொண்டு அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெறது.

இரண்டாவதாக இடம் பெற்ற காலிறுதியாட்டத்தில் சென்றலைட்ஸ் சொக்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் 'புளுஸ்' விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் சென்றலைட்ஸ் சொக்ஸ் விளையாட்டுக்கழக அணி 80:67 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

மூன்றாவதாக இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கே.ஸி. ஸி.ஸி. விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழக அணி 65:60 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி கொண்டு அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (த-23)

# முதல்முறையாக

முதன் முறையாக 'ரி-20' ஆட்டங்களுக்கான தரவரிசைப் பட்டியல் வெளியிடப்பட்டது. அத்துடன் 'ரி-20' ஆட்டத்துக்கான துடுப்பாட்ட, பந்து வீச்சு தரவரிசையும் வெளியிடப்பட்டது. இதில் 'ரி-20' நடப்புச் சம்பியனான இங்கிலாந்து அணி முதலிடத்தை பெற்றுள்ளது. இரண்டாவது இடத்தை இலங்கை அணி பெற்றுள்ளது. அத்துடன் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் இங்கிலாந்தின் இயன் மோர்கனும், பந்து வீச்சில் இலங்கையின் அஜந்த மெண்டிஸும், சகல துறை ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவின் வொட்ஸனும் முதலிடத்தை பிடித்துக் கொண்டுள்ளனர்.

அணிகளுக்கான தரவரிசை

இங்கிலாந்து - 127 புள்ளிகள், இலங்கை - 126 புள்ளிகள், நியூஸிலாந்து - 117 புள்ளிகள், தென்னாபிரிக்கா 113 புள்ளிகள், இந்தியா 112 புள்ளிகள், ஆஸ்திரேலியா 111 புள்ளிகள், பாகிஸ்தான் - 97 புள்ளிகள், மேற்கிந்தியத்தீவுகள் - 89 புள்ளிகள், சிம்பாப்வே - 54 புள்ளிகள்

## 'ரி-20' தரவரிசை



# டெஸ்ட் தரவரிசையில் சங்கா மட்டுமே!

சர்வதேச டெஸ்ட் தரவரிசையில் துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பில் சங்கார மட்டும் முதல் பத்து இடங்களுக்குள் இடம்பிடித்துள்ளார். பந்து வீச்சில் எந்தவொரு இலங்கை வீரரும் இடம்பிடிக்கவில்லை.

சர்வதேச வீரர்களுக்கான தரவரிசையை நேற்று முன்தினம் ஐ.சி.சி வெளியிட்டது.

இதில் டெஸ்ட் தரவரிசையில் துடுப்பாட்டத்தில் கலிஸ் (தென்னாபிரிக்கா) - 883 புள்ளிகள், சங்ககார (இலங்கை) - 852 புள்ளிகள், குக் (இங்கிலாந்து) - 823 புள்ளிகள், பெல் (இங்கிலாந்து) - 822 புள்ளிகள், சச்சின் (இந்தியா) - 814 புள்ளிகள், ஹஸி (ஆர்திரேலியா) - 806 புள்ளிகள், ரொரட் (இங்கிலாந்து) - 776 புள்ளிகள், சந்திரபோல் (மேற்கிந்தியத்தீவுகள்) - 775 புள்ளிகள், பீற்றர்ஸன் (இங்கிலாந்து) - 770 புள்ளிகள், டிராவிட் (இந்தியா) - 762 புள்ளிகள்

பந்து வீச்சில் ஸ்ரெய்ன் (தென்னாபிரிக்கா) - 899 புள்ளிகள், அன்டர்ஸன் (இங்கிலாந்து) - 811 புள்ளிகள், சுவான் (இங்கிலாந்து) - 755 புள்ளிகள், மோர்கல் (தென்னாபிரிக்கா) - 751 புள்ளிகள், புரோட் (இங்கிலாந்து) - 744 புள்ளிகள், சகீர்கான் (இந்தியா) - 713 புள்ளிகள், ஜோன்ஷன் (ஆர்திரேலியா) - 669 புள்ளிகள், சகிப் அல்ஹசன் (பங்களாதேஷ்) - 652 புள்ளிகள், வெற்றோரி (நியூஸிலாந்து) - 623 புள்ளிகள், பிறர்னன் (இங்கிலாந்து) - 623 புள்ளிகள்

# ஆஸியை அடக்கிய ஆபிரிக்கா

தென்னாபிரிக்கா, ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஒரு நாள் ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி 80 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது. கலிஸ் துடுப்பாட்டத்தில் அசத்த மோர்னி மோர்கல் பந்து வீச்சில் கலக்க இந்த வெற்றியை தென்னாபிரிக்க அணி பதிவு செய்தது.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகின்றது ஆஸ்திரேலிய அணி. முதலாவது ஒரு நாள் ஆட்டத்தில் 'டக் வேர்த் லூயிஸ்' முறையில் ஆஸ்திரேலிய அணி வெற்றி பெற்றிருந்தது: இந்த நிலையில் மூன்று ஒரு நாள் ஆட்டங்கள் கொண்ட தொடரில் இரண்டாவது ஒரு நாள் ஆட்டம் நேற்றுமுன்தினம் பேர்த் எலிசபெத்தில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்து பரிமாற்றங்களின் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 303 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. தென்னாபிரிக்க அணி சார்பில் கலிஸ் 76, மில்லர் 59, ஸ்மித் 57, டுமினி 56 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். தென்னாபிரிக்க அணி ஆட்டத்தின் முதலாவது பந்திலேயே அணித் தலைவர் அம்லாவை இழந்த போதும் பின்வரிசை வீரர்களின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் 300 ஓட்டங்களைத் தாண்டியது. பந்து வீச்சில் பொலஞ்சர் 2 இலக்குகளை கைப்பற்றினார்.

பதிலுக்கு கடினமான இலக்கை விரட்டிய ஆஸ்திரேலிய அணிக்கு ஆரம்பம் சிறப்பாக அமைந்த போதும் மத்திய வரிசை வீரர்கள் சிறப்பான ஒத்துழைப்பு வழங்கவில்லை. ஆஸ்திரேலிய அணி சார்பில் வோர்னர் 74, மைக் ஹஸி 37, ஸ்மித் 26 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். இறுதியில் 50 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 223 ஓட்டங்களை மாத்திரமே ஆஸ்திரேலிய அணி பெற்று 80 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. பந்து வீச்சில் மோர்னி மோர்கல் 10 பந்து பரிமாற்றங்கள் பந்து வீசி 22 ஓட்டங்கள் கொடுத்து 4 இலக்குகளை கைப்பற்றினார். ஆட்ட நாயகனாக மோர்கலே தெரிவு செய்யப்பட்டார். இதன் மூலம் மூன்று ஆட்டங்கள் கொண்ட தொடரை இரு அணிகளும் தலா ஒரு ஆட்டங்களில் வெற்றி பெற்று சமநிலையில் உள்ளன.

(15)

# தொடரும் மரணங்கள் உறையும் ரசிகர்கள்

மலேசியாவில் நடந்த 'பைக் ரேஸ்' விபத்தில் இத்தாலி வீரர் சைமன் செல்லி பரிதாபமாக இறந்தார். ஏராளமான ரசிகர்கள் மத்தியில் நடந்த இந்த விபத்து அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மலேசியாவின் செபாங்க் நகரில் மலேசியன் கிராண்ட் பிரிக்ஸ் 'பைக் ரேஸ்' நேற்று முன்தினம் நடந்தது. உலகின் முன்னணி வீரர்கள் பலர் பங்கேற்றனர். போட்டியை காண ஏராளமான ரசிகர்கள் அரங்கத்தில் கூடியிருந்தனர்.

21 சுற்றுகள் கொண்ட இந்தப் போட்டி விறுவிறுப்புடன் தொடங்கியது. வீரர்கள் அசுர வேகத்தில் பைக்கில் பறந்தனர். இரண்டாவது சுற்றின் போது இத்தாலி வீரரான ஹொண்டா அணியின் சைமன் செல்லி, யமஹா அணியின் காலின் எட்வர்ட்ஸ், வலன்டினோ ரோஸி ஆகியோரை முந்திச் செல்ல முயன்றார்.

அப்போது எதிர்பாராத விதமாக பைக்குகள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டன. இதில் கீழே விழுந்த சைமன் செல்லி மீது பைக் ஏறி ஹெல்மட் உடைந்தது. தலை, கழுத்து பகுதியில் பலத்த காயமடைந்தார். இதே போல் எட்வர்சும் கீழே விழுந்து படுகாயமடைந்தார்.

இதை நேரில் பார்த்த ரசிகர்களும், தொலைக்காட்சியில் 'ரேசை' பார்த்துக் கொண்டிருந்தவர்களும் அதிர்ச்சியில் உறைந்தனர். உடனடியாக போட்டி ரத்து செய்யப்பட்டு 2 வீரர்களும் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். அங்கு சிகிச்சை பலனின்றி சைமன் செல்லி இறந்தார். எட்வர்ட்ஸ் தொடர்ந்து சிகிச்சை பெறுகிறார். 24 வயதாகும் சைமன் செல்லி 2008 ஆம் ஆண்டு உலக சம்பியன் பட்டத்தை வென்றவர். இதற்கு முன் கடந்த 2003 இல் ஜப்பான் கிராண்ட் பிரிக்ஸ் ரேசில் டைஜிரோ கடோவும், கடந்த ஆண்டு சோயா தோமி ஜவாவும் விபத்தில் சிக்கிய பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஞாயிறன்று அமெரிக்க லொஸ் வேகாசில் உலகக் கிண்ண கார் பந்தயத்தில் நடந்த விபத்தில் வெல்டன் பலியானதைத் தொடர்ந்து, அடுத்த ஞாயிறே இதைப்போன்றதொரு துயரச் சம்பவம் நடைபெற்றிருப்பது மோட்டார் பந்தய ரசிகர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

(15)

# வெற்றிகள் தொடரும்

## -டோனி

நான்காவது ஒரு நாள் ஆட்டத்தில் இந்திய அணி, இங்கிலாந்து அணியை 6 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி கொண்டது. இந்த வெற்றி குறித்து அணித்தலைவர் டோனி கூறுகையில், 4 ஆட்டங்களில் வென்றது போலவே கடைசி ஆட்டத்திலும் வெல்ல முயற்சி செய்வோம். நான்காவது ஒரு நாள் ஆட்டத்தில் ஆரம்பத்தில் இங்கிலாந்து வேகமாக ஓட்டங்களைக் குவித்ததால் 270 ஓட்டங்களைக் கடப்பார்கள் என்று எதிர்பார்த்தோம்.

ஆனால் சுழற்பந்து வீச்சாளர்கள் அருமையாக செயல்பட்டு குறைந்த ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்தி விட்டனர். ஆரோன் அதிவேகமாக பந்துவீசுகிறார். தொடர்ச்சியாக இதேபோன்று வீசினால் துடுப்பாட்டக்காரர்களுக்கு நெருக்கடி கொடுக்கலாம். களத்தடுப்பிலும் அணி நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது எமது அணி. அத்துடன் இனிமேல் நான் துடுப்பாட்டத்தில் எனது இயல்பான ஆட்டத்தை வெளிப்படுத்த முடிவு செய்துள்ளேன் என்றார்.

# இறுதியாட்டம் எமது ஆட்டம்

## -குக்

இங்கிலாந்து அணித் தலைவர் குக் கூறுகையில், இந்திய ஆடுகளங்களில் ஜெயிக்க வேண்டுமென்றால் 280 ஓட்டங்களுக்கு மேலாவது எடுக்க வேண்டும். நாங்கள் எங்கள் திறமைக்கு ஏற்றபடி முழுமையாக ஆடவில்லை. கடைசி ஆட்டத்திலாவது வெற்றி பெற முயற்சிப்போம் என்றார்.

கடைசி மற்றும் 5 ஆவது ஒருநாள் ஆட்டம் கொல்கத்தா ஈடன்கார்டன் மைதானத்தில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நடக்கிறது.

(15)



தீபாவளி சிறப்பு விற்பனை

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது தீபத்திருநாள் நல் வாழ்த்துக்கள்.

புதிதாக அறிமுகப்படுத்துகின்றோம்

**SHARP DIGITAL PHOTOCOPIER - AR - 5618**

இப்பொழுது மிகவும் விரைவானது.



- 1 நிமிடத்திற்கு 18 பிரதிகள்
- A3 Colour Scanning
- 64 mb Memory

01 வருடம் /50000 பிரதிகளுக்கு உத்தரவாதம்.
01 வருட இலவச விற்பனைக்குப் பிந்திய சேவை.

Three in one : Colour Scanning / Printing/ Photocopy

இப்பொழுது
தீபாவளியை முன்னிட்டு
99000/= + Vat மட்டுமே

அத்துடன் தீபாவளி பரிசாக



Fax இயந்திரம்
அல்லது
Olympus Digital Camera (12 mp)



ஒன்றினை இலவசமாகப் பெற்றிடுங்கள்.

இச்சலுகை November 30 வரை மட்டுமே

தொடர்புகளுக்கு :
BROWN & COMPANY PLC - IBS இன்
அங்கீகரிக்கப்பட்ட ஏக முகவர்

**DIGITAL ELECTRONICS**

62/16, Stanley Road, Jaffna. ☎: 021 222 4040
No. 05, Dipot Road, Kilinochchi. ☎: 021 228 5678
ஜனா - 0772078636, ரவின் - 0776623824, கிஷோ - 0772299924

# துருக்கி பூகம்பத்தால் இலங்கையருக்கு பாதிப்பில்லை

துருக்கியில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட பூகம்பத்தினால் இலங்கையர் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை யென்று துருக்கிக்கான இலங்கையின் கொன்ஸியூலர் திருமதி பாரதி விஜேரட்ன நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

பூகம்பத்தினால் ஆயிரக்கணக்கான உயிர்கள் துருக்கியில் பலியாகியிருக்கலாமென்று அஞ்சப்படுகிறது. இந்த நிலையில், இதில் இலங்கையர்கள் எவரும் பாதிக்கப்பட்டுள்ளனரா என்று கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பாரதி விஜேரட்ன மேலும் கூறியவை வருமாறு:-

பூகம்பத்தினால் இலங்கையர்கள் எவரும் பாதிக்கப்படவில்லை. இதுவரை எமக்கு அப்படி எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. துருக்கியில் இலங்கையர்கள் மிகக் குறைவான வீதத்திலேயே இருக்கின்றனர். இஸ்தான்புல் நகருக்கு சுற்றுலா மேற்கொள்வதற்கு இலங்கையர்கள் செல்வது வழமை. அப்படி எவரும் சென்றதாகவும் தகவல் இல்லை. எவ்வாறாயினும் இது விடயத்தில் நாம் அக்கறையாகச் செயற்பட்டு இலங்கையர்கள் எவரும் இருக்கின்றார்களா என்பது பற்றிப் பார்த்து வருகிறோம்.

- இவ்வாறு தெரிவித்தார் கொன்ஸியூலர் திருமதி பாரதி விஜேரட்ன.

**அலுவலகம் வாடகைக்கு**

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதியில் 18 X 70 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட தனிவழிப்பாதையுடன் சகல வசதிகளுடன் கூடிய முதலாம் மாடிக்கடைத் தொகுதி வாடகைக்குண்டு.

தொடர்பு: 0212221165
0777222176

**மலிவு விற்பனை**
(தீபாவளியை முன்னிட்டு)
ரவுசர், சேட், லேடிஸ் ரீசேட், பஞ்சாபி, சோட்ஸ், சாறி வகைகள்
இன்றே முந்துங்கள்
**கணேசன் சென்ரர்,**
கே.கே.எஸ். வீதி, இணுவில்.

## மரண அறிவித்தல்

**திருமதி ராசரத்தினம் மகேஸ்வரி** (கனடா அன்ரி)



கோண்டாவிலைப்பிறப்பிடமாகவும், உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ராசரத்தினம் மகேஸ்வரி (கனடா அன்ரி) (22.10.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ராசரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்- இரத்தினம்மாவின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி- அன்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், மஞ்சுளா(கனடா), செல்வி (லண்டன்), சிறிகாந்தன்(கண்ணன்- பிரான்ஸ்), ரஞ்சினி(ஜேர்மனி), சுகந்தினி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், சண்முகநாதன்(கனடா), தேவஜெகன்(லண்டன்), சுகந்தினி (பிரான்ஸ்), துரைராசா (ஜேர்மனி), உதயசங்கர்(கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், சத்தியன், சயந்தன், குகப்பிரியா, ஸ்ரெப்பான், வனிசா, ஜெனிசா, திரோபன், திவாகன், யகீபன், ஜெனனி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஓவியா, மாயா, விஸ்ணு, அர்ச்சனா, கார்த்திகா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ராசரத்தினம் (சிங்கப்பூர்), பூபாலசிங்கம், காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை மற்றும் அன்னலட்சுமி, சிறிஸ்கந்தராசா, பாலசுப்பிரமணியம் (கனடா), செல்வராணி(நோர்வே) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.10.2011) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இளங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'மஞ்சுளா இல்லம்', தம்பசிட்டி வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்.

## அந்தியேட்டி அழைப்பு



அமரர்
**கணபதிப்பிள்ளை கந்தவனம்** (ஆசாரியார்)

29.09.2011 இல் காலமான அமரர். கணபதிப்பிள்ளை கந்தவனம் ஆசாரியார் அவர்களின் இறுதி நிகழ்வுகளில் பங்கு கொண்டு உதவிகள் புரிந்தோருக்கும், ஆறுதல் தந்தோருக்கும், அனுதாபச் செய்திகள் வழங்கியோருக்கும் எமது மனம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, நாளை [26.10.2011] புதன்கிழமை காலை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதியம் அல்வாய் கொல்லரியன் சீமா கண்ணகை அம்மன் கோயிலில்[மாதாங்கோயில்] நடைபெறும் ஆத்ம சாந்திப் பூசையிலும் மதிய உணவிலும் பங்கு கொள்ளுமாறு பணி வன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

அழைப்பிதழ் கிடைக்காதோர் இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறோம்.

கலையகம்,
சின்னாலடி, அல்வாய்.

குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு
26 * 12 * 1966



உதிர்வு
27 * 09 * 2011

திருமதி
**யோகரத்தினம் ஜெயராணி**
திதி:அமாவாசை

27.09.2011 ஆம் திகதியன்று அமரத்துவம் அடைந்த எமது குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்து இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் எமக்கு பல வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு நாளை மறுதினம் [27.10.2011] வியாழக்கிழமை காலை ஊறணி அந்தியேட்டி மடத்தில் இடம்பெறும் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து மதியம் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நெடியகாடு,
வல்வெட்டித்துறை.

குடும்பத்தினர்.

**AR ANGELINE TECHNOLOGY**




CLOSED CIRCUIT TELE VISION

HOTLINE :- 0784861293, 0770759874

நீங்கள் உங்கள் கடைகளையோ / வீடுகளையோ உலகின் எந்த பாகத்தில் இருந்தாலும் அவதானிக்கும் தன்மை. எம்மிடமிருந்து நம்பகத்தன்மையுடையதாக பெற்றுத்தரப்படும்.
அனுபவம் மிக்க தொழில்நுட்பவியலாளர்கள் மூலம் சிறந்த முறையில் ஒருங்கிணைப்புகளை பெற்றுத் தரப்படும்

S. RENUSHAN
VARIYAPULAM, CHUNNAKAM. E-mail :- renusans@yahoo.com

## அதிபர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 25

இணுவில் மத்திய கல்லூரியில் இன்று இடம் பெறவிருந்த அதிபர்களுக்கான கலந்துரை யாடல் நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு நடைபெறும் என்று சுன்னாகம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் அறிவித்துள்ளார். (ஒ-323)

## கூட்டமைப்பை...

(முதலாம் பக்கத் தொடச்சி)

செயலர் மற்றும் அமெரிக்க வெளியுறவுத்துறை அதிகாரிகளைச் சந்திக்கவுள்ளது எனச் செய்திகள் வெளியாகியுள்ள நிலையில் நேற்று அமைச்சர் இது பற்றிக் கருத்து வெளியிட்டபோதே மேற்கண்ட குற்றச்சாட்டைத் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்ற சாதாரண ஓர் அரசியல் கட்சியை பான் கீ-மூன் சந்திப்பாரானால், ஐக்கிய நாடுகள் சபையின் வரலாற்றில் மோசமான முன்னுதாரணத்தை பான் கீ-மூன் ஏற்படுத்தப் போகின்றார் என்பது நிதர்சனமென்றும் அமைச்சர் கூறினார். (உ)

## தீபாவளி...

(முதலாம் பக்கத் தொடச்சி)

கடைக்காரர் வீதியில் (நடைபாதையில்)

உடுபுடைவைகளைப் போட்டு கூவிக்கூவி அழைத்து வியாபாரம் செய்யவும் நேரிட்டது.

இந்த முறை வியாபார வீழ்ச்சிக்கு காரணம் என்ன?

இது குறித்து யாழ்நகர் வர்த்தகர்கள் கூறியதாவது:-

தென்னிலங்கையில் இருந்து படையெடுத்து வந்துள்ள வியாபாரிகள் மற்றும் இந்திய வியாபாரிகள் உடுபுடைவைகள் மட்டுமன்றி பல்வேறு பொருள்களையும் வீடு வீடாகச் சென்று விற்று வருகின்றனர். அவர்கள் கடன் அடிப்படையிலும் கூடபொருள்களை வழங்குகின்றனர். இதனால் மக்கள் நகரங்களுக்கு வராமல் தங்கள் தங்கள் வீடுகளிலேயே தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்கின்றனர். அதுமட்டமின்றி தற்போது கிராமப் புறங்களிலும் புதிது புதிதாக கடைகள் திறக்கப்பட்டு விட்டன.

அதுமட்டுமின்றி இம்முறை வெளிநாடுகளில் இருந்து யாழ்.குடாநாட்டுக்கு புலம்பெயர்ந்த உறவுகள் ஏராளமானோர் வந்து திரும்பியுள்ளனர். அவர்கள் தாராளமாகப் பொருள்களை தமது உறவினர்களுக்கு வழங்கிச் சென்றுள்ளனர்.

இவை எல்லாவற்றை விடவும் நடைபாதை வியாபாரிகளின் ஆதிக்கமும் அதிகரித்துள்ளது. நகரப்புறங்களில் மட்டுமன்றி கிராமப் புறங்களிலும் இவர்களின் வியாபாரம் வியாபித்திருக்கிறது. இதுவும் எமது வர்த்தக வீழ்ச்சிக்கு காரணமாகும்.

இந்த முறை தீபாவளி வியாபாரம் ஏறக்குறைய 70% வீதத்தால் வீழ்ச்சி கண்டுள்ளது என்கின்றனர் யாழ்.நகர வர்த்தகர்கள். (ஒ-313)

## ஜனாதிபதியும் அவரது...

(முதலாம் பக்கத் தொடச்சி)

கான நடவடிக்கைகள் - முன்னெடுப்புகள் ஆகியவை குறித்து இத்தூ தரகக் கடிதத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கத் தூதரகப் பிரதித் தலைமை அதிகாரி வெலரிக் பௌல ரால் 2009ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17ஆம் திகதி எழுதப்பட்டு, 'இரகசியம்' எனத் தலைப்பிடப்பட்டு இக்கடிதம் அனுப்பப்பட் டுள்ளது.

இக்கடிதத்தில் 'குறிப்பு' என அமெரிக்கத் தூதுவர் பெற்றீஸியா ஏ. புடினிஸ் உப தலைப்பு இட்டு தமது கருத்தையும் குறிப்பிட் டுள்ளார்: "ஈகோவொவ் (அமைப்பு) இதில் அநேக உள்ளூர் வர்த்தக தலைவர்களுக்கும் நல்ல தொடர்பு உண்டு. இலங்கையின் தனித் துவமான பொருளாதார முடிவால் இவர்கள் பயனடைவார்கள்" என தூதுவர் தெரிவித்துள்ளார்.

கடந்தகால நடவடிக்கை குறித்தும் தூதுவர் பெற்றீஸியா இதில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:-

முன்னர் முடிவு எடுப்பது தொடர்பான பூர்வாங்க சம்பிரதாயபூர்வமான நடைமுறை நிதியமைச்சால் அறிவிக்கப்படும். இதில் வரிசைக்கிர மமான அமைச்சுகளினதும், தனியார்துறையினதும் ஆலோசனைக ளும் இதற்குப் பெறப்படும்.

இலங்கை அரசிடம் நூற்றுக்கு மேற்பட்ட அமைச்சுகள் உள்ளன. அநேக அமைச்சர்கள் முழுமையாக அரசியல் காரணங்களுக்காகவே அலுவலகங்களைக் கொண்டிருக்கிறார்கள். ஓர் அமைச்சு பொருளாதாரக் கொள்கையை மாற்றத் திட்டமிடுமானால், அது முதன்முதலாக நிதியமைச்சில் இயங்கும் தேசிய திட்ட ஆணைக்குழுவின் ஒப்புதலைப் பெறவேண்டும்.

ஒப்புதல் அளிக்கப்பட்டதும், அது தொடர்பாக நிதியமைச்சிடம் பூர்வாங்க வேண்டுகோள் விடுக்கப்படும். எனினும், இப்போது ஜனாதிபதி ராஜபக்ஷ தாமே நிதியமைச்சர்போல செயல்படுகிறார். நிதிச் செயலாளர் ஜயசுந்தரவின் செல்வாக்கு ஜனாதிபதியை எட்டும் நிலையில் இல்லை. ஜனாதிபதியே நிதியமைச்சை நடத்துகிறார். தாம் பதவிக்கு வந்ததுமுதல் அவரே பொருளாதாரக்கொள்கையை மாற்றியுள்ளார்.

மற்றவர்கள் குறிப்பாக மத்திய வங்கி ஆளுநர் கப்ரேல், ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோர் இந்த வட்டத்துக்குள் அடங்குவர்.

- இவ்வாறு பெற்றீஸியா தமது குறிப்பில் குறிப்பிட்டுள்ளார். (சி)

## காணிப்பதிவை...

(முதலாம் பக்கத் தொடச்சி)

பிரதிநிதிகள், பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் இராணுவ அதிகாரிகள் ஆகியோர் அடங்குவர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். எனவே காணிகள் சம்பந்தமான பிரச்சி னைகளுக்குத் தீர்வு பெற்றுக் கொடுக்கும் அதிகாரம் நீதிமன்றங்களையேச் சாரும் என்ற போதிலும் காணிப் பதிவாளர் நாயகம் இவ்வாறு சுற்றறிக்கை மூலம் அறிவித் துள்ளமை சட்டத்திற்கு முரண் என்பதையும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் நீதிமன்றங்களின் அதிகா ரங்களில் ஒன்றான காணிகள் சம்பந்தமான பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுக் கொடுக் கும் அதிகாரத்தை தான் விரும்பிய தரப் பினருக்கு காணிப் பதிவாளர் நாயகத்துக்கு வழங்க முடியாது என சுமந்திரன் சுட்டிக் காட்டி உள்ளார்.

மாறாக தனக்குக் கீழுள்ள நிர்வாகத்தைப் பார்க்கும் அதிகாரம் மாத்திரமே காணிப் பதிவாளர் நாயகத்துக்கு இருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த மனுவில் பிரதிவாதிகளாக காணிப் பதிவாளர் நாயகம் உட்பட சிலர் குறிப்பிட் டுள்ளனர். அதேவேளை, தனது சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.கனகஈஸ்வரன், விரான் குரே, பவானி பொன்சேகா, ஜெகான் குணதிலக்க ஆகியோரை குறிப்பிட்டிருக்கி றார். (உ)

## பிரிட்டிஷ்...

(முதலாம் பக்கத் தொடச்சி)

இதுவே முதல் தடவை. இதனால் இந்தச் சந்திப்பு முக்கியத்துவம் பெற்றுள்ளது என அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ள னர்.

இந்தச் சந்திப்பின்போது, இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவரும் நல்லிணக்க செயற்பாடுகள், புனர்வாழ்வு நடவடிக்கை, மீள்குடியேற்றம் உட்பட பல்வேறு விட யங்கள் தொடர்பாக ஜனாதிபதி பிரிட்டிஷ் பிரதமருக்கு விளக்கமளிப்பார் என எதிர் பார்க்கப்படுகின்றது.

அதேவேளை, அரசியல் தீர்வு விடயம் தொடர்பாக அங்கு கருத்துப் பரிமாற்றம் இடம்பெறவுள்ளது. அத்துடன், இலங்கை விவகாரங்கள் தொடர்பாக பிரிட்டிஷ் பிரதமர் தமது தரப்பு நியாயங்களை வெளிப்ப டுத்துவார் என அந்நாட்டு இராஜதந்திரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சுயா தீன சர்வதேச விசாரணை மூலமும் நியாய மானதொரு தீர்வு கிட்டும் என வலியுறுத் திவரும் பிரிட்டிஷ், ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையை வரவேற்றுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறானதொரு நிலையிலேயே இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ-சி)

## நல்லிணக்க..

(முதலாம் பக்கத் தொடச்சி)

தரப்பினர்களிடையே சாட்சியங்களைத் திரட்டியது.

வடக்கு, கிழக்கு உட்பட்ட நாட்டின் சில முக்கிய பிரதேசங்களுக்கு நேரடியாக விஜயம் செய்த ஆணைக்குழுவினர் நேரடியாகவும், எழுத்துமூலமாகவும் மக்களிடம் சாட்சியங்களைத் திரட்டினர். அத்துடன் மாவட்டத்துக்குப் பொறுப்பான முக்கிய அதிகாரிகளிடமும் சாட்சியங்களைப் பெற்றுக்கொண்டனர்.

குறிப்பாக வடக்கு, கிழக்குக்கு இந்தக் குழு சென்றபோது மக்கள் அலைபோல் திரண்டு கண்ணீர்மல்க சாட்சியங்களை வழங்கி யிருந்தனர் அப்போது போதியளவு நேரமின்மையால் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களிடம் எழுத்துமூலமே சாட்சியங்களைப் பதிவுசெய்தது ஆணைக்குழு.

இதன்போது ஒருசில முக்கிய அதிகாரிகளிடம் மூடிய அறைக்குள் நல்லிணக்க ஆணைக்குழு இரகசியமாக சாட்சியம் திரட்டியது என்பதும் குறிப்பிடத்தக்கது.

மலையகப் பகுதிகளுக்கு விஜயம்செய்த குழுவினர் அங்கு மக்களிடம் சாட்சியம் திரட்டவில்லை. முக்கிய சில பிரமுகர்களிடம் சாட்சியங்களைத் திரட்டினர். அரசியல் பிரமுகர்களின் வேண்டு கோளுக்கிணங்கவே ஆணைக்குழு மலையகம் சென்றது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு 18 மாதங்களாகப் பல்வேறு தரப்பினர்களிடம் இருந்து சாட் சியம் திரட்டிய ஆணைக்குழு கடந்த ஏப்ரல் மாதத்துடன் பொதுமக்களிடம் சாட்சியம் பெறும் நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டுவந்தது.

அதேவேளை, ஆறுமாதங்களுக்கு முன்னரே நல்லிணக்க ஆணைக்குழு இறுதி அறிக்கையைச் சமர்ப்பிக்கவேண்டும் எனத் திகதி குறிப் பிடப்பட்டிருந்தது.

எனினும், நல்லிணக்க ஆணைக்குழுவினரின் விசேட வேண்டுகோ ளுக்கிணங்க ஆணைக்குழுவின் காலம் மேலும் 6 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னிலையில் அமைச்சர்கள், அரச அதிபர்கள், கிழக்கு மாகாண முதலமைச்சர் ஆகியோர் சாட்சியம் அளித்தபோதும், முக்கிய சில பிரமுகர்கள் சாட்சியம் வழங்கவில்லை.

குறிப்பாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் ஆகியோர் குழுவின் அழைப்பை நிராகரித்தனர்.

அத்துடன், சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் உட்பட மூன்று சர்வதேச அமைப்புகள் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையைக் கூட்டாக நிராகரித்தன என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

இதேவேளை, நல்லிணக்க ஆணைக்குழுவின் நடவடிக்கை தொடர் பில் பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளன. இந்த ஆணைக்குழு ஒரு கண்துடைப்பு நாடகத்தை அரங்கேற்றுகின்றது போன்ற குற்றச்சாட் டுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

அதுமட்டுமின்றி, சர்வதேச மன்னிப்புச்சபை அண்மையில் வெளி யிட்ட விசேட அறிக்கையொன்றில் நல்லிணக்க ஆணைக்குழு மீது சரமாரியாகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

சர்வதேச மன்னிப்புச்சபையின் குற்றச்சாட்டுகளுக்குத் தாம் பதிலளிக்கப்போவதில்லை என்றும், அறிக்கை வெளியிடமுன்னர் விமர்சிப்பது நாகரிகமற்ற செயல் என்றும் பதிலடி கொடுத்தனர்.

இலங்கை அரசுக்கு எதிராக சர்வதேச அழுத்தங்கள் அதிகரித் துவரும் நிலையில் சர்வதேச சமூகம் தொடுக்கும் கேள்விக்கணைக ளுக்கு நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையில் தக்கபதில் உண்டு என இலங்கை அரசு கூறிவருகின்றது.சர்வதேசத்தின் எதிர்பார்ப்பு, பரவலாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் மற்றும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதி வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுவரும் நிலையிலேயே ஆணைக்குழுவின் அறிக்கை வெளியாகின்றது. இந்த அறிக்கையே இலங்கையில் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் என அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த அறிக்கையில் யுத்தத்தின்போது முப்படையினர், பாதுகாப்புத் தரப்பினர் நடந்துகொண்ட விதம் உட்படப் பல்வேறு விடயங்கள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன என்றும், பாதுகாப்புத் தரப்பினர் மீது விமர்சனங்கள் பல முன்வைக்கப்பட்டுள்ளன என்றும் நம்பகரமாகத் தெரியவருகின்றது.

அதேவேளை, இன்னும் இரண்டு வாரங்களில் வெளியாகும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை அடுத்தவருடம் மார்ச் மாதம் நடைபெறவுள்ள 19 ஆவது மனித உரிமைப் பேரவைக் கூட்டத் தொடருக்கு அனுப்பிவைப்பதற்கு இலங்கை அரசு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது எனத் தெரியவருகிறது.

பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஆஸ்திரேலியா சென்றுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இலங்கை திரும் பியதும் நல்லிணக்க ஆணைக்குழுவின் தலைவர், ஜனாதிபதியிடம் அறிக்கையைக் கையளிப்பார் என்றும் கூறப்படுகிறது.

## மரண அறிவித்தல்

### பசுபதி நகுலேஸ்வரி

கல்வயல், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக்கொண்ட பசுபதி நகுலேஸ்வரி (ஆசிரியை,யா/கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயம், சாவகச்சேரி) நேற்று (24.10.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் பசுபதி மற்றும் அன்னலட்சுமி தம்பதியரின் அன்புமகளும், வேல்முருகன், இராஜேஸ்வரி, கேதீஸ்வரன் (சோபா நிறுவனம்), கனகேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.10.2011) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப 2மணி அளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

கல்வயல்,
சங்கக்கடை அருகில், சாவகச்சேரி.

## ஜனாதி...

(முதலாம் பக்கத் தொடச்சி)

பல இதில் உள்ள டங்குகின்றன.

ஜனாதிபதியின் பாரியார் சிரந்தி ராஜ பக்ஷ, வெளிவிவ கார அமைச்சர் பேரா சிரியர் ஜி.எல்.பீரிஸ், விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந் தானந்த அளுத் கமகே, வெளிவிவ கார அமைச்சர் நியோ மல் பெரேரா, சஜின் வாஸ் குணவர்தன எம்.பி., ஜனாதிபதி யின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகி யோரும் ஜனா திபதியுடன் சென் றுள்ளனர். (உ-சி)


## மு/ மயில்வாகனம் தமிழ் வித்தியாலயம்

### தரம் 5 புலமைப் பரிசில் பாராட்டு விழா

காலம்:- 25 10 2011 பி.ப 1 மணி



சித்தியடைந்த மாணவர்களின் விவரம்:-

1. பாலசிங்கம் அஜிர்தன் - 176 புள்ளி, 2. மரியநாயகம் அனிற்றாஜினி - 160 புள்ளி,
3. சிவசண்முகன் பிரணவராஜ் - 151 புள்ளி, 4. ஜெயநாதன் நிவேதன் - 148 புள்ளி

11 மாணவர்கள் 100 புள்ளிக்கு மேல் பெற்றுள்ளனர். இம் மாணவர்களையும் வழிப்படுத்திய ஆசிரியர்களையும் வாழ்த்தி நிற்கின்றோம்.

கல்விச் சமூகம், மு/ மயில்வாகனம் தமிழ் வித்தியாலயம்.

# வெள்ளவத்தையில் நேற்று ரயில் மோதி ஒருவர் பலி

கொழும்பு, ஒக்.25

கொழும்பு வெள்ளவத்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடலோர வெவர்செட் வீதியில் ரயில் கடவையைக் கடக்க முற்பட்ட நபர் ரயிலில் மோதி பலியானார்.

இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் 11.15 மணியளவில் இடம்பெற்றது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

வவுனியாவிலிருந்து அளுத்கம நோக்கிச் சென்றுகொண்டிருந்த ரயிலுடனேயே குறித்த நபர் மோதி உயிரிழந்துள்ளார். இவ்வாறு உயிரிழந்தவர் ரந்தாவான பிரதேசத்தைச் சேர்ந்த லக்ஷ்மன் பெரேரா (வயது - 46) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

வெள்ளவத்தைப் பொலிஸார் இதுகுறித்த மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(சி)




உங்கள் மழலைகளை எம்மிடம் ஒப்படையுங்கள். அவர்கள் ஆங்கில அறிவில் உறுதியான தெளிவான அடித்தளத்தை நாம் இடத் தயாராகவுள்ளோம்.

அதற்காக பிரபல நிபுணர்களால் குழந்தைகள் உளவியலுக்குட்பட்டுத் தயாரிக்கப்பட்ட

Tky Kids - 07

ஏழு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான அடிப்படை ஆங்கிலக் கற்கைநெறி - 05 மாதகாலம்

**உள்ளடக்கங்கள்**

- ஆங்கில எழுத்துக்களை உறுப்பமைய எழுதப் பழக்கல்
- சொல் பிரயோகம், வசனம் அமைத்தல், கட்டுரை யாக்கம்.
- இலக்கண வேதனையின்றி பேச்சு ஆங்கிலமும் விளங்கிக் கொள்ளலும்.
- பாடல்கள், கதைகள், ஆங்கிலப் பத்திரிகைகள்.

**ஆரம்பம்: 29.10.2011 சனி காலை 8 மணி**

இரண்டு பிரிவுகளாக 50 மாணவர்களுக்கு மட்டும் அனுமதி, எனவே பதிவுகளை உறுதிப்படுத்துங்கள்.

**திசைகாட்டி**

முன்மாதிரியான ஆலோசனை நிறுவனம்,
37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
[யாழ்.நகரிலிருந்து கஸ்தூரியார் வீதியூடாக வருகையில்யாழ். இந்துக் கல்லூரி மைதானம் கடந்த உடன் வலது புறமாக வரும் ஒழுங்கை]
☎ 021 4914527



**காணவில்லை**

அல்சேசன் இனத்தைச் சேர்ந்த ஜேர்மன் சப்பேட் (கறுப்பு மண்நிறம்) சுமார் 1 வயது நிரம்பிய நாய்க்குட்டி குமரக்கோட்டம், கோண்டாவில் எனும் பகுதியில் காணவில்லை. கண்டுபிடித்து தருபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
077 2209527, 0750404144


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



20, செம்மணி வீதி, நல்லூர்.

*25.10.2011* செவ்வாய்க்கிழமை (இன்று) கொழும்பு சுகததாஸ உள்ளரங்கில் QURNTITY SURVEYOR (கணிய அளவையாளர்) பட்டம் பெறும்

**செல்வன் யதீஸ்வரன் அரிகரன்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
மாமா குடும்பத்தினர்
திரு-முரளீதரன்.

## மரண அறிவித்தல்

### குமாரசாமி அரசரட்ணம்



மயிலிட்டி, பெரியநாட்டு தேவன் துறையைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய், லோட்டன் வீதியைப் வசிப்பிடமாகவும் கொண்ட மயிலிட்டி சிவசுப்பிரமணிய பேக்கரி உரிமையாளர் குமாரசாமியின் மகன் அரசரட்ணம் நேற்று (24.10.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

ஜெயா பேக்கரி,
லோட்டன் றோட்,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.


THE COLLEGE OF CHEMISTRY
Day Class

சனி / ஞாயிறு } 9.30 - 11.30 செவ்வாய் / புதன் } 3.00 - 4.30

Dias B.sc (HONS) Spl in Che.
32, Palam Road, Kantharmadam, Jaffna



**ஆரம்பமாகின்றது!**

எல்லாப் பாடங்களுக்குமான
B.A வகுப்புக்கள்
(பேராதனைப் பல்கலைக்கழகம்)
**ஆரம்பம்: 29.10.2011 சனி**
BEACON
வெலிங்டன் சந்தியடி - யாழ்.நகர்.



**கல்சியம் நீக்கி**

உங்கள் வீடுகளில் காணப்படும் *PVC Tank* குகள், குழாய்கள் மற்றும் பிளாஸ்ரிக் பாத்திரங்கள் மாபிள்களில் பிடித்திருக்கும் கல்சியத்தை இலகுவாக நீக்க கேட்டுவாங்குங்கள் *Duroh* கல்சியம் நீக்கி.

*Duroh* இன் மற்றைய உற்பத்திகளையும் பெற்றுக்கொள்ளலாம்

DUROH
- Calcium Remover
- Bike Wash
- Toilet bowl Cleaner
- Car Wash
- Tile Cleaner
- P( )nol
- Dish Wash
- Glass Cleaner

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

AHIE ZER SUPPLIERS
இல. 289, பிறவுண் வீதி, கலட்டிச் சந்தி, யாழ்ப்பாணம்.



**அறுபதாவது அகவையில்**



திருவாளர்
**குணரத்தினம் சிவபாலன்**

கடந்த 16 வருடங்களாக பாடசாலைகள் வேலைகள் பகுதியில் பொறியியலாளராக கடமையாற்றி யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் பௌதீகவளத் தேவையினைப் பூர்த்தி செய்து பாடசாலைகள் கல்விச் சேவையை திறம்பட மேற்கொள்ள அர்ப்பணிப்புடன் அளப்பரிய சேவையினை வழங்கி 24.10.2011 அன்று தனது 60 ஆவது வயதில் ஓய்வு பெறும் பொறியியலாளர் திரு. குணரத்தினம் சிவபாலன் அவர்கள் சகல சிறப்புகளுடன் நீடூழிகாலம் வாழ வாழ்த்துகின்றோம்.

Turbo Group
Civil Engineering Construction
Thavasikulam, kodikamam.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.10.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.